[illegible]

[illegible]
[illegible]

T.D.R. 3372.
RR No. 43-4-1870

O-,87MIK
M70
116619

உ

கடவுட்டுணை.

# கான்சாயபுசண்டை

என்னும்

# கான்மகாராஜன்சண்டை.

இஃது,

[illegible] தமிழ்ப்புலவர்

வேதகிரிமுதலியாரவர்கள்

குமாரர்

ஆறுமுகமுதலியாரவர்களால்

பரிசோதித்து

அ. வீராசாமிநாயுடு

அவர்களால்

தமது சர்வதுரைநிதி யந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

REGISTERED, COPY, RIGHT.

௧௮௭௦ ஆகஸ்டுமீ.

காபி கா.

116619

O-,87M K
M70

உ

கடவுள் துணை.

# கான்சாய்புசண்டை.

விருத்தம்.

சீர்வளர் மதுரை தன்னிற் சிறக்கவே செங்கோலோச்சிப்
பார்வளர [illegible]க்போன்ற பாகவி[illegible] புவிமெச்சும்
கார்வள[illegible] பிரபுடைக் கான்சாய்பு கதையைப்பாடத்
தார்வளர் கூடல்மேவுந் தந்திபொற்பதங்காப்பாம்.

தாம்தனதந்த நானு — தன
தனனம்தனதந்த நாதந்தநானு *

[illegible]முடையால்விருதிலங்க — ஜன்னலி
மதயானைவளர்த்தெடுத்த வரிவேங்கைக்கூட்டி *
[illegible]டமிடுவோர்கள்குலகொலன் — வெற்றி
விசையாலிக்குலம் விளங்கவருதீரன் *

[illegible]ஜூரகபட்டையாளன் — நல்ல
நடனமிடுபரிநகுலதுடிநிபுணகொடியான் *
மதனதுரைசானுகதையாட — எனக்கு
வரந்தரவேணுமடிமதுரை[illegible]ட்சி *

கள்ளனாக்கருவறுத்ததீரன் — நல்ல
கனமானமதுரைநகராண்டிடுஞ்சூரன் *
உழக்கிளிசானுகதைபடிக்க — நாளும்
உலகம்தழைக்கவேணும் விக்நதீர்சாய்பு *

படைவீரன்கானுகதைபாட — சேனை
பாக்கியம்நீகொட்டிபாண்டியன்மகளே
கடல்சூழும்புவியெல்லாம்விளங்க — மதுரைக்
மிழினுற்கழறவேறினந்தேன்

பிறந்ததுப [illegible] னு — காலை
பிள்ளை [illegible] த்துவளர்த்தான் [illegible]
சிறந்தவெள்ளைக் [illegible] ட்டிலில் — காறு
சிராய்மூன்றனாவருஷம்பிள்ளையாய்வளர்ந்தான்

அவனைமோசஞ்செய்யநினைத்தான் — எம்
அப்போதேதூரத்திவிட்டான் மூனாவிடவெள்ளைக்காரன்
அவனைவிட்டுத்தட்டுகெட்டுத்தெறித்து — காணவ
அன்பானபிரட்டனிடம்பிள்ளைபோற்சேர்ந்தான்

பிரட்டனிடம்பிள்ளைபோல்வளர்ந்து — நல்ல
புலிக்குட்டிகான்சாயபுபெரியவனுமானான்
மிரட்டுமொழிபாஷைகளும்படித்து — நல்ல
வீரன்மம்முதலி நபாபுதுரையிடத்தில்

தண்டலிலேசேவகமாயிருந்து — காறு
தைரியமாய்சேவகஞ்செய்துவருநாளில்
மன்னர்வீகன்மனதுமிகமகிழ்ந்து — அப்போ
வழிச்சாரி ஆயுதத்தொழில் கொடுத்தார் நபாபு

வழிச்சாரி ஆயுதத்தொழிலெடுத்து — நல்ல
மம்முதலிசாயபுக்குப்பணங்கட்டிவந்து
வழிச்சாரிசேவகத்தைவிட்டு — காணவ
வாங்கினான்சிப்பாயி ஆடுதலிதனை

ஆடுதலிசிப்பாயி ஆகி — அதில்
ஆறேழுமாதமாய்த்திரிந்துவருநாளில்



[illegible]டுநாயக்கருத்தியோகங்கொடுத்தார் — கானன்
நிலையாகப்பதினேழுமாதமதிலிருந்து

நாயக்கருத்தியோகத்தைவிட்டு — கானன்
நலமான அவல்தாருத்தியோகமெடுத்து
மக்காசன்னிலதுகாலந்திரிந்து — அப்போ
திறமையாய்யதைவிட்டுசமேதாருமானான்

சமர்பொருதும்சமேதாராயிருந்து — காறு
நளக்குநிரையிருந்தற்குச் சுபேதாருமானான்
சுபேதாருத்தியோகமெடுத்து — அப்போ
சுந்தரமாய்ச்சேவகஞ்செய்துவருநாளில்

[illegible] போரம்பூர்தனிலே — இருந்து
சுந்தராயப்பட்டசாயபுவந்திறங்கிவிட்டான்
இக்கலாம்வெல்லகூச்சலாக — அங்கே
செஞ்சிக்கெல்லாம்நெருங்கியிருக்கும்வேளையிலே

பசப்பாசப்பறந்தமலைமேலே — அப்போ
படைகூட்டிப்புதுச்சேரிவெள்ளைக்காரதுரைகள்
[illegible]ருடன்பறக்கிமலையிறங்க — அதை
மூதண்டநபாபுகாதருங்கேட்டு

மூசியார்சாங்கிவெள்ளைக்காரன் — பெரிய
மூசவாவிதுரைசன்னல்கேமலைபழைத்து
மூசியாப்பரும்பெரியபிரட்டன் — நல்ல
மூடிமன்னன்நீர்மேல் நெருப்பையுமறைத்து

சீரானநானாசின்னபிரட்டன் — இவர்களை
சீக்கிரநபாபுதுரைகூட்டிவரச்சொல்லி
ஆர்க்காட்டுநூப்புவோமென்று — அப்போ
அதிவீரன்மம்முதலிநபாபுதுரைகேட்டார்

சன்னதுரைகம்சல்கூடிப்பேசி அப்போ
தட்டமதனன்கான்சாய்பைவரவழைக்கச்சொல்லி
தன்னிகரில்லாததுரைபிரட்டன் பார்த்து
தைரியமாய்க்கானுதனக்கேதுசொல்வானும்

வாட்டாநீகான்சாய்புதுரையே பறங்கி
மலைக்கோட்டைநாளைப்பிடிப்பையேயானால்
நீட்டாததிசைமதுரைதனக்கு உன்னை
நிச்சமாகக்கும்தானுய்வைக்கிறேனென்று

அன்னேரமுறுதியாய்ச்சொல்ல கானன்
அப்போதேகோட்டைவிட்டுவெளியிலேவந்து
கர்னல்பட்டாளம்பனிரண்டு நல்ல
கல்கட்டர்பட்டாளம்பிர்க்கட்டுரண்டு

ஐஞ்னூறுகுதிரைமுதல்நடத்தி அப்போ
யாளிமுகபீறங்கியிருப்துநடத்தி
முன்னேறுமுடிமன்னர்நடக்க நல்ல
முனைவீரன்பிரட்டனிடபட்டாளஞ்சூழ

துடிகொண்டுரிஜிமெண்டுநடக்க கோடி
சோல்தார்கருஞ்சட்டைக்காரர்புடைசூழ
கொடிகொண்டபானையமும்நடக்க அப்போ
கோஷ்டமிட்டுமுல்லார்பாளையஞ்சூழ

கெடிகொண்டுதம்பூரடிக்க நல்
கெர்ச்சனையாயாறுபுள்ளாக்குழலூத
முடிவேந்தன்கான்சாய்புதுரையும் தம்பூ
முழக்கியேபாளையத்தைநடத்தினனப்போ

ஜூர்க்காடுவீதியுந்தாண்டி கானன்
அடர்ந்தேறிவேலூர்விசலூருந்தாண்டி



திருக்கழுக்குன்றமெல்லூருந்தாண்டி அப்போ
சேனுதிபதிபறங்கிமலைக்கோட்டைவெளியில்

பறங்கிமலைமேற்பாரிசத்தில் கானு
பட்டாளமத்தனையுமணியாய்நிறுத்தி
இறங்கியைந்துநாழிகைக்குள்ளே அப்போ
பேற்றினன்மோர்ச்சாவி மேல்பீறங்கி

கருமருந்தையோட்டுச்சேர்த்திடித்து துரிலே
கனமானசஞ்சலிகைக்காகப்போட்டு
நருமிரும்புக்குண்டுவெடிகுண்டு கறுப்புச்
சட்டைபோட்டேயிடித்துத்தீர்த்திட்டான்பலித்தா

குடுடுதேகாரிடிமேற்போல கானன்
கொளுத்தினன்பீறங்கிசொல்லக்கூடாது
சமர்முகத்திலக்கினியைப்போலே குண்டு
தான்பார்த்தவிடமெல்லாமோடுதேநெருக்கி

மழைமாரிபொழிந்திடுதேகுண்டு அதிர்ந்து
வானங்குமுறுதேபீறங்கிவேட்டு
தனைசூழ்ந்தபறங்கிமலைக்கோட்டை வரிக்
கல்லெல்லாந்தூளாய்ப்பறக்குதேகுண்டால்

கோட்டைதனில்முகப்பாருமேறிப் பார்த்துக்
கொத்தளந்தன்னிலேசற்றுமுகில்போலே
வேட்டாயிரம்பலித்தாதீர்த்தான் குண்டு
மேலாடிக்கானுதுரைபாளையத்தைச்சாட

விட்டுத்துரைகானுபார்த்து இன்றைக்
கெப்படியுங்கோட்டைபிடியாமல்விட்டேனென்று
விறிட்டுக்குதிரைகள்கனைக்க அப்போ
வேந்தனுங்கான்சாய்புதீர்த்திட்டான்பலித்தா

மண்டிவரக்கண்டந்தசாய்பு குண்டை
வாரியேயிறைத்தான்மழைமாரிபோலே *
அண்டியேதுரைகானுசாய்பு குண்டு
அஞ்சாமல்வரக்கண்டுநெஞ்சம்பதைத்து *
ஏழுபீரங்கிதலைகீழாய் நிறுத்தி
ஏராளமாய்ச்சல்லிவாரியதிற்போட்டு *
முழுகியக்கினிமாரிபோலே வைத்து
முழக்கினுன்குமுகுமெனபீரங்கிவேட்டு *
மேலாடிப்பாளையம்நெரிக்க கானு
விழிசிவந்துசாராயம்பிப்பாயைத்திறந்து *
காலாள்கள்சோல்தார்படைக்கு அப்போ
கண்டபடிகொடுத்திட்டானெவ்வொருகிளாசு *
சாராயவெறிகொண்டுசனங்கள் நிற்க
தாங்காமல்நடவென்றுசாத்தினுன்பிரம்பால் *
பூராயமாய்ப்பட்டாளத்தைநடத்தி கானன்
புகழ்பறங்கிமலைக்கோட்டை மதிளோரம்வந்து *
ஏணிமரமெழுநூறுசத்தி சனத்தை
யேற்றியேபிரம்பாலேசாற்றினுன்கானன் *
அனியாயமாய்சிப்பாய்களேற முசுபர்
அக்கினிபோல்கண்சிவந்து கொப்பறைதன்னில் *
மூவாயிரந்தலாமியங்காய்ச்சி அப்போ
முழுயிருப்புக்காண்டியால்சிப்பாய்கள்மேலே *
காவலர்கள்வாரியிறைத்திட்டார் அதைக்
கண்டவுடன்சிப்பாய்கள் தலைகீழாய்விழுந்து *
நெளிந்தோடச்சோல்தார்சினந்து அதட்டி
நெறுநெறென்றடர்ந்தேறிக்கோட்டைமேற்கொண்டு *
முறித்துப்பாராமற்கோட்டையின்மேல் நின்று
மூன்றுடவித்தாதீர்த்து ஆறுதலையாக *



ஏறியேகோட்டைக்குள்குதித்தார் அப்போ
சிப்பாய்கள்பட்டாளம்பின்றொடர்ந்தேறி *
ஏறியேகோட்டைக்குட்குதித்து வந்து
எதிரிட்டமுசுபர்கைப்பிடியாய்ப்பிடித்து *
முசுபர்தனைப்பறங்கிமலைக்கோட்டை தன்னில்
முதல்வேட்டுபட்டாவால்வீசினபின்கானன் *
வசுப்பாகத்தைநறுக்குவைத்து பாளையத்தை
வளைத்துப்போய்த்தக்கோலம்பேராம்பூர்பிடித்து *
நெல்லூர்சிராப்பளியும்பிடித்து கானு
நேராகஆர்க்காடுவீதிகளில்வந்து *
மல்லாருஆர்க்காடுதன்னில் பறைச்சி
மாசுநவைக்கன்னுலேகண்டானேகானன் *
மாசாவைக்கண்டுமயலாகி நல்ல
மதனதுரைகான்சாய்புஆள்விட்டுப்பேசி *
மாசாவைக்கல்யாணஞ்செய்தான் அப்போ
மதுராபுரிக்கோட்டைக்குவந்துதடாயேகம் *
இரும்பினுன்சூர்காட்டுவெளியில் கானன்
செயங்கொண்டுவரக்கண்டு சிரானதுரைமார் *
விரும்பியேசந்தோஷமாய் துரைமார்
வீரனமதுரைக்கு ராஜாதானென்றுசொன்னர் *
அதுசேதியர்க்காருஞ்சொல்ல அப்போ
அதிவீரன்மம்முதலி நபாபுதுரைசொல்வான் *
சதுர்மகலைதுரைபெரியபிரட்டா தான்
தயவாகவொருசேதிசொல்லுகிறேன்கேளு *
குதம்தான்கலகமொருபக்கம் பிரட்டா
கூடுசாய்புகலகமோசொல்லக்கூடாது *
சூர்மமாய்மயலாடிக்கள்ளர் பயமும்
மந்திமெய்யர்கலகமுஞ்சொல்லப்போகாது *

மறவர்குடிபெருத்ததந்தத்தேசம்
மதுரைக்கனுப்பினால்மோசம்வருமென்றான்
திறமிகும்துரைபெரியபிரட்டன்
தேவடியிலேயிருந்தேதுசொல்லலுற்றான்
பனிரண்டுவருஷங்களாச்சு
பாண்டியன்பதிசீமைதன்னரசுவிட்டு
இனிநமதுகானுதனையனுப்பி
யெல்லாமடக்கியொருகுடைக்கீழ்நிறுத்தி
வடக்கேவந்தபணஞ்சேர்நம்படியாய்
மதுரைக்கனுப்பினால்சமாகுமென்றான்
திட்டமாகமம்முதலிசாய்பு
சிந்தைதனிலெண்ணியாலோசனைபண்ணி
புவனமெல்லாம்புகழ்பெரியபிரட்டா
புலிக்குட்டிநபாபுநான்சொல்லுகிறேன்கேளு
இவனைமதுரைக்கனுப்பிவைத்தால்
யெதிராளியாவானேதிரிச்சிநாப்பளிக்கு
கானனையனுப்பவேண்டாமென்றார்
கர்னல்துரைபிரட்டன்நபாபைப்பார்த்து
நான்வளர்த்தபிள்ளையந்தக்கானன்
நம்மோடெதிர்த்தவன்சண்டைக்குவந்தால்
எண்ணியெட்டுநாளைக்குள்ளாக
யெரித்துநான்மதுராபுரிபிடித்திடுவேனென்றான்
புண்ணியன்நபாபுதுரைபார்த்து
புத்திக்குச்சரியானபடியென்றுசொல்லி
கானுதனைப்பக்கத்திலழைத்து
கனமாகத்தாம்பூலங்கையிற்கொடுத்து
நானும்உனையனுப்புகிறேன்தெற்கே
கண்டகஞ்செய்யாதேயென்றார்நபாபு

அந்த
*
நபாபு
அந்தப்
*
சீமை
*
இவனை
*
அப்பே
*
நல்ல
*
நானை
*
அப்போ
*
சாய்பு
*
நெருப்பா
பிரட்டாவு.
*
நபாபு
எனக்கு



கானனுமனதுமகிழ்ந்தெய்த
கனபிரியமாகவேயேது சொல்வானும்
காயிதங்கைதனிலே கொடுத்து
காரியங்கண்ணாகப்பார்த்துக்கச்சொல்லி
நேயமுடன்நடமதுரைக்கென்று
நிசவுறுதியாய்ச்சொல்லிஅரண்மனைபோய்ச்சேர்ந்தான்
சேர்ந்தவுடன்கானுதுரைதானும்
திடவுறுதிசொன்னபின்வெளியிலேவந்து
மாசாலைக்காடியின்மேலேற்றி
மருங்கில்நெருங்கிவரக் குதிரைமேலேறி
ஆசாரவாசல்வழிதாண்டி
அழகானசென்னைபுரி கோட்டைவெளிதாண்டி
திருச்சிராப்பள்ளிக்கோட்டைதாண்டி
மணப்பாறைமங்கராம் விராலிமலைதாண்டி
வரிசையாய்மணப்பாறைகடந்து
மலைதாண்டிநம்மன் குரிச்சியிலிறங்கி
நம்மன்குரிச்சிப்பூச்சேயனையழைத்து
ராஜாதிபதியவனுக் கேதுசொல்வானும்
கமையாகஉனதுபெருஞ்சேனை
கள்ளர்பயமேதாரா கடுவழிதன்னில்
இராப்பகலாய்ப் பயம்வருதா
இவ்விடந்தன்னில் களவு நடந்தாதேயானால்
நாய்ப்பாகநீயிருக்கிறதேது
தவிடுபொடியாக்கிரணாளியாயடித்து
எவனெவனிருந்தாலும்பார்ப்பான்
எழுமலைக்கப்பாலே பிரட்டுபேசுகிறது
அவனைபயப்படுத்திவழிபதனம்
அதட்டிவலுப்பேசி நடத்திட்டானப்போ
துவரங்குரிச்சியுந்தாண்டி
கோசிக்குரிச்சியெனும் நத்தம்வந்துசேர்ந்து
பத்தத்துவிக்கையனையழைத்து
நலமானவொருசேதி திடமாகச்சொல்வான்
கள்ளர்பயமிக்காட்டில்மெத்த
கனமானநபாபுதுரைசொன்னாரப்பா

பிரட்டன்
*
சாமி
*
பிரட்டன்
*
பிரட்டன்
*
சேனை.
*
நல்ல
*
கானு
*
தோகை
*
கானு
*
தன்னில்
*
இனிமேல்
*
எல்லாந்
*
உன்னை
*
என்று
*
உயர்
*
கானு
*
வென்று
*

எள்ளளவுபாதைவழிதனிலே லவுண்டி
இனிமேலும்பாதையிலேகள்ளர்பயமானல் *
எட்டுநாளையில்கச்சைகட்டி உன்னை
ஏலேலோதூக்கிலேபோட்டிடுவேன்கள்ளர *
மட்டுள்ளவழிப்பாதைபதனம் என்று
மன்னவன்வருகிருன்திசைமதுரைநோக்கி *
அழகர்மலைக்கொம்பையுந்தாண்டி நல்ல
அழகானதேனூர்மைதானவெளிதாண்டி *
தளம்பெரிய நால்சேனைகூழ நல்ல
சவுர்யமுடனேதல்லாகுள மதிலிறங்கி *
கொடிமுரசுதம்பூரடிக்க நல்ல
கோட்டமிடுதனதுவகை பட்டாளஞ்சூழ *
துடியாகவான்முகட்டிர நல்ல
தோகையர்கள் நடனமிட வெண்கவரிவீச *
கும்பினிமுரசுவெள்ளைக்காரர் தளமும்
கூட்டிமதுராபுரியில் ஒயிலாகச்சேர்ந்தான் *
இப்புவியெலாஞ்செவிடு டவே பீரங்கி
இருபத்தொருவேட்டு தீர்த்தானகர்தன்னில் *
கோடைகாலத்திடிகள் பாலே வைத்துக்
கொளுத்தினன்பீரங்கி சால்லக்கூடாது *
வாடைமலர்மதுரை நகர் தன்னில் வாழும்
மதிகூடுசாய்பவன் ஏறிட்டுப்பார்த்து *
பேசியினி நகர்போச்சுதென்று தளப்
பெருக்குடனேதிருச்சிருப்பளி கோட்டை சேர்ந்தான் *
மதயானைதுரைகானுசாய்பு கோட்டை
மதுராபுரியலங்கமீது நின்றுபார்த்தான் *
சுதையானமதுராபுரிக்கோட்டை தன்னில்
சூரமும்வீரியமுஞ்சொல்லமுடியாது *
தேங்காய்த்தண்ணீரலைமோதும் துய்ய
சிறுமல்லிப்பூச்சொரியுந் திசைமதுரைக்கோட்டை *
மாங்காய்காய்த்துகுலையுந்திருஞ்சோலை நல்ல
மங்கையர்கள்பந்தடிக்கு மணிமதுரைவீதி *
வெள்ளானைவிளையாடுமதுரை நல்ல
வெண்கதலிக்குலை நெருங்கு மிகமதுரைக்கோட்டை



விள்ளமுர்தஞ்சொரியுந்திசைமதுரை நீண்ட
வீதிகளெல்லாங்கதம்ப வாசமதுவீசும் *
மந்தாரைமுல்லையி நவாட்சி செண்பக
மலர்சொரிந்துதே நொழுகுமணிமதுரைக்கோட்டை *
நந்தாதிமணிமேடைவீதி நல்ல
நவமணிகள்குவித்திருக்கும்நல்மதுரைக்கோட்டை *
வாழைகுலைசாய்த்திடுமதுரை நகரில்
மந்திகள்பிலாக்கனியை மத்தளங்கொட்டும் *
தாழைதனில்மயில்த்தோகையாடும் வண்டு
தான்கீதம்பாடிமலர் வாசத்தைத்தேடும் *
எழுபத்திரண்டுகொத்தளமாம் கிணற்றில்
எழிலானகயல்குதித்துத்திரிந்துவிளையாடும் *
வழுதிசேரசிசயங்களைனத்தும் வாயால்
வழுத்தமுடியாதுமன மகிழ்ந்துபார்த்திருந்தான் *
இருந்தொருகான்சாய்புநீலன் நல்ல
இயல்பாகப்பின்னுமவனேதுசெய்வானும் *
நானூறுபொன்கையில்கொடுத்து அந்த
நாழியில்மீனாட்சிக்குச் சிறப்புசெய்யச்செல்லி *
பானுமதிசூடுமீனம்பாள் பாதம்
பணிந்துசொக்கேசரையும்வலமாகவந்து *
கர்த்தாக்கள்வதிருக்குமேடை அந்தக்
கருங்கல்லுச்சவுக்கையிலே ஒயிலாகச்சாய்ந்து *
மீனாட்சிகிருபைகளினலே நல்ல
வெங்கலக்கதவுதன்னைப் பார்த்தவனெடுத்து *
தீரனெனும்கான்சாய்பு தானுதான் அதிலே
வெகுகோடிதிரவியமிருக்கயனைத்தெடுத்து *
விஸ்தார அரண்மனையுங்கட்டி அதிலே
மேல்வீடுமாளிகையுந்தானுண்டுபண்ணி *
அரண்மனையில்மகிழ்வாகவிருந்து பின்னும்
ஆறேழுநாள்பொறுத்துயோசனைகள்செய்து *
பிறமலையின்மேல்ச்சாரியென்று கானு
பேசியைந்துமணிவேளை பயணமென்றுசொன்னன் *
சொல்லியேபாளையத்தைநடத்திச் சென்று
சூழவேபிறமலைநாட்டாரைவளைத்து *

வில்லியருச்சுனன்போலே பார்த்த
விடமெல்லாம்பிணக்காடாய்வெட்டியிழுத்தெறிந்து *
அடங்காதபிறமலை நாட்டாரை வளைத்து
ஆறுபொதிதலைவெட்டியடக்கினான்காணும் *
ஒடுங்காதமயிலாடிக்கள்ளர் தன்னை
ஊருக்குபிருபேனாக்கீர்த்தியாய்வைத்து *
வெட்டிகொண்டு கூடமூட அடித்து காணும்
வழிமீதில்பதின்மூன்று,வாரகனையெறிந்தான் *
எட்டியதைப்பார்க்கமுடியாது உதிலே
ஈயெறும்புமொய்க்காமலிருந்ததட்டாணமும் *
ஈனையானுமருகில்நெருங்காது நல்ல
கருக்குருவியதின்பேரிலிருக்கமுடியாது *
ஒருநாளறுத்தபிணமெல்லாம் காணும்
ஒன்பதுநாள்வரைக்குமுலர்த்தியேபோட்டான் *
கட்டாமலேயடித்துவிட்டால் கட்டிச்
கருக்குருவிமாடுமேச்சவரலாச்சுமதுரை *
கட்டேதுகாவலறியார்கள் தேசந்
கறந்தபால்வெளிவைத்தால் காக்கமறுகாது *
மாசாரேலாணையிட்டபேர்க்கு அந்த
மறியவிலேதின்றவர்க்கு வெந்துமதிகள்கொடுப்பார் *
கூசாமலாணைமீறினோரை பிடித்துக்
கொண்டுவந்தேழுபேரைத் தூக்கிலேபோட்டான் *
வருகையிலேகும்தாமினன்றுவந்தான் அந்த
மதுரைக்குவந்தபின்பு ராஜாவுமானான் *
இருகையினும்பணமேந்திக்கொண்டு காட்டி
விசைந்துவழிநடக்கவே யிருந்தரசுசெய்தான் *
இரட்டப்பநாய்க்கன்வணங்க நல்ல
இருசப்பனாய்க்கனுங்கண்டுசந்திக்க *
கட்டபொம்மனாய்க்கனும்வணங்க அந்தக்
களக்காட்டூர்வன்னியன் கண்டுசந்திக்க *
சாத்தூருநாய்க்கன்வணங்க நல்ல
சன்னப்பநாய்க்கனுஞ் சொற்படிகேழ்க்க *
சேத்தூருமுடிமன்னன்வணங்க நல்ல
சிவகிரிவன்னியன் கண்டுசந்திக்க



தலைவெட்டியம்மையன்வணங்க நல்ல
தனுவேந்தன்கச்சைகட்டித் தாமைகன்வணங்க *
வலையபட்டிக்காளையன்வணங்க அந்த
வடக்காத்தான்புலித்தேவன் சொற்படிகேழ்க்க *
தும்பிச்சிநாய்க்கன்வணங்க நல்ல
துடிவளருங்கலங்காத கண்டனும்வணங்க *
ஒன்பதூர்க்கூளையன்வணங்க மதி
யூகியெனும்அப்பாஜி கவண்டனும்வணங்க *
காளுதமலையாளத்துராஜன் எழு
காராளைகொடுத்தனுப்பிக் கப்பமுங்கட்ட *
நாளுதவிருபாட்சிவணங்க நல்ல
நலங்கொண்டஅனுமந்துசொற்படிகேழ்க்க *
ரத்தத்துலிங்கையன்வணங்க நல்ல
நமன்குறிச்சிப்பூச்சேயன் கண்டுசந்திக்க *
முத்தையன்மூப்பன்வணங்க நாளு
முனைகொடுத்ததென்மலை வன்னியன்வணங்க *
இணங்காதவுத்தமன்வணங்க இப்படி
ஏழுவருஷமிதிலிருந்தரசுஆண்டேன் *
வணங்காதபேரெல்லாம்வணங்க அந்த
மறவருடதளகர்த்தன்வணங்கவரவில்லை *
அடிக்கிறேன்மறவன்மேல்ச்சாரி நானே
பிடிக்கிறேன்திருப்பூவனக்கோட்டையென்றுசொல்லி *
எழுத்தாணிகையிலேபிடித்து காணும்
இயல்பாகவக்கணையாயெழுதுகிறானப்போ *
முடிமன்னுசேதுபதிதளவா நல்ல
முனைவீரதாமோதரபிள்ளையேகேளு *
அரோபாய்தாமோதரம்பிள்ளை உன்னுடைய
அசையாதபள்ளிமடைகொடியைவிடுபாவி *
திருப்பூவனம்விட்டுவிடவேண்டும் உன்னுடைய
செல்வமுள்ளபாத்திபனூர்விட்டுவிடவேண்டும் *
திருப்பூவனம்விட்டுவிட்டாயானால் உன்னுடைய
சிவகங்கைமேல்சத்திபெடுக்கிறதேயில்லை *
திருப்பூவனம்கொடுக்காமற்போனால் நல்ல
சிவகங்கைமேல்சாரிவருவேன்டாவெல்று *

வகைவிப்ரமாகவேயெழுதி — அப்போ
பங்காருநாய்க்கன்வசமனுப்பிவிட்டான் *
வருகிறான்மணலூருதாண்டி — அந்த
வகையானதிருப்பூவனக்கோவலூர்தாண்டி *
சிங்காரமாகவேநடந்து — நல்ல
சிவகிரிபொன்னுக்குளமதுகடந்து *
சிவகங்கைபேட்டைக்குள்நுழைந்து — நல்ல
தீரனுந்தாண்டவன்கையில்கொடுத்தான் *
விருப்பமுடனெழுதியகாயிதத்தை — பாதர்
விறல்பெருகுசிவகங்கைப்பவர்தளகர்த்தன் *
காயிதவக்கணையைப்பார்த்தாக் — கோபந்
தான்மீறித்திருப்பூவனக்கோட்டையில்வந்து *
திண்டுகிமாசுமேற்சாய்ந்து — நல்ல
திடமாகவோலையைச்சிராய்ப்படித்து *
தாண்டவராயதளமந்த்ரி — கோபந்
தான்மீறிமறுநிருபந்தானெழுதினனே *
வேண்டாமடாதுரைகானுமுல்லை — நானும்
வேளாளனொருவுறுதி சொல்லுகிறேன்கேளு *
நெல்லூர்சிராப்பள்ளியிலிருந்து — நீயும்
நேர்தெற்கேமதுரைக்குவருகிறபோது *
சொல்வார்கள்கும்தானென்று — இப்போ
அடிவளருமதுரைக்குத்துரையானாய்நீயும் *
மச்சினனென்றுவுறவாடி — உன்னுடைய
மாசாவைத்தங்கையென்றுறவாடியிருந்தேன் *
முச்சிருவுடுப்புநான்கொடுத்து — உனக்கு
முதல்வரிசைமதுரைக்குக்கொடுத்தனுப்பிவிட்டேன் *
மதுரையிலேயுனக்குமகன்பிறக்க — என்னுடைய
மாணிக்கச்சிவகங்கைசர்க்கரைவழங்க *
எதிராதேநெஞ்சந்துணிந்து — கானு
என்னுடையதிருப்பூவனக்கேழ்ப்பையோவென்று *
எழுதியேகாயிதந்தன்னில் — அப்போ
இயல்பானசேவகர்கையில்கொடுத்தனுப்ப *
மதுரைகான்சாய்புகையில்கொடுத்தார் — அந்த
மதயானைகான்சாய்புவாசித்துப்பார்த்து *



மதிமந்த்ரிதாண்டவராயா — கானு
மதயானையொருவயனஞ் சொல்லுகிறேன்கேளு *
வேலூருவிசலூரிலிருந்து — நானும்
விருகமதுரைக்குவந்ததின்பிறகு *
என்னைக்கண்டுவணங்காதபேரை — நியா
யெரித்துநிர்த்தூளிப் படலமாய்நொறுக்கி *
பனையூருமாங்காய்பிடுங்கி — நானும்
பத்துநிலைவழிப்பாதை மடிமாங்காய்போட்டு *
ஒருமாங்காயதிலேகுறைந்தாக்கால் — பாதர்
ஒன்றுகாய்வட்டிவாங்கினேன்சிங்கம் *
தருவோங்குஞ்சிக்கந்தாமலையில் — பாதை
தன்னில்வெகுதிரவியத்தைமுடித்துநானெறிந்தேன் *
ஏழுநாளப்படித்தானே — அதிலே
ஈயெறும்புமொய்க்காமலிருந்ததுடாபணமும் *
நாளுமதிலேருதுகரையான் — அதிலே
நலியாதுகருக்குருவிநாடாதுபணத்தில் *
அப்படியடித்தேன்துரைகானு — எனக்கு
ஆடாபணங்காட்டுமறவனேயெதிரி *
என்றுசொல்லிக்கான்சாய்புநீலன் — நன்றாய்
எழுதியேகாயிதத்தை திருப்பூவனமனுப்ப *
வந்ததொருகாயிதந்தன்னை — நல்ல
வரிசைபெறுவேளாளன்பார்த்தேதுசொல்வான் *
அடாயிப்படிசொன்னியேநீகானு — நல்ல
தாகட்டும்மறுவயனஞ்சொல்லுகிறேன்கேளு *
குடிக்கிறதுபனங்காட்டுக்கள்ளு — மறவர்
எடுக்கிறதுஉடன்காட்டுமொக்கைதடிநான் *
அடிக்கிறதுகரண்டாக்கால்பார்த்து — நாங்கள்
பிடிக்கிறதுகொண்டைமயிர்தப்பாதுசொன்னேன் *
நாங்களடித்துப்பறியாவிட்டால் — எங்கள்
நலங்கொண்டகாடுமட்டுமடித்துப்பறித்திடுமே *
தாக்கியிங்குவருகநினையாதே — உன்னை
சதனத்திலேவிசிடுவேனென்றான்வேளாளன் *
இன்னம்பலபலசேதியெழுதி — அவனும்
இயல்பாகவனுப்பினான் மதுராநகருக்கு *

வந்ததேமறவருடதிருபம் கானும்
வாசித்துப்பார்த்துமவனேதுசொல்வானும் *
இத்தனைவீரியங்கள்சொன்னாய் பயலே
இனிமேலுங்கானுதுரைசொல்லுகிறேன்கேளு *
வெத்திலைகொழுந்துகிள்ளுஞ்சாதி நீயும்
வேளாளர்வம்மிசம்முல்லைமணிமார்பா *
மேழிபிடித்தழுஞ்சாதி பாரில்
விளங்கவேயெழுத்தாணிபிடித்தெழுதுஞ்சாதி *
நாளுங்கொடிக்கால்பார்க்குஞ்சாதி நீங்கள்
தகிகுலமென்றேயிந்த நிச்சியங்களறியும் *
பட்டோலையெழுதுமுங்கள்ஜாதி உனக்குப்
படைவெட்டுத்தெரியுமோ நாண்டவராயா *
இப்படிகான்சாய்பெழுதியனுப்ப அதற்கு
எதிர்திருபமெழுதுகிறான்தாண்டவராயன் *
பட்டோலையெழுதுகிறதென்று நல்ல
பரிதகுலதுரைகானுமென்னையேவுன்வாக்கால் *
மாறுநாட்டோலையிலென்னை அந்த
மாமரத்துக்கிளையில்தூக்காமல்விட்டால் *
சந்திரகுலமுத்துவடுகையர் எங்கள்
சாமியுடவாசல்பிரதானிநானல்ல *
மீறுபுகழ்வேளாளனல்ல சிங்கம்
விரித்ததுவும்தீவாசுக்கப்பணியுமல்ல *
பிடித்ததுவுமெழுத்தாணியல்ல சிங்கம்
போட்டதுவும்தளகர்த்தமோதிரமுமல்ல *
விசையுளனுந்தாண்டவராயன் திருபம்
எழுதியேயனுப்பிவிடக்கானுதுரைதானும் *
வந்ததொருகாயிதந்தன்னை நல்ல
வரிசைபெறுகான்சாய்புபார்த்தேதுசொல்வான் *
இந்தமொழிசொன்னியேபயலே நானும்
இன்னமொருசம்பிரதாயத்தைசொல்லுகிறேன்கேளு *
கர்த்தாக்களமர்ந்திருக்குமேடை நல்ல
கருங்கல்லுச்சவுக்கைதனைப்பேர்த்துநான்பார்த்தேன் *
பத்தாயந்தனிற்பணமுமிருந்தது அதனில்
பதிவானபட்டயமுமெழுதியிருந்ததடா *



இரட்டைவெங்கலக்கதவுநிலைதான் அதிலே
நோய்க்கிடக்குதென்று எழுதியிருந்ததடா *
இதம்பெறவேசேனைகளைக்கூட்டி அந்த
எழிலானவெங்கலக்கதவுநிலையெடுத்தேன் *
கதவுநிலையாகவைத்தாண்ட ஆதி
கர்த்தாக்கள்முன்னிலேபோட்டுயிருந்தவிடா *
தென்புறத்துவரிக்கல்லுமேலே கோடி
திரவியமிருக்குதென்றெழுதியிருந்ததடா *
இதற்குவங்கையேதென்றுயெண்ணி நானும்
இயல்பாகமனதிலேயோசனைகள்செய்து *
ஐம்பதுபேர்தச்சர்களைப்பழைத்து நானும்
அரைகூடனைத்திலாறுவரிக்கற்கழிறக்கி *
திரவியத்தைப்பேர்த்தெடுக்கையிலே அதிலே
திசைமதுரைக்கர்த்தாக்களெழுதியிருந்தனக்கேள் *
பரமேஸ்பரிமீனாக்ஷிகோ வாயிற்
படியில்வெகுதங்கப்பாளமிருக்குதென்றிருக்க *
இப்போதுதிசைமதுரைமீனாள் நாயே
எனக்கிந்தத்திரவியத்தைக் கொடுக்கவேணுமென்றேன் *
அப்போதுதிசைமதுரைமீனாள் எனக்கு
அறியவேயொருவசனஞ்சொன்னதைக்கேளு *
மலைக்காதேதுரைகானுநீயா நானும்
வைத்திருக்குந்திரவியத்தி லாசையாயிருந்தால் *
தலைச்சன்பிள்ளைபெண்பிறந்தமங்கை அவளும்
தலைச்சன்பிள்ளையுண்டாயிருக்கவேணும் *
பிராமணப்பெண்கொண்டுவந்து எனக்குப்
பெலிவெட்டிப்பொங்கலிட்டுக்கொடுப்பையேயானால் *
திரவியமிருக்கிறதைநீயும் கானு
இடமாகயெடுவென்றுஉத்தரவுமீய்ச்சு *
ஆகட்டுமென்றுசொல்லிநானும் அப்போ
அன்பாகஆள்விட்டுவிசாரித்துப்பார்த்தேன் *
நாலுமுகமாள்விட்டுப்பார்த்தேன் அப்போ
நலங்கொண்டசோழநகர்தன்னிலிருந்தான் *
எழுநூறுபொன்கையில்கொடுத்து நானும்
ஏழுபேர்சிப்பாயிவிட்டுத்தள்ளிவரச்சொல்லி *

நற்பெலிவாங்கிக்கோதேவி என்று
ராஜாதிகையினால்வெட்டினேன்காணு *
திரவியத்தைப்பேர்த்தெடுக்கையிலே அதிலே
செப்புநல்லப்பட்டயமுமெழுதியிருந்ததடா *
புட்டவனம்திருப்பூவணமும் உன்னுடைய
புகழானபள்ளிமடைமதுரையுடன்சேர்க்கை *
தேவர்கள்பூசைபண்ணுங்கோட்டை என்னுடைய
திருமதுரைசேர்க்கையுள் திருப்பூவணக்கோட்டை *
சிவகங்கைபட்டணமுதல்ல என்னுடைய
சீரானமதுரைக்குப்பண்டீனக்கிராமம் *
வயிரியநத்தங்கம்விளையும் உன்னுடைய
மாணிக்கப்பாத்திபனூர் மதுரையுடன்சேர்க்கை *
திருச்சுளிப்பள்ளிமடையெல்லாம் முன்னே
திருமலைக்கர்த்தாக்கள் ஆண்டிருந்ததேசம் *
இப்படிவிபரமாயிருக்க நீயும்
வீணிலேதிரிந்தலைந்து போகாதேவேண்டாம் *
விட்டுவிடுதாண்டவராயா சும்மா
வீணிலேபழியேற்கப்போகாதுசொன்னேன் *
எட்டுவருஷகாலமானாலும் நானும்
எதிராடித்திருப்பூவணம்வாங்குவேன்பாவி *
என்றெழுதியர்க்காருகையில் காணு
இயல்பாயனுப்பினான்திருப்பூவணம்நோக்கி *
வந்ததொருகாயிதத்தன்னை முல்லை
வேளாளன்வாசித்துயோசனைகள்செய்து *
என்னுடையராச்சியமென்றிருந்தும் நீயும்
இப்படிக்கெல்லாமெழுதினையேதுரையே *
னமானமருதமுடிமன்னா முல்லை
காராளனொருவார்த்தைசொல்லுகிறேன்கேளு *
மைத்துனகான்சாயபுநீலா ஒரு
வார்த்தைநான்காராளன்சொல்லுகிறேன்கேளு *
மதுராபுரிபிறக்கையிலேகாணு எங்கள்
மகாபூவணலிங்காகூடப்பிறந்ததடா *
சதுர்மதுரைக்கோட்டைபிறக்கையிலே மறவர்
சமஸ்தானக்கூடப்பிறந்ததடாகாணு



மதுராபுரிக்கோட்டைபிறக்கையிலே தேவும்
மறவருடமண்ணிதென்பார்கேட்டுக்கொள்காணு *
முடிக்கிறாய்சம்பிரதாயம்வீணில் செம்பொன்
முடிமன்னன்திருப்பூவணக்கொடியுனக்குவருமோ *
குடிக்குமோபூனையநத்தப்பாலை அதனைக்
குடிக்கவென்றுநினைத்தாலும்வலதுகாலாலே *
தட்டிக்கவிழ்த்திடுவேன்காணு உன்னுடைய
சம்பிரதாயங்களைநிறுத்திவிடுசொன்னேன் *
மன்னனென்றுதாண்டவராயன் எழுதி
மதுராபுரிதனக்கனுப்பிவிட்டனுப்பிவே *
வந்ததொருகாயிதந்தன்னை அந்த
வள்ளலெனுங்கானுதுரைபார்த்தேதுசொல்வான் *
அடேபிள்ளைதாண்டவராயா பாதி
ஆண்பிள்ளைகான்சாயபுசொல்லுகிறேன்கேளு *
கெட்டியாயிவ்வயணஞ்சொன்னாய் சிக்கம்
கிரீடிநான்துரைகானுசொல்லுகிறேன்கேளு *
சிந்தையுடன்முல்லைமணிமார்பா அந்தத்
திருப்பூவணங்கொடுப்பதில்லையென்றுயேபாவி *
வந்துநிர்த்தூளியாயடித்து திருப்பூ
வணம்வாங்கிசிவகங்கைகம்பளிவிரித்து *
கெடித்தலமெல்லாங்கொள்ளையடித்து உன்னுடைய
கெம்பீரபாத்திபனூர்தோரணங்கட்டி *
அடித்துவுனைக்கைப்பிடியாய்ப்பிடித்து என்னுடைய
அங்காளம்மன்கொத்தளத்தில்காவல்வைக்கவிட்டால் *
வீரசிவீரானசூரன் இனம்
வெள்ளைக்காரன்வளர்த்தெடுத்தபிள்ளையோநானும் *
மாலானகான்சாயபுநீலன் துணை
மைத்துனன்தாண்டவராயனுக்கனுப்ப *
வந்ததொருகாயிதந்தன்னை அந்த
மன்னனெனும்வேளாளன்பார்த்தேதுசொல்வான் *
போராட்டத்துணிந்தியேநீகாணு நல்ல
புலிக்குட்டியொருவசனஞ்சொல்லுகிறேன்கேளு *
திருப்பூவணக்கோட்டையேநீயானால் வடக்கே
திருச்சினாப்பள்ளிக்கோட்டைசீராய்க்கட்டி *

ட்ருப்பதப்பொன்வெளியிறங்கி தம்பிட
பாட்சாநபாபுதன் பேட்டிநான்செய்து *
ஸ்ரீட்டுயேலாட்டையுமழைத்து நல்ல
நலமான நீர்மேல்நெருட்டையுமழைத்து *
வாட்டமுடன்நம்பிலியைக்கூட்டி சர்னல்
யாட்டியன்மேஜர்க்ளாஜன்னலையழைத்து *
ஒன்னபிரட்டனையுங்கூட்டி நல்ல
தேமல்துரைமுசியாப்சறங்லையழைத்து *
ஜெனரல்லெவன்னக்காரனை கூட்டி நல்ல
செபம்பெற்றபிரட்டனையுங்கையோடேயழைத்து *
மும்புதுபட்டாளத்தைத்திரட்டி நல்ல
முடிவேந்தன்வண்டியூரில்கூடாரமடித்து *
ஐம்பதிமாதத்திம்தன்னாக உன்னை
அணிபாளையணிபமாச்சோகோயில்ஞாட்டோட்டால் *
நாதுலசிக்கம்தானல்ல பெரிய
நாலுகோட்டைதளகர்நெருக்கலகானும் *
தேவர்புகழ்மூத்தவலைகைய ராஜ
ஒக்கமிழுகிகாரிநானலியவின்று *
எழுதியேகான்சாய்புக்கனுப்ப நல்ல
இயல்பானகான்சாய்புபார்த்தேதுசொல்வான் *
மட்கைநான்போரேனென்றுசொல்லி மெத்த
வலுவாகச்சொன்னியேநாண்டவராயா *
மட்க்கைபுமென்றுடையாளிதன் அதிலே
வரிசையுடனிருக்கிறதுரைவெரிப்பிரட்டன் *
பிரட்டனெருநல்லிருக்குமட்டும் சிங்கம்
பிடிப்பாண்டாலப்படியுத்திதைநகரக்கோட்டை *
பிரட்டனெருதல்லிருக்குபோனால் நானே
பிருதெடுக்குஞ்சண்டை நபாபுநாய்ப்பு *
திருச்சினாப்பளிக்கோட்டைமுதலாய் அடிக்குத்
திசைகம்பநாட்டியே தோரணங்கட்டிடுவேன் *
துரைசிங்கம்சமர்த்தைப்புதியென்று நல்ல
துடிவளரும்துரைகானுவர்க்காலேசொல்லி *
சொன்னவர்ருசேதிகளைமெல்லாம் கடுது
தூயாக்காயிதத்தில்கண்டேயெழுதி



வரவிட்டான்கான்சாய்புநிலன் நல்ல
மங்கைபர்வேல்நாண்டவன்மனதிறுட்கொண்டு *
இன்னுமொருயோசனைகள்செய்து நல்ல
இதமுடனேவேளாளனைதுசொல்வானும் *
கங்கைகுலதாண்டவராயன் நல்ல
கன்னிகைமாசாவின்மனதறியவெண்ணி *
தங்கச்சிமாசாவேகேளு கேனது
தன்கணவன்சேதிதனைக்கேழ்க்கிலையோதங்காய் *
திருப்பூவனக்கேழ்க்கிறன்தங்காய் என்னுடைய
செல்வமுள்ளபார்த்திபனார்கேழ்க்கிறன்தங்காய் *
திருப்பூவனம்விட்டுவிட்டுடுவேன் நானே
சிவகங்கைகுடியிருப்புநிலைக்கவொட்டான்கானன் *
என்றெழுதிகாயிதத்தைபனுப்ப நல்ல
இயலானமாசாவும்பார்த்தேதுசொல்வள் *
தண்டேனநீதாண்டவராயா தங்கச்சி
தன்பாகவொருவயணஞ்சொல்லுகிறேன்கேளு *
சிங்கத்தின்குட்டிநியண்ணே இரும்புக்
சிந்தைதனிலேதாங்கள்கவலைகொள்ளவேண்டாம் *
தங்கையாய்நானிருக்கும்போது உத்தன்
தன்சிமைக்கொருநாளும் அழிவுவாராது *
சொல்லியம்கானுதுரைவந்தால் உனக்குத்
தோரணச்சிட்டெழுதித்தருகிறேனென்று *
புவனம்போற்சிவநதிடும்வாயாள் நல்ல
பைக்கொடியெழுதினைதாண்டவராயன் *
பார்த்தமனமகிழ்ச்சியாயிருந்து நல்ல
பண்பாகச்செங்கோல்செலுத்திவருநாளில் *
மதுரை நகர்கான்சாய்புதுரைபுரி அப்போ
மண்டலிகள்யோசித்துயேதமெப்பவாறும் *
எழுமணிவேளையிலேகானு அப்போ
எழுந்திருந்துயாசாவினாண்மனைக்குள்வந்து *
முடிமன்னன்துரைகானுசாய்பு நல்ல
மோகமிகுமாசாவைப்பேறிட்டுப்பார்த்து *
அடிபெண்ணேன்துரைமகளேமாசா கானன்
ஆண்பிள்ளையொருவயணஞ்சொல்லுகிறேன்கேளு *

மலையாளம்பார்த்துவரவேணும் பெண்ணே
மன்னருகோவிலும்பார்த்துவரவேணும் *
இப்படிகாளுதுரைசொல்ல மாசா
எதிரிட்டுப்பார்த்தவனுக்கேதுசொல்வாளாம் *
மலையாளம்போய்ப்பார்த்தபேர்கள் அங்கே
மாண்டவர்களல்லாமல்மீண்டவர்களில்லை *
வேதிபெருத்ததுவுமதுரை நல்ல
வெள்ளாட்டிபெருத்ததுவும்தட்சணபூமி *
வாசமுண்டெனக்குமுகம்பாராமல் சாமி
மறுமுகம்மதுரையிலேபார்த்தகாலத்தில் *
மதுராபுரிக்கோட்டையுமாண்டு நீயும்
வயணமாய்ச்செங்கோல்செலுத்தவுமாட்டாய் *
எதிராடிவடக்கேபகையாதே நமது
ஈஸ்வரனபாபுதுரைசேதிகேட்டியாதோ *
மேற்கேபகையாதேதுரைமகனே அந்த
விருதுபெற்றஜகமொன்றுல்லோ நாலுதாவண்டன் *
தெற்கேவடக்கேபகையாதே அதிலே
எழுதண்டிகைக்காரர்பெரியதபோக்கர் *
கிழக்கேபகையாதேதுரைமகனே அந்தக்
கீழ்க்காட்டுமறவருட்சேதிதெரியாதோ *
பழக்கமாயிருபேருமிருந்தால் நானும்
படைமதுரைக்கொருநாளுமெதிரொருவரில்லை *
என்றுமாசாவும்புத்திசொல்ல காளு
இயல்பாகமறுத்துமங்கேதுசொல்வானும் *
இப்படிசொன்னியடிபெண்ணே காளு
இன்னமொருசம்பிரதாயஞ்சொல்லுகிறேன்கேளு *
டப்பைப்பாளயக்காரர்வணங்க விருது
ராஜகேசரியென்றுராஜர்திறையளக்க *
மூணைகொடுத்தபறங்கிமலைக்கோட்டை நன்னை
மூன்றுநாளைப்பொழுதில்வாங்கினேனானும் *
பனங்காட்டுமறவனெனக்கெதிரோ நானே
பார்க்கிறேனவன்சமர்த்தைபாரடிபெண்ணே *
பனிரண்டுவருஷமானாலும் நானும்
பாத்திபனூர்திருப்புவனம்பிடிச்சிடுவேனென்று



துடிநருலகான்சாய்புசொல்ல அப்போ
திலோர்த்தமையெனுமாசாயேதுசொல்வாளாம் *
இனியாருமெதிரில்லையென்று நீரும்
இப்படிசொல்லலாமோகான்சாய்புதுரையே *
இலங்காபுரிக்கோட்டையாண்டு முன்னே
இருந்தானேராவணன்பத்துசிரசோடே *
குலங்குமகாமேருகனையெடுத்தான் அவன்
துடியானவாழ்வெங்கேபோய்விட்டதுதுரையே *
கற்புடையசீதாதேவியினால் இலங்கைக்
காவலழிந்ததைக்கேட்கலையோதுரையே *
அப்படியேமறவருடன்பகைத்தால் நம்மிட
ஆதீனந்தப்பாம்லெடுபடுஞ்சொன்னேன் *
மறவனென்றால்பெரியவீட்டுக்காரன் அதிலே
மறவனென்றுலுடன்பிறந்தபிறவிதானெனக்கு *
மறவர்மேற்படையெடுட்டையானால் நானும்
மங்கிலியங்களைந்துதன்மடியின்மேற்போட்டு *
மைந்தனையுக்கையோடேகூட்டி முன்னே
மலையாளம்போய்விடியச்சேருவேனென்று *
மாசாவுங்கோபமாய்ச்சொல்ல நல்ல
மதுராபுரிகாளுதுரையரண்மனைபோய்ச்சேர்ந்தான் *
நடந்ததோர்சேதிகளனைத்தும் மாசா
நலமாகவெழுதியேதாண்டவனுக்கனுப்ப *
வஞ்சியர்வேள்தாண்டவராயன் அப்போ
மாசாவின்காயிதத்தைவாசித்துப்பார்த்து *
அன்னேரம்வரிசையுடுப்புகளை நல்ல
அன்புள்ளமாசாவுக்கனுப்பவேணுமென்று *
மூன்னூறுவுலுப்பைமணிசெய்து நல்ல
மூடிமன்னன்கைக்கொலுசுபொன்னலேசெய்து *
வெள்ளியாலுரிக்கயறுசெய்து நல்ல
விலைமதிபாவுரிக்கலையம்பொன்னலேசெய்து *
அள்ளியதில்சீனிச்சர்க்கரைபோட்டு நலமாய்
அடுக்கியிருபுறவுரியும்அழகாகச்சேர்த்து *
தங்கையவளிருந்துவிளையாட நல்ல
தங்கத்தாற்பள்ளாங்குழியொன்றுசெய்து *

தங்கத்தாலம்பலகனகசபைசெய்து நல்ல
தங்கத்தாலீர்கொல்லிப்பான்குலேசிப்பும் *
மாசாவுக்குச்சிறந்தாவிக்கை நல்ல
வச்சிரமணிமுத்தரத்தினபொன்னிறந்செய்து *
மாசாவிருதுகளுக்கென்றுசொல்லி நல்ல
வயிரீயக்குல்லாவில்வச்சிரக்கல்லழுத்தி *
காணறுத்துமுத்தாலேஅழுத்தி வச்சிரக்
கல்லிழைத்தயோதிரமுங்களமாகச்செய்து *
மின்குசம்பாநெல்லரிசிதனிலே நல்ல
முனைத்தட்டிதினைதபோதியபிடித்து *
அந்தச்சிரகச்சம்பாநெல்லில் அப்போ
எழுமரக்காலைபவழியக்கச்சொல்லி *
சரியாகச்சர்க்கரைகலந்து நல்ல
தன்மானயாழ்ப்பாணப்பிட்டுமெடுத்து *
இருநூறுபொன்பெற்றபட்டு சரு
இழையிழைக்குச்சரிகைபிறகுச்சுகளட்டி *
பாருபசுவுருபாலாடுநடத்தி நல்ல
பண்பனசெங்கரும்புக்கட்டுபணிரண்டு *
சேல்பேர்னும்விழியாசாமகிழ மதுரைத்
திசைநோக்கியனுப்பினான்தாண்டவராயன் *
வருகுதுமறவருடவரிசை என்று
மதுரைதனைகான்சாய்புகிறுங்கேட்டு *
தெருவீதிமேடைகடந்து கானு
திருமலைக்கர்த்தாக்கள்சாவடியுந்தாண்டி *
சித்திரக்கற்கூடமுந்தாண்டி கானு
தேவடிவிட்டான்மனைச்சாவடியுந்தாண்டி *
கர்த்தாக்களமர்ந்திருக்குமேடை அந்தக்
கருங்கல்லுச்சவுக்கையிலேயிலாகச்சாய்ந்து *
நரசிம்மனுயக்கனையழைத்து நல்ல
நரசப்பன்குருவப்பனைவரவழைக்கச்சொல்லி *
திறமிகுகான்சாய்புதலன் அந்த
சினிச்சிராவ்முரசுவெள்ளைக்காரனையழைத்து *
பட்டப்டேசாய்பையுமழைத்து மல்லி
நாய்க்கன்கேசரியைவரவழைக்கச்சொல்லி *



தடமதனன்முத்தழகுபிள்ளை நல்ல
சண்முகவேலாயுதமுதலியையுமழைத்து *
தாநப்பனுயக்கனையழைத்து நல்ல
தளவாயல்முதலிதனைவரவழைக்கச்சொல்லி *
வாய்த்ததொருமீனாட்சியையன் தனையும்
வகையாகச்சிக்கிரங்கூட்டிவரச்சொல்லி *
பணிரண்டுதுரைமாரைப்பார்த்து கானு
படைமதுரைச்சாவடியில்சாய்ந்திருந்துகொண்டு *
(நாளை) பணிரண்டுமணிவேளைக்கெல்லாம் அந்த
பாங்கானதிருப்பூவனமேற்படைகள்பயணம் *
நாளைக்குமறவன்மேல்சாரி என்று
நம்முடையசேனைகளுக்குறுதிசொல்லுமென்றான் *
(அந்த) வேளைதனில்மறவருடவரிசை அதுவும்
வீருகண்டியூர்ச்செச்சையிலிறங்கி *
தூதுவனைமுன்னாலேயனுப்ப அவனும்
துரிதமாயோடிவந்துமாசாவுக்குச்சொன்னான் *
இதுசேதிமாசாவுங்கேட்டு பார்
மேல்பரிமீனாட்சியைமனதிலேநினைத்து *
சந்தோஷமாகியேமாசா அவரும்
தயாராகிபாப்பாசுகானுக்கணிந்து *
மகனையுங்கக்கத்திலிடுக்கி மாசா
வருகிறுள்ராவணச்சாவடிகடந்து *
சின்னக்கடையுங்கடந்து கானு
தேவடிவிட்டான்மனைச்சாவடியுந்தாண்டி *
சேர்ந்தகோபுரவாசல்தாண்டி இந்த
செகமகிழ்ந்திடும்வடக்குவாசலுந்தாண்டி *
மடல்வாழைக்கனிசொரியுமதுரை அந்த
வையையாற்றுக்கரையில்வந்துநின்றுகொண்டு *
உடுப்புவகைவரிசைகளையெல்லாம் மாசா
உத்தரஆற்றுவெளிகொண்டுவரச்சொன்னாள் *
வருகுதேமறவருடவரிசை அது
வந்திருக்கும்வேடிக்கைசொல்லமுடியாது *
அதிசயந்தைக்கண்குளிரப்பார்த்து மாசா
அகமகிழ்ந்துமாணிக்கப்பெட்டியைத்திறந்து *

மாசாவும்வரிசைகளையெடுத்து அப்போ
வகையுடனேகண்ணாலேயெரிட்டுப்பார்த்து *
மாணிக்கப்பெட்டியைத்திறந்து அந்த
வச்சிரமணிக்குல்லா வைமகன்தலையில்தரித்து *
காரணுக்கனுப்பியமுத்தங்கி அதையும்
கண்மாக்கவொருபட்டில்தானெடுத்துவைத்து *
தங்கத்தின்தொட்டிலெயெடுத்து அதிலே
தன்மகனைச்சற்றுநேரம்போட்டாட்டிப்பார்த்தாள் *
தனக்குத்தந்தமுத்தாரவிக்கை எடுத்துத்
தான்பூட்டிக்கண்ணாலேதானழகுபார்த்தாள் *
செப்பரியமுங்கிற்குழாய்திறந்து மாசா
சினத்துப்பட்டெடுத்துத்தானுடுத்திக்கொண்டு *
இப்படியுடுப்புகள்வந்ததற்கு இனி
என்னதான்சொல்வாளோபாதகன்காரனு *
என்மனதுபோலேயடிமீறுள் தாயே
இருக்கவேணுங்காணாடமனதென்றுசொல்லி *
தன்மைதரவேணுமடிமீறுள் காணவே
நல்வாக்குச்சொல்லவேணுமீறுட்டியென்று *
நடந்துவந்தாளப்போதுமாசா காணு
ராசாதிபதிமுன்னேவரும்வேளைதனிலே *
காரணகர்த்துப்புலிபோலச்சீறி காணன்
கண்சிவந்துபொறிபறக்கப்பார்த்தேதுசொல்வான் *
ஏதடிபுகச்சேரிப்பெண்ணே உனக்கு
இந்தவுடுப்புகள்கொடுத்தவர்களாரு *
கனகோபமாகவேகேட்டான் அப்போ
கன்னியவள்மாசாவுமேதுசொல்வாளாம் *
ஆண்டவனேதுரைகாரணுசாய்பே எங்கள்
அண்ணன்தாண்டவராயன்கொடுத்தனுப்பிவைத்தான் *
மாசாவுமிதுசேதிசொல்ல அப்போ
மதனதுரைகான்சாய்புயேதுசெய்யலுற்றான் *
மகன்தலையிலிருந்தகுல்லாவை காணு
வாங்கிவரச்சொல்லிரண்டுகல்லையுங்கூட்டி *
உகந்தசாட்டையழைத்து
நருக்கித்துவிளங்கையென்ன பெறுமென்றுகேட்டான்



அரண்மனைவிலையாகவிற்றால் மூன்று
அறுநூறுபொன்னுக்குவாங்கலாங்கல்லை *
இருகல்லுங்குடிவிலையில்விற்றால் ஒவ்வொன்று
எழுநூறுபொன்னுக்குவிற்கலாமென்றான் *
இப்படிகல்விலையுந்தேசம் அங்கே
இருக்குதோமறவருட்டபுவனத்தில்லவுண்டி *
இப்படிகல்லுபெருக்காக்கால் லவுண்டி
என்பேச்சையெள்ளளவுங்கேட்பாரோ அவன்தான் *
அடிக்கிறேன்மறவன்மேல்ச்சாரி நானோ
பிடிக்கிறேன்திருப்பூவனக்கோட்டைதனைபாதர் *
முடிக்கிறேன்சம்பிரதாயம்லவுண்டி என்று
முழுநீலகாரணுதுரை தழுவணையிற்சாய்ந்தான் *
பொருப்புலவுந்துரைகாரணுசாய்பே உத்தன்
புகழ்பெற்றமயிலையாட்டிசொல்லுகிறேன்கேளு *
திருப்பூவனம்வேணுமென்றுகேட்டால் நானும்
ஸ்ரீதனம்போல்வாங்கித்தருகிறேனென்றாள் *
இப்படிமாசாவுஞ்சொல்ல அப்போ
இயல்பாகக்கான்சாய்பு யேதுசொல்வானும் *
பெண்சாதிமானியந்தனிலே லவுண்டி
புகழ்பெற்றதுரைகாரணு ஆள்வேறோதேசம் *
நானைக்கேயொருபலித்தாதீர்த்து நானும்
வாங்குவேன்திருப்பூவனக்கோட்டைராஜசிங்கம் *
மண்டியேயொருபலித்தாதீர்த்து நானோ
வாங்குவேன்மறவருடையாத்திபனாரென்றான் *
மாலானகாரணுதுரைசொல்ல நல்ல
மங்கைபர்சிகாமணிமாசாவுக்கப்போ *
கோபங்கள்சொல்லமுடியாது மாசா
குவளைவிழிசிவப்பேறிச்சபைதனிலேநின்று *
இராவணனாய்நீவந்துபிறந்தாய் அதற்கு
இராமசுவாமியாகவந்துபிறந்திட்டான்மறவன் *
சூரனாய்நீவந்துபிறந்தாய் இய
சுப்பிரமணியராகப்பிறந்திட்டான்மறவன் *
கோரமிருகந்தனாய்ப்பிறந்தாய் அவனைக்
கொன்றதோர்சிங்கமாய்ப்பிறந்திட்டான்மறவன்

துரியோதனனுக்கப்பிறந்தாய் குரு
தேசிகன்தர்மனைப்போல்பிறந்திட்டான்மறவன் *
அரியகீசகன்போலப்பிறந்தாய் அதற்கு
அதிவீரன்வீமனைப்போல்பிறந்திட்டான்மறவன் *
திறல்விஜயன்போல்மறவன்பிறந்தான் அதற்குக்
சேத்தாசன்போல்பிறந்தாய்திசைமதுரைகாக்க *
ஆரோடேபகைத்தாலுமுனக்கு துரையே
அவர்களாலொருநாளுந்தாழ்வுவாராது *
மறவருடன்பகைத்தகாலத்தில் இந்த
மதுராபுரிமன்னுனக்குத்தக்காதுசொன்னேன் *
மறவனென்றால்பெரியவீட்டுக்காரன் மறவன்
மந்திரிவெள்ளாழன்வெகுதந்திரக்காரன் *
வெள்ளியாய்முளைத்தாலுமுளைப்பான் அவனும்
வேந்தனைமுளைத்தாலு முளைப்பான்வேளாளன் *
வெள்ளியெதிராகப்போனாலும் அந்த
வெள்ளாழனோடுமட்டுமெதிர்க்காதேவேண்டாம் *
காராளனுக்கருமைதெரியாது நமது
கருவையறுத்திடுவான்தாண்டவராயன் *
மாசாவுமிப்படிசொல்ல காணு
மன்னவனுங்கள்சிவந்தேதுசொல்வானும் *
அடுப்பூதத்தெரியுமடிலவுண்டி உனக்கு
ஆல்தானசங்கதிகள்தெரியுமோபெண்ணே *
சோறுக்கத்தெரியுமடிபெண்ணே உனக்குக்
துரைகளுட்சம்பிரதாயந்தெரியுமோலவுண்டி *
கஞ்சிகாச்சத்தெரியுமடிபெண்ணே. உனக்குக்
காவலர்கள்கெடிநலக்கள்தெரியுமோலவுண்டி *
மிஞ்சிப்பேசவசேதுலவுண்டி இந்தனை
வீரியக்களேதடிபுதச்சேரிப்பெண்ணே *
உருவியேதங்கபாலாவை கோபித்து
உறைவிட்டுமாசாமேலெறிந்திட்டானப்போ *
இருபதுபொன்சகலாத்துமறுந்து நல்ல
இளந்துடையில்மாசாவுக்குக்காயங்களாச்சு *
முசுறேடேபேசமுடியாது என்று
முகத்திருப்பிமாசாவும்வெளியிலேவந்து



அசுமானகிரிதனிலேநின்று மகேசி
லன்பாகமாசாவும்யோசனைகள்செய்து *
ஆரோக்கியினன்பையெல்லாமறிந்தோம் மதுரை
தேவியினன்பையினியறியவேணுமென்று *
வராகிசெகசோதிகௌமாரி மதுரை
மகமாயிசன்னதிக்குவந்தனைகள்செய்து *
எண்ணூறுபொன்னெடுத்துக்கொடுத்து மதுரை
ஈஸ்பரிமீனாட்சிக்குச்சிறப்புசெய்யச்சொல்லி *
முன்னூறுகுடந்தண்ணீர்கொண்டு வந்து
முழுகியேமாசாவும்பட்டுடையுடுத்தி *
மந்தாரைமுல்லையிருவாட்சி நல்ல
மகிழம்பூசெவ்வரளிமாலைகளணிந்து *
நந்தாதகுடமல்லிதரித்து நல்ல
நளினமிகுபுனுகுசவ்வாதுகளணிந்து *
சருநாகக்கோபுரங்கடந்து மீனாட்சி
சன்னதியில்மங்கையர்கள்தான்சூழவந்து *
திருமலைக்கர்த்தாக்கள்நாட்டில் ஆயி
தேவியாய்வந்தவளேபாண்டியன்மகளே *
சாதியிலேநான்புலைச்சிதாயே உத்தம
சன்னதிக்கெதிராகவருகிறேனடியாள் *
மாடுதின்னும்புலைச்சிநான்வாரேன் என்று
மனதிலேயெள்ளளவுங்கவலைவைக்கவேண்டாம் *
கொத்தசமாய்மனதிலேநினைத்து ஆயி
கோபித்துக்கொள்ளாதே பாண்டியன்மகளே *
வஞ்சகமனதில்நினையாதே பெற்ற
மாதாவும்நீயுந்தான்மதலைநானடியாள் *
துரைகாணும்பங்கிலேநீயிருந்தால் எனக்குத்
துடியாகவடதுபுறஞ்சொல்லவேணுந்தாயே *
இரவிகுலமறவர்பங்கிலிருந்தால் எனக்கு
இடதுபுறஞ்சொல்லென்றுகேட்டானேமாசா *
தென்புறத்தில்சொல்லாதடிக்கு மீனாள்
திருவிருப்பில்யிடதுபக்கங்கெவுளிபதுசொல்ல தாயே
என்மனதுபோலேயடிமீனாள் *
யிருந்து[illegible]ன்மனதுபாண்டியன்மகளே

என்றுசொல்லித்திரும்பியேமாசா தண்டு
எழிலானமாளிகையினுள்வந்துசேர்ந்து *
விரும்பிவருமர்க்காரமுத்தை அழைத்து
மிக்கதளகர்த்தனுக்கு விரைந்தெழுதலுற்றான் *
ஆடுமாடுயேதனமடா அண்ணே உனது
ஆண்டவன்துரைமகன்பத்திரஞ்சொன்னேன் *
மாடுநின்னும்புலிச்சிநரனண்ணே என்மேல்
மார்க்கமாயுறவென்றுநம்பினையேதண்ணே *
சொல்லாதசேதியெல்லாஞ்சொன்னேன் அந்தத்
துரைமுனிகானனுக்குவிசுவாசமில்லை *
பொல்லாதமுழுமூடன்கானன் நானும்
புத்திசொன்னால்கேட்பானோ கேட்கவேமாட்டான் *
கானனைசெயித்திட்டாலண்ணே உனக்குக்
கலக்கங்களொன்றுமில்லைமுல்லைமணிமார்பா *
குறிப்பாகவெள்ளம்வருமுன்னே அணை
கோலிக்கொள்வடக்குசென்றுநபாபிடத்திற்சொல்லு *
எனைநம்பிநீயிருக்கவேண்டாம் உனக்
கியன்றபடிபார்முல்லைதாண்டவராயா *
மனதுரமியமாகவெழுதி மடித்து
மாசியார்க்காரிகையில்கொடுத்தனுப்பிவைத்தான் *
மாரியெனுமர்க்காருவாங்கிக் கொண்டு
மணஆருதாண்டியேதிருப்பூவனஞ்சேர்ந்து *
மண்டலீகன்கொலுவுக்குமுன்னே வைத்து
வகையாகச்சேதிசொல்லிக்கும்பிட்டுநின்றான் *
மாசாவின்காயிதத்தைப்பார்த்து அந்த
மந்திரிதாண்டவராயன்சந்தோஷப்பட்டு *
மருமகனேகைலாசம்பிள்ளை தங்கை
மூசாவின்காயிதத்தைவாசியென்றுசொன்னான் *
மருமகனுங்காயிதத்தைவாங்கி அப்போ
வாசிக்கத்தளகர்த்தன்காதாரக்கேட்டு *
சிக்கமேயர்க்காரமாரி ஒரு
சேதிதான்வேளாளன்சொல்லுகிறேன்கேளு *
தக்கச் லோயிருந்தேன் எனக்குத்
சத்ராதி சையமனாமாசா



மைத்துனனென்றல்லோயிருந்தேன் எனக்கு
மாத்தானுய்வந்தானேமதுரைதிசைகானன் *
அம்சன்னுறவுபகையாச்சே என்று
சொல்லுபோமாசாவுக்குள்ளபடிமாரி *
இனிமேலுந்திருப்பூவனத்திருந்தால் நம்மை
இருக்கொட்டான்வடக்கேதானடக்கவேணுமென்று *
தனிவீரதாண்டவராயன் அந்த
சதனத்திலேபயணமென்று தன்சேனைக்குரைத்து *
மாப்பிள்ளைசுப்பிரமண்யதேவா ஒரு
வார்த்தைதான்வேளாளன்சொல்லுவேன்கேளு *
தப்பாமல்திருப்பூவனந்தனிலே நீங்கள்
தயாராயிருக்கவேணுங்கானுதுரைவருவான் *
ஆர்க்காடுநான்போறேன்தம்பி ஆனா
மாசமோவருஷமோதெரியாது *
மார்க்கமாய்நான்வருமட்டும் நமது
மறவர்திருப்பூவனம்பத்திரமென்று *
உறுதிகளும்வெகுவாகச்சொல்லி அந்த
உத்தமனுங்குதிரைமேல்சீனிவைத்தேறி *
நடத்திட்டான்தாண்டவராயன் அந்த
நாழியிற்சிவகங்கைப்பேட்டைவந்துசேர்ந்து * *
பூட்டம்பாவம்பொன்மலர்செய்து நல்ல
தங்கமலர்வெள்ளிமலர்தன்கையிலெடுத்து *
விருதாணபேரிகைமுழங்க குதிரை
மேலிட்டநகபத்துடங்காமுழக்க *
இருபுறமும்வெண்கவரிவீச நல்ல
எறிபீட்டிவெடிக்காரர்முன்னேநடக்க *
கத்திகேடையக்காரர்சூழ குதிரைக்
காரர்படைவீரருடனே கடல்போல்நடக்க *
வெற்றிவெண்சாமரைகள்வீச முல்லை
வேளாளன்புறப்பட்டான்சொல்லமுடியாது *
மிக்ககாடுசிரக்காலுங்கழித்து நல்ல
வீரனைநால்கோட்டைசோழபுரந்தாண்டி *
ஒக்கூருமைமானந்தாண்டி நல்ல
ர்ங்காருந்தகுட்டிநப்பமுத்தாண்டி *

அரவிக்கோட்டையாசாரந்தாண்டி அந்த
ஆஸ்தானந்திருக்கோட்டியூர்மைதானந்தாண்டி *
இறல்விஜயன்தாண்டவராயன் அப்போ
சிக்கிரம்வயிரவன்பட்டிபோய்ச்சேர்ந்து *
சலுகைப்பெரியுடையானின்ற நல்ல
சுவர்ணகாமிமகன்முத்துவடுகையன் *
சந்திப்புகொடுக்கவேணுமென்று துரைக்குத்
தயாராகப்பூப்பந்தல்போட்டிடச்சொல்லி *
மஞ்சுதவழ்கனிவாழைநாட்டில் நல்ல
மகாதோரணங்கட்டிமாங்கனிகள் தூக்கி *
அஞ்சடுக்குப்பஞ்சுமெத்தைவிரித்து அதிலே
ஐக்கலமல்லிகைப்பூகாம்பரிந்துகொட்டி *
பச்சைஇண்டுதலையணைகள்வைத்து அதிலே
பாக்கானதிண்டொன்றுகொண்டுவந்துசாத்தி *
இச்சைபெறச்சல்லாவைவிரித்து நல்ல
இதவாகமலர்பரப்பிப்பன்னீர்தெளித்து *
வண்மையுடன்சோடித்துவைத்து ஜக
மண்டலேஸ்வரன்துருவன்முத்துவடுகையன் *
கண்வளர்விபூதிதனைப்பூசி நல்ல
கஸ்தூரிப்பொட்டுஞ்சவ்வாதுந்தரித்து *
ஒருபிடிபூணூல்துலங்க நல்ல
உத்திராட்சப்பொன்குவளையுஞ்சலிட்டாட *
மறுமுத்துத்தாழ்வடந்துலங்க நல்ல
வயிரவயிடூரியக்கல்மாலைதுலங்க. *
முருகுவச்சிரகண்டிதுலங்கக் காதில்
மோடியுடன்மரகதக்கல்கடுக்கனுமிலங்க *
இருகையிலுந்தங்கவளையிலங்க சிரசில்
ஈரைந்துமுத்துகொண்டைப்பாகையுந்துலங்க *
பூவாலேபூப்பந்தல்போட்டு நல்ல
பூலோகதேவேந்திரன்வெளியில்வருகையிலே *
வட்டுருவடுகிடுகிடென்றதிர நல்ல
வாக்காவலம்புரிச்சங்குநின்றூத *
இடிபோலபேரிகைமுழங்க
இசையானசங்கீதமேளந்துலங்க



இடம்பூண்டையதருளாயாக்கு உலகில்
தேவதேவேந்திராதிராயாக்கு *
வடகரைப்புலிபெரியவுடையார் தேவர்
வந்தெதிர்விளங்கவருமாலேயாக்கு *
இப்படிகட்டியங்கூற பூலோக
இந்திரனாதிபதிகொலுவந்துசேர்ந்தார் *
வெற்புலிமுத்துவடுகையர் பாதர்
விரிதுகொலுசேர்ந்தவுடன்தாண்டவராயன் *
திருப்பாலக்கரைநனைக்கவந்து வெள்ளி
செம்புதனில்சுத்தசலமதைகொண்டு *
திருப்பால்க்கரையுதுகடந்து துரை
தேவேந்திரன்கொலுவில்சென்றுதன்கர்த்தன் *
ஒருபிடிவாகவெருதட்டில் கொட்டி
உத்தமன்தனகர்த்தனிருகைபாலேந்தி *
திருவளிகொணத்திலடிசுற்றி அதைச்
சுழற்றிஎறிந்துமுல்லைதாண்டவராயன் *
வேதமொழிமறையோர்கள்கூற துரையை
வேளாளன்மூன்றுதரஞ்சுற்றிவந்துநின்று *
பாதமதில்பன்னீர்சொரிந்து பின்பு
பட்டுருவீரமனுதானேதடைத்து *
தங்கமலர்வெள்ளிமலரெடுத்து துரை
சாமியுடபாதத்தில் தானுஞ்சொரிந்து *
செக்கைகுவித்தேமுல்லைமார்பன் நல்ல
ஜெயமண்டலேஸ்வரன்திருவடிதனிலே *
முடிசாய்த்துத்தாண்டவராயன் துலா
முத்துவடுகையாபாதத்தில்வீழ்ந்தான் *
இடமொன்றுமிருகையால்தாங்கி துரை
சீர்பெறவாசீர்வதித்தெழுந்திரென்றுசொல்லி *
யோதிரக்கையாலேதாங்கி அண்ணே
முடிமன்னுகாராளாசொல்லுகிறேன்கேளு *
விடுக்குமூத்தவனியண்ணே என்னை
வணக்கமாய்க்கும்பிடுதல் ஞாயமல்லசொன்னேன் *
ஆதிக்கநிலைநிறுத்திவைத்தாய் அண்ணே
அல்தானம்நிலைநிறுத்திவைத்தாய் *

என்னசங்கதிகொண்டுவந்தாய் அண்ணே
எந்தனுக்குச்சொல்லென்று கேட்டாரேதுரையும் *
ஆண்டவனே முத்துவடுகையா உனது
அடிமைநான்காராளன் சொல்லுகிறேன்கேளு *
உனைக்காணவந்தவகைசாமி அடியேன்
உள்ளபடிவேளாளன்சொல்லுகிறேன்கேளு *
திருச்சிறுப்பளிக்கோட்டைதனிலே யிருந்து
திசைமதுரைக்கோட்டைக்குவந்தானேகானன் *
நெல்லூர்சிராபளியிலிருந்து கானன்
நேர்தெற்கேமதுராபுரிக்கோட்டைவருகையிலே *
வரும்போதுகும்தானென்றுவந்தான் அந்த
மதுரைக்குவந்தபின்புகானுதுரையானான் * *
(அவனை) மைத்துனனென்றுறவாடி அவன்
மாசாபுலிச்சியைத்தங்கையென்றெண்ணி *
உடுப்புகள்வெகுவாகக்கொடுத்தேன் அந்த
உலோபியாங்கானனுக்கு விசுவாசமில்லை *
கட்டாதவுடுப்பைகட்டியனுப்ப துரையே
கானனுக்கெள்ளளவும்விசுவாசமில்லை *
திருப்பூவனங்கேழ்க்கிறான்சாமி நம்மிட
செல்வமுள்ளபார்த்திபனார் கேழ்க்கிறான்கானன் *
திருப்பூவனம்விட்டுவிட்டிடுவேன் நானே
சிவகங்கைகுடியிருப்புநிலைக்கொட்டான்கானன் *
இப்படிதாண்டவராயன்சொல்ல நல்ல
இயல்பாகமுத்துவடுகையருஞ்சொல்வார் *
வேணுமென்றுகானுதுரைகேட்டால் அண்ணே
வீணிலேசனியத்தையிழுக்காதேவேண்டாம் *
நாலுகோட்டைசோழபுரம்போதும் அந்த
நலங்கொண்டபார்த்திபனார்விட்டுவிடுமென்றார் *
மேலுமவனுடனேபகையாதே சண்டை
மேற்கொண்டுமவனுடனேயெதிர்க்கமுடியாது *
எந்தெந்தகிமைகேட்டாலும் அவனுக்
கில்லையென்றுமாத்திரஞ்சொல்லாதேவேண்டாம் *
மாபோஜன்யதுரையுடன்சேர்க்கை திருப்பூ
வனக்கோட்டைவிட்டுவிடுமந்திரியென்றார் *



இப்படிதுரைமகனுஞ்சொல்ல நல்ல
இயல்பாகவேளாளனேதுசொல்வானும் *
போபோபேய்கொண்டதுரையே உமது
புத்தியுமிம்மட்டோமுத்துவடுகையா *
சுண்டுவிரலிடக்கொடுப்பேனோ பாதர்
துரைவாசல்மதிமந்திரியதிகாரியடியேன் *
கண்டறியுமுனதடிமைசேதி என்று
காராளன்சொன்னமொழிகாதாரக்கேட்டு *
இப்படிதயிரியங்கள்சொன்னாய் அண்ணே
எப்படியவனைநீசெயங்கொள்வையென்றார் *
அப்போதுமுல்லைமணிமார்பன் சிங்கம்
ஆண்டவன்முகம்நோக்கியேதுசொல்வானும் *
ஆர்க்காடுநானுமிப்போநடந்து நல்ல
அனைவர்புகழ்நபாபுதனைக்கண்டுசந்தித்து *
தாக்காகவேபடைதிரட்டி அந்த
சற்சனர்துரைபெரியபிரட்டனையுங்கூட்டி *
மேவலர்கிரிடிமுசலாவி கர்னல்
மேஜர்துரைமுசியார்சறங்கியையுமழைத்து *
ஆவணிமாதத்திற்குள்ளாக அவனை
யனைவோருமறியவேதூக்காமல்விட்டால் *
என்பேருதாண்டவனல்ல சிங்கம்
எடுத்ததுவுந்தளகர்த்தமோகிரமுமல்ல *
பிடித்ததுவுமெழுத்தாணியல்ல பாதர்
போட்டதுவுந்திவாசுகம்பளியுமல்ல *
தன்னவர்சிறந்தபுவிபோற்றும் நல்ல
நாலுகோட்டைத்தளகர்த்தனல்லவென்றான் *
ஏற்கவேவீரியஞ்சொன்னாய் அண்ணே
இதற்குநான்மறுவயணஞ் சொல்லுகிறேன்கேளு *
ஆர்க்காடுபோகிறது அண்ணே எனக்கு
அன்பாகத்தோற்றவில்லைதாண்டவராயா *
அதுக்கனைநம்பலாமோ அண்ணே அந்த
துரோகிபறங்கிகளைநம்பவுங்கூடாது *
மெலுக்காயிதுவரைக்குமிருந்தோம் சும்மா
விருதாவிலேவடக்கேபோகிறாயண்ணே *

கொளுத்தான்பெருந்திருக்குந்தேசம் ஆதிலே
குடிகேடுமெத்தவுண்டுதிருச்சிறுப்பளியில் *
ஏழரைவருஷத்துப்பகுதி நாமும்
எள்ளளவும்வடக்குமுகங்கொடுத்தனுப்பவில்லை *
போனநாழியிலேநபாபு உன்னைப்
பிடித்தல்லோபாராவில்போடுவானென்றார் *
மானுபாவா முத்துவடுகையா உனது
மதிமந்திரிசம்பிரதாயஞ் சொல்லுகிறேன்கேளு *
காலாலேமுடிவதொருமுடிச்சு அதனைக்
கையினலவிழ்த்தாக்காலவன்தானபாபு *
மாலரனமம்முதலிசாய்பை பொன்
மலைவெளியிலிறுத்தவந்துபேட்டியுஞ்செய்து *
அவனிடத்தில்வெகுமதியும்வாங்கி சாமி
அவன்செவியைநான்பிடித்தாட்டுவேனென்றான் *
கவனுமுடன்முல்லைமணிமார்பா வடக்கே
கனமுடன்போய்வரயோசிக்கிறயண்ணே *
ஆர்க்காடுபோனவர்களண்ணே கொழுத்த
யானைவாயிற்கொடுத்த கரும்புல்லோமந்திரி *
போர்க்குரியதிருச்சிறுப்பளிக்கு அங்கே
போனவர்கள்திரும்பிவரக்கண்டோமன்மந்திரி *
மண்ணைதாளுண்டவர்களண்ணே இந்த
மன்னனிலுங்கோடிபடாமுல்லைமணிமார்பா *
என்றைக்கும்நிட்சயமோஅண்ணே இப்போ
என்மனதுக்கெள்ளளவுஞ்சம்மதிகளில்லை *
எந்தெந்தத்தேசங்கேட்டாலும் அவனுக்
கில்லையென்றுமாத்திரஞ்சொல்லாதேவேண்டாம் *
இந்தமொழிசொன்னீரோசாமி தேவர்
இப்படியோசெங்கோல்செலுத்துவீரோ *
ஒருகாசுசெலவழிக்காமல் சாமி
உனதுடைமைதிசைமதுரைபிடியாமற்போனால் *
தருமகுண முத்துவடுகையா உமக்குத்
தில்லையாம்பிரதானியாவதேனென்றார் *
எவ்வார்த்தைகேளாமம்போறு யுன்னை
என்றைக்குக்காண்பேனேமுல்லைமணிமார்பா



70

சாமியுடதிருநாமந்தன்னை அடியேன்
தலையின்மேல்வைத்துக்கொண்டார்க்காடுசென்று *
திசைகட்டொருகட்டாய்கட்டி நாளைத்
திருப்பூவனத்திசைபாகப்பாளையத்தைக்கூட்டி *
மறவருடதளகர்த்தனென்று இந்த
வையகமுழுதுமெனைச்சொல்லவேணுமென்றான் *
ஆர்க்காடுபோகிறபோது நல்ல
டக்காகப்போவென்றார் முத்துவடுகையர் *
சிக்கமேகெவுரிவல்லையா ஒரு
சேதிநான்வேளாளன்சொல்லுகிறேன்கேளு *
உரியரிசிபஞ்சகாலத்தில் கெவுரி
ஒருகோடிஜனத்தையும் ரட்சித்தநாதா *
ஒற்றைக்குதிரையேறாதே சாமி
உள்சுற்றுக்காட்டுவழியிஞ்சிநடவாதே *
நான்போய்வருமட்டுந்துரையே நம்மிட்
நாயகன்காளையார்கோயிலிலிருக்க *
இவிடத்திலின்னமிருந்தாக்கால் நாளை
மோசங்கள்வந்துவிடும்முத்துவடுகையா *
சொல்லிவாய்மூடுவதற்குள்ளே அப்போ
துரைமகனுமன்னன்முகமேறிட்டுப்பார்த்து *
அண்ணேவாதாண்டவராயா இப்போ
அன்பாகவொருவயணஞ்சொல்லுகிறேன்கேளு *
இவிடம்விட்டுஆர்க்காடுபோனால் உன்னை
என்றைக்குக்காண்பனேதாண்டவராயா *
பொன்மிகுத்ததிருச்சிறுப்பளிக்கு நீயும்
போகிறையேவுன்னழகுபார்க்கவேணுமென்று *
ஆண்டவன்முத்துவடுகையர் அந்த
நாழியில்காராஞ்சிகறுப்பனையழைத்து *
ராயப்பன்சேருவையையழைத்து அப்போ
நலங்கொண்டயானைதனைக்கொண்டுவாவென்று சொல்லி *
தேருமுடன்சிவிகைகளொடு அதிலே
தோரணப்பூச்சக்கிர அழகுடனும்வைத்து *
முத்துநாயக்கனையுமழைத்து நல்ல
முடிமன்னன்பொக்கிஷவீட்டையுந்திறந்து *

உக்கிராணவீட்டைத்திறந்து ஒரு
பெட்டியைத்திடமொன்றெடுத்துவரச்சொல்லி *
வச்சிரமணிப்பெட்டியைத்திறந்து அப்போ
வரிசைகளைவெளிதனிலேதிடமொன்றெடுத்துப் *
பத்துப்பொன்போருவையெடுத்து நல்ல
பச்சைக்கல்கடுக்கனொரு பாகையுங்கொடுத்து *
தங்கவளைமுன்கைமூதாரி பசுந்
தங்கமோகனமாலை சரப்பளிகொடுத்து *
தங்கமிகத்தகட்டுநிலையங்கி நல்ல
துதிபெறுவெள்ளாழனுக்குவெகுமதிகள்செய்து *
அழகுநான்பார்க்கவேணுமண்ணே சற்றே
ஆனைமேல்நீயேறிவாவென்றுசொன்னார் *
தளகர்த்தன்வெகுமதிகள்வாங்கி வெகு
தனத்துடனேயானைதனைமூன்றுதரஞ்சுற்றி *
நேராய்ச்சலாம்வாங்கிநின்று அப்போ
நேரில்நிற்குமுத்துவடுகையரைப்பார்த்து *
மெத்தவெகுதுடினஞ்செய்யாதே நம்மிட
மேனாட்டுக்கள்ளருடனெதிர்த்துப்பகையாதே *
பேட்டிசெய்துநான்வருமட்டும் நல்ல
பெருனசின்னையா நல்லண்ணதேவா *
தெற்குத்தென்பாரிசந்தனிலே, நல்ல
இடமாகயானைகட்டுக்கல்லுக்குமேற்கே *
தாருநிகர்மேல்வீடுதன்னில் முத்துச்
சுவர்ணகாமிமகன்கொலுவினிலிருந்தார் *
வலுவீரகெம்பீராபராக்கு என்று
மகிமந்த்ரியானைமேலிருந்துகும்பிட்டான் *
ஆண்டவனேமுத்துவடுகையா என்று
அரசர்புகழ்காராளன்கும்பிடும்போது *
சலுகைப்பெரியுடையானின்ற ராஜ
சுவர்ணகாமிமகன்முத்துவடுகையன் *
உத்தரவுமுல்லைமணிமார்பா இப்போ
உனதழகுகண்ணாலேபோர்த்தேனடா அண்ணே *
செத்தாலுமோசமுண்டு அண்ணே என்று
திருவ்டி சுற்றிப்போய்வாருமென்றுசொன்னாரப்போ *



நீரனும்போய்வாவென்றுரைக்க அப்போ
திருப்பினன்யானைதனைதாண்டவராயன் *
கட்டியர்பராக்கென்றுகூற நல்ல
கள்வளரும்வயிரவன்பட்டியுந்தாண்டி *
திருப்பத்தூர்சிதேவிதாண்டி வளர்
சிராவயலுடன்மருதங்குடியுங்கடந்து *
சிராவயல்ஒப்பமுந்தாண்டி தனது
திருவளருங்குன்ணக்குடிவந்தங்கேசேர்ந்து *
ஐம்பதுபொன்னெடுத்துக்கொடுத்து நல்ல
ஆண்டவன்குமாருக்குச்சிறப்புசெய்யச்சொல்லி *
மந்தாரைமுல்லையிருவாட்சி நல்ல
மகிழம்பூகுடைமல்லிகைசாத்தென்றுசொல்லி *
வெள்ளிமலர்பொன்மலருஞ்சாற்றி நல்ல
விதமானவில்வமலரர்ச்சனையுஞ்செய்து *
தாண்டவராயதளமந்த்ரி நல்ல
துயிரியமாய்க்கும்பிட்டு ஏதுசொல்வானும் *
வடக்கேநான்போய்வரலாமென்றால் சுவாமி
வலதுபுறங்கெவுளியதுசொல்லவேணும்சுவாமி *
வடக்கேநான்போகலாகாதென்றால் சுவாமி
வலதுபுறஞ்சொல்லவேணுமென்றான்வேளாளன் *
கேட்டுவாய்மூடுவதற்குள்ளே நல்ல
கெம்பீரமாய்த்தெட்சணமுத்தரவுமாச்சு *
சுவாமியினுத்தரவுதன்னை நல்ல
தளமந்த்ரிதாண்டவன்முந்தானையில்முடிந்து *
சந்தோஷமாய்வெளியில்வந்து நல்ல
தாண்டவராயதளமந்திரிமகிழ்ந்து *
வையாபுரிக்கரைதனிலேறி மலைநாட்
லாதிபதிசிவாசுக்கம்பளியிலிருந்து *
தம்பிவாதாமோதரம்பிள்ளை இப்போ
துயிரியமாயொருசேதிசொல்லுகிறேன்கேளு *
வம்பனும்சின்னமறவனேலை உனக்கு
வருதென்றுசந்தேகங்கொள்ளாதேயண்ணே *
வானஞ்சிறந்து வரம்பழிந்துபோனால் அந்த
வாய்க்காலும்நிற்குமோ அல்லிக்குளமன்று *

என்சீமையழிந்துபோகையிலே நில்த்து
இருக்குமோவுன்சீமைராமநாதபுரந்தான் *
சிவகங்கைப்பேட்டைபோகையிலே நில்த்து
நிற்குமோவுன்னுடைய ராமநாதக்கோட்டை *
மிலைக்கோட்டைதுருவமதிலிருந்து நமது
மதுராபுரிக்கோட்டைக்குவந்தானேகானன் *
மதுரைவளர்கான்சாய்புதுரையை நானும்
மைத்துனனென்றுசொல்லிபொப்பாரிபிடித்து *
மாசாவைத்தங்கையென்றுசொல்லி இப்படி
மரியாதையாய்நானும்யோசித்திருந்தேன் *
என்னவுபசாரஞ்செய்தாலும் அவனுக்
குள்ளளவும்மனதிலேவிசுவாசமில்லை *
நிலையானதிருப்புவனமும் என்னுடைய
நேரானபார்த்திபனூர்கேழ்க்கிறான்கானன் *
உன்னுடையதிருச்சுழிப்பள்ளி சீமை
யொருமிக்கக்கேழ்க்கிறான்கான்சாய்புநீலன் *
ஆற்காட்டுநபாபையழைத்துவந்து அவனை
அடிக்கவேணுந்திசைமதுரைபிடிக்கவேணுந்தம்பி *
அஞ்சலிலேயாற்காடுசென்று நபாபை
அழைத்துவந்துமதுரைநகர்பிடிக்கவேணுந்தம்பி *
இவ்வோலைகண்டநாழிகைக்கு தம்பி
எழும்பிநீகுன்னக்குடிவராமலேபோனால் *
நபாபைநானழைத்துவரும்போது எல்லோரும்
நகைக்கவேயுன்சீமைமுற்றுங்கொள்ளையடிப்பேன்! *
என்றுசொல்லிக்காயிதத்தையெழுதி அப்போ
இருபேர்க்கார்கையில்கொடுத்தனுப்பிவைத்தான் *
மண்டலம்புகழ்நகரந்தான்டி கல்வி
மருவுபுகழுருவாடிசெங்கமடைதான்டி *
ஆனந்தராதனூர்தான்டி நல்ல
அழகானவடக்கூர்விஜயானூர்தான்டி *
சீரானஆண்டங்குடிதான்டி நன்மை
சிறந்தோங்குங்காவனூர்தன்னையுங்கடந்து *
ராமநாதபுரக்கோட்டைதனிலே நல்ல
நாதியன்தாமோதரம்பிள்ளையரண்மனையில் *



சவுக்கையிலேதாமோதரம்பிள்ளை அப்போ
தயவாகதிண்டுமேல்சாய்ந்திருக்கும்போது *
காயிதத்தைகொண்டுவந்தார்க்காரன் நல்ல
கனகமுடிதாமோதரம்பிள்ளைமுன்புவைத்தான் *
வாசித்துக்கண்ணாலேபார்த்து அலை
வக்கணையெல்லாமறிந்துமனமுருகிக்கொண்டு *
யோசித்தாப்பின்னுமவனெழுந்து தளவான்,
ஒருநொடியில்தாய்பதத்தில்விழுந்துகும்பிட்டு *
ஆத்தாளேதாயேமாதாவே இதற்கு
ஆலோசனைமறுவயணஞ்சொல்லென்றுகேட்டான் *
பூத்தமலர்திரிலோகமாதா தனது
புனிதகுணபிள்ளையையேறிட்டுப்பார்த்து *
நானென்னசொல்வனடாதம்பி நமது
ராமனுதனிடஞ்சென்றுகேளுபோவென்றாள் *
போவென்றுசொன்னவுடன்தளவன் நல்ல
புகழ்பெற்றஆசாரவாசலுந்தான்டி *
சீரானபிள்ளைமடந்தான்டி நல்ல
சிறப்பாகமண்டபந்தோணித்துறைவந்து *
இராமுழுதும்நித்திரைசெய்து நல்ல
நற்பாலன்விடிந்தபின்தோணிமேலேறி *
சீக்கிரமேனுந்தாமோதரம்பிள்ளை அந்த
க்ஷணத்திலேராமேஸ்வரந்தனக்குவந்து *
ராமலிங்கத்தைப்பூசைசெய்து ராம
நாயகர்பாதமதில்விழுந்துதெண்டனிட்டு *
வடக்கேநான்போகவேணுமென்று ஒரு
மனதாகவிருக்கிறேனுன்னுடைத்தொண்டன் *
இடந்தாடனேவடக்கேபோவென்றால் எனக்குத்
தெட்சணஞ்சொல்லவேணுஞ்சீரரனெகவுளி *
வடக்கேநீபோகவேண்டாமென்றால் எனக்கு
இடதுபுறந்தெட்சணஞ்சொல்லவேணுமென்றான் *
செயமாகும்வடக்கேபோவென்று ராமர்
திருவுளப்பில்தெட்சணக்கெவுளியதுசொல்ல *
இயல்ராமருந்தாஞ்சொல்ல டில்லி
ஏயசேதுபுரம்வரைக்கும்செல்லுமென்று *

மாப்பிள்ளைதேவனுக்குமோலை முன்னே
வைத்தகால்பின்வாங்காதமறவனுக்குமோலை
குண்டையூர்மறவருக்குமோலை சர்க்கரை
கோட்டைநாகமங்கலநாட்டார்க்குமோலை *
கண்டெழுதிநான்வடக்கேபோறேன் போய்
காரியம்நபாபிடத்திற்பேசிவருமட்டும் *
என்சீமைதனிற்களவுபோனால் நெருப்பா
யெரித்திடுவேனுங்களையென்றெழுதியனுப்பி *
பஞ்சவர்னடால்விருதிலங்க நல்ல
பரிநகுலதாமோதரம்பிள்ளைவெளிவந்தா *
கொம்புபேரிகைபூரிமுழங்க சிங்கக்
கொடிமகரக்கொடிகருடக்கொடியூஞ்சலாட *
தம்பூருபுள்ளாங்குழல்முழங்க வீர
தவண்டைமுதல்மல்லாரிதாரிகைமுழங்க *
இருபதுசோடுகனகதப்பும் நல்ல
ஒட்டைமீதிலே பேரிகைமுழங்க *
அருகில்மயிரீட்டியொருகோடி நல்ல
அழகானவேலீட்டிக்காரரொருகோடி *
கத்திக்கேடையக்காரர்சூழ குதிரைக்
காரர்படையிருநூறுமுன்னேநடக்க *
வெற்றிவளைதடிக்காரர்சூழ நல்ல
வெடிக்காரரொறியம்புக்காரர்புடைசூழ *
வெண்கவரியாலவட்டம்வீச கட்டியர்
மேமெலச்சரிக்கைபராக்கென்றுகூற *
சிங்கமுகத்தண்டிகையிலேறி பாதர்
செயசிங்கம்தாமோதரம்வடக்குமுகம்நோக்கி *
உருவாடிசெங்கல்மடைதாண்டி அப்போ
உயர்ந்ததோரணுமந்தக்குடியுங்கடந்து *
பெருநாட்டுக்கல்லியுந்தாண்டி அப்போ
போனதாமோதரன்கூடாரமடித்தான் *
கூடாரமடித்ததோர்சேதி நல்ல
கெம்பீரமாய்நல்லதாண்டவனுங்கேட்டு *
பெரியவீட்டுக்காரன்வாரான் என்று
பேசியேதாண்டவராயனுமெழுந்து



இருவர்சமஸ்தானமுமொன்று நாமும்
எதிர்கொண்டுகாணவேணுமென்றவனிவந்து *
காரைக்குடிக்கோவிலுந்தாண்டி நல்ல
கழனிசேரமாபதிக்கெடித்தலமுந்தாண்டி *
கனகமிருக்கலிப்புலிமைதானந் தன்னில்
காராளரிருபேருஞ்சரிபேட்டிசெய்து *
தனதாகக்கூடாரந்தன்னில் நின்று
தலைகாணிமேற்சாய்ந்தாரிருபிள்ளைமாரும் *
மன்னவன்தாமோதரம்பிள்ளை செம்பொன்
மருவுதாண்டவராயபிள்ளைதனைப்பார்த்து *
அண்ணேவாதாண்டவராயா என்னை
யழைத்ததொருகாரியஞ்சொல்லென்றுகேட்க *
தம்பிவாதாமோதரம்பிள்ளை இப்போ
தயிரியமாயொருசேதிசொல்லுகிறேன்கேளு *
உனையழைத்தசேதிதனை நம்பி நானும்
உள்ளபடிசத்தியமாய்ச்சொல்லுகிறேன்கேளு *
நெல்லூர்சிராபளியிலிருந்து முன்னே
நேர்தெற்கேகான்சாய்புமதுரைக்குவந்தானே *
வருகையிலேகும்தாரென்றுவந்தான் அந்த
மதுரைக்குவந்தபின்துரையானவனும் *
வினையானதிருமதுரைக்கானன் மெத்த
மிரட்டியேநம்மையேய்த்துப்பகட்டுறான்தம்பி *
அன்பாகவடக்கேபோய்ப்பேசி அவனை
அடிக்கவேணுந்திசைமதுரைபிடிக்கவேணுமென்றான் *
இப்படியாதாண்டவா அண்ணே நாம்
இருபேரும்நபாபெதிரிற்போகக்கூடாது *
புலித்தேவனிருக்கிறானண்ணே நாமும்
போனவுடனவன்கோளுசொல்லுவானண்ணே *
ஏழரைவருஷத்துப்பகுதி நாம்
இருபேருமொருகாசுங்கொடுக்கவேயில்லை *
தோப்பராபணத்துக்கு நம்மை அண்ணே
தொந்தரைசெய்தொற்றைக்காலில்நிற்கவைப்பானண்ணே *
ஆற்காடுபோகிறது அண்ணே நமக்
கழகல்லமுல்லைமணித்தாண்டவராயா *

இப்படிதாமோதரன்சொல்ல அதற்
கேதுசொல்வான்முல்லைமணித்தாண்டவராயன் *
போபோபேய்கொண்டதம்பி உன்னுடைய
புத்தியுமிவ்வளவோதாமோதரம்பிள்ளை *
காலாலேமுடிவதொருமுடிச்சு அதைக்
கையாலவிழ்த்தால்வன்றனபாடு *
அடிவதனன்நபாபுதுரைசாய்பை நமது
சொற்படிகேழ்க்கவேசெய்வேனுமென்ருன் *
ஏனிந்தவபலோசனையண்ணே நபாபை
இழுத்துவந்தால்பொல்லாதமோசம்வருமண்ணே *
வழிப்பாதைதெரியாமலண்ணே அவனும்,
வடக்கையேயிருக்கிறான்மம்முதலிசாய்பு *
மார்க்கமாய்வெகுபடைகளிருக்க நமது
மடக்குகத்திமுன்னூறுவரைக்குமேயிருக்க *
பதினாயிரம்பட்டாயிருக்க கையில்
பதினைந்துபீரங்கிதயாராயிருக்க *
குதிரையொருநூறுமேயிருக்க சட்டி
கோடாநுகோடியிருக்குதடா அண்ணே *
இருபேர்தளத்தையுங்கூட்ட முப்பத்
தேழாயிரஞ்சனங்கூடுமடா அண்ணே *
இருணவலிகீழ்க்காடுவரைக்கும் நாமும்
இசைகம்பநாட்டியேதோரணக்கட்டிடலாம் *
கான்சாய்புவந்தெதிர்த்தாக்கால் என்ன,
கைக்கத்திசித்திரத்தைப்பாரடா அண்ணே *
இப்படிதாமோதரன்சொல்ல நல்ல
இயல்பானதாண்டவனுமேதுசொல்வானும் *
ஏனிந்தவிம்புநான்தம்பி உனக்கு
எவ்வளவும்புத்தியில்லைதாமோதரம்பிள்ளை *
(அவன்) கருமருந்துக்காரனடாதம்பி அந்தக்
கானனுடன்சண்டைசெய்துஜெயிக்கமுடியாது *
இருபேர்க்கும்ஜனச்சேதமாகும் நாமும்
எதிர்நிற்கக்கூடாதுதுரைகானரேடே *
நபாபையழைத்துவந்துவிட்டு நாமும்
நலியாமலிருந்தழகுபார்க்கலாமென்ருன் *



அண்ணே
பூபாலன்தாமோதரம்பிள்ளை *
புத்திக்குச்சரிப்போனபடியென்றுரைத்தான் யப்பன்
சுதினந்திலேபொன்கொழியாண்டி *
தன்னைத்தளகர்த்தனழைத்துவரச்சொல்லி இதற்குப்
பாளையம்போய்வருமட்டும் *
படிச்செலவிருவர்க்குந்தளப்பெருக்கதிகம் அதற்கு
வேளைக்காயிரம்பொன்செலவாகும் *
விபரமாய்நீயென்னதருவையென்றுகேட்டான் கானு
(சாமி) தருகிறேன்செல்லும்பணமெல்லாம் *
சாய்பைநீர்தாக்குமேற்றிவிடுமென்ருன் வந்த
இருபேருஞ்சந்தோஷமாக *
இறங்கினார்குண்ணக்குடிவையாபுரிக்கரையில் நாளை
வையாபுரிக்கரைதனிலேயிறங்கி *
வடக்கேதான்பயணமென்றுறுதியாய்ச்சொல்லி முப்பத்
இருபேரும்யானையின்மேலேறி *
தேழாயிரஞ்சனமுமெண்ணிக்கைகொண்டு அப்போ
மூன்றானைமேலேநகபத்து *
முழக்குதேயெழாட்டைமேலேநகாரா பாதர்
முப்புதுசோடுகனகதப்பு *
முடிமன்னன்நாற்பதுபேரிகைமுழங்க நல்ல
திருக்கீழக்குடிதனிலேவந்து *
சிவாலயத்தைமூன்றுதரம்வலமாகவந்து சுவாமிக்கு
அறுபதுபொன்னெடுத்துக்கொடுத்து *
அர்ச்சனைசெய்தபின்தெரிசனைகள்செய்து நல்ல
மறவருடன்சிவஞானதாண்டி *
மன்னவர்களிருபேருமைதானந்தாண்டி அப்போ
பாம்பூருமைதானவெளியில் *
பாளையமுமிறங்கியக்கிருந்தயாத்திரத்தில் அந்த
தொண்டைமான்நமணபூபாலன் தி
துரைராஜன்தளகர்த்தன்தூவண்ணபிள்ளை வடக்கே
அண்ணேவாதனுவண்ணபிள்ளை *
ஆற்காடுநபாபைநான்காணவேபோறேன் எனக்கு
கோட்டையுடவளப்பந்தெரியாது *
குடிரொன்றுசத்திப்புவ்யணந்தெரியாது

மறுவயணம்தந்திரமுஞ்சொல்லி எனக்கு
வரவிடவேணுமென்றெழுதியேயனுப்ப *
தனுவண்ணபிள்ளையதைவாங்கி அப்போ
தயிரியமாய்வக்கணையைவாசித்துப்பார்த்து *
சிங்கமேதாண்டவராயா ஒரு
சேதிநான்சொல்லுகிறேன்கேளுதளகர்த்தா *
சனத்தைவிட்டுஉங்களிருவரையும் அவன்
தாப்பாகக்கோட்டைக்குள்வரச்சொல்வானன்னே *
கோட்டைக்குள்போகவேவேண்டாம் வெளியே
கோணமலைமைதானமதில்துரையைவரச்சொல்லி *
இருபேரும்பேட்டிசெய்யுமென்று அப்போ
எழுநூறுபேர்தலையில்உலுப்பைகட்டியனுப்ப *
தனுவண்ணனுலுப்பைகளையெல்லாம் அப்போ
தள்கர்த்தரிருபேருங்கண்ணாலேகண்டு *
பூரணியைவாசித்துப்பார்த்து அப்போ
பொங்கமாயிருபேருஞ்சந்தோஷமாகி *
இதுமட்டுஞ்சொன்னதேபோதும் என்று
இலுப்பைபூர்மைதானவெளியுங்கடந்து *
சாத்தனூர்வெளியுங்கழித்து நல்ல
தைரியமாய்ப்பொன்மலைக்குமேற்பாரிசத்தில் *
கோட்டைக்குத்தென்பாரிசத்தில் அப்போ
குழியொன்றுயிருபேருமிறங்கினமாத்திரத்தில் *
சிங்காரத்தோப்பில்நபாபு அப்போ
திவாசுக்கம்பளியில்நித்திரைபோம்போது *
கோட்டைமேலிருந்தசிப்பாயி அப்போ
கோடையிடிபோல்ராமன்ஏறிட்டுப்பார்த்து *
அலங்கம்விட்டுக்கீழேகுதித்து நல்ல
யானைகட்டுமண்டபத்தெருவுங்கடந்து *
ராமசாமிவாசற்படிதாண்டி அப்போ
நபாபுதேவடியில்வந்துநின்றுராமன் *
அவுல்தார்சுபேதாருமாரை நம்மிட
ஆண்டவன்நபாபுதுரையெங்கேயென்றுகேட்டான் *
சிங்காரத்தோப்பில்நபாபு இப்போ
திவாசுக்கம்பளியில்நித்திரைகளென்றார் *



116619

சொல்லிவாய்மூடுமுன்னேராமன் நபாபு
சிங்காரத்தோப்பிற்குள்சீக்கிரமாய்வந்தான் *
மம்முதலிநித்திரைவேளை அப்போ
மறத்திமகன்புலித்தேவன்துடைகுத்தியிருக்க *
நட்டிபெழுப்புபுலித்தேவா கோட்டை
தனங்கொண்டுயின்றைக்குக் களவுபோகுதென்றான் *
திடுமொன்றுமம்முதலியெழும்ப வெளியே
தென்பாரிசந்தனில்கனகதப்புமுழங்க *
கனகதப்புமுழங்குதொருபக்கம் அதனைக்
கண்வளர்நபாபுசாய்பேதென்றுகேட்க *
ஆருடையதளமோவதுசாமி அதனை
அறியவேகூடவில்லைநபாபுசாய்ப்பு *
கார்மேகம்வந்துவளைந்தாற்போல் நமது
காக்காதோப்புவெளிகொள்ளவில்லைசாய்ப்பு *
கேடிலும்வந்திட்டான்முன்னே அதிலே
கெடிசிங்கமுகுறங்கிபெரியதுரைவந்தான் *
சின்னப்பிரட்டனும்வந்தான் அப்போ
சிராகமும்வரும்சலாம்வாங்கிக்கொண்டார் *
அப்போதுமம்முதலிசாய்ப்பு பாதர்
அஞ்சாதுரைசின்னப்பிரட்டனைப்பார்த்து *
வந்தவர்களின்னதென்றறிந்து நீயும்
வகையாகவெந்தனுக்குச்சொல்லென்றுசொல்ல *
தீனிக்கண்ணாடிவைத்துபிரட்டன் அந்தத்
திசைநோக்கியேறிட்டுப்பார்த்ததுசொல்வான் *
ஆண்டவனேமம்முதலிசாய்பே உனது
அடிமைநான்பிரட்டனினிசொல்லுகிறேன்கேளு *
ஐதருடபாளையமுமல்ல சாய்பு
அன்பானமூவரசர்பாளையமுமல்ல *
தஞ்சாவூர்பாளையமுமல்ல நமது
சாதித்துரைமார்கள்பாளையமுமல்ல *
கருக்காட்டுமறவர்களைப்போலே எனக்குக்
காணுதுகுத்திட்டிதோணுதுசாய்பு *
சண்டைக்குவந்தவர்களல்ல இவர்கள்
சந்திப்புக்குவந்தாராகக்காணுதென்றான்

(அப்போ) திடீரென்று நபாபுசாய்பெழுந்து வெளியே
தெற்கேபோகவேணுமென்று நடக்கும்வேளையிலே *
மருதுமல்லிகான்துரையும்வருக அந்த
மன்னவன்கேமல்துரைபின்னாலேவருக *
துரைபெரியபிரட்டனும்வருக பாதர்
ஜாடியானகர்னல்துரைபின்னேவருக *
பாட்சாகிகோண்டனுடனே நெருங்கி
பத்துப்பாருசிப்பாய்கள்சுற்றிலும்வருக *
தேவேந்திரன்கொலுப்போல சாய்பு
தெற்குக்கோட்டைத்தலைவாசல் அலங்கத்திலேறி *
குபீரென்று ஏறிட்டுப்பார்த்து அப்போ
கோபமுடன்மம்முதலிகலக்கமேகொண்டு *
பீரங்கிசிப்பாய்களையழைத்து மூன்று
பீரங்கியைத்திருப்பவுத்தாவுசெய்து *
மந்திசத்துருப்பிலே நூறு நல்ல
வகையானகோண்டன்துருப்பிலொருநூறு *
பிரட்டனதுதுருப்பிலேயும்நூறு இப்படி
பிரியமாய்மூன்றுகுதிரைகளைக்கூட்டி *
வந்தவர்களாரடாபூலி அவர்கள்
வளப்பந்தெரியுமேபார்த்துச்சொல்லென்றான் *
சேதுபதிசின்னமறவன் சேது
சமஸ்தானமென்றுசொல்லக்கேட்டிருப்பேனென்றான் *
ஆளுக்காலர்க்காரராமு அவர்க
ளாரென்றுபோய்நீயும்கேட்டுவாவென்று *
மம்முதலிதேவடிபோய்ச்சேர்ந்தார் ராமன்
வருகிறான்தெற்குக்கோட்டைத்தலைவாசல்தாண்டி *
கான்மியாபள்ளியுந்தாண்டி நல்ல
கனமானதஞ்சைநகர்பாலங்கழித்து *
ரெட்டைமலைவீதியுந்தாண்டி அப்போ
நேரிட்டகாக்காய்தோப்பையுங்கழித்து *
பொன்மலைமைதானவெளியில் ராமன்
பிள்ளைமார்சமுகத்தில்வந்துநின்றுகொண்டு *
வந்தவர்களாரென்றுசொல்லி ஒரு
வசனம்நபாபுதுரைகேட்டுவரச்சொன்னார் *



70

ம்றவருட்பிரதானிநாங்கள் இங்கே
வந்தோம்நபாபிடம்சொல்லுபோராமு *
சண்டைக்குவந்தீரோநீங்கள் இப்போ
சந்திப்புக்குவந்தீர்களோகேட்டுவரச்சொன்னார் *
நகப்பனதுவளவுக்குராமு நாங்கள்
சந்திப்புக்குவந்தோமென்றுசொல்லுபோராமு *
திரும்பினார்க்காரராமு பாதர்
சிங்கம்நபாபுதுரைதேவடியில்வந்து *
ஆண்டவனேமம்முதலிதுரையே நான்
அறிந்துவந்தசேதிதனைச்சொல்லுகிறேன்கேளும் *
மறவருட்பிரதானியவர்கள் சாய்பு
வந்திருக்கும்வேடிக்கைசொல்லமுடியாது *
இவர்களையிப்படிவந்தால் இவர்கள்
துரைவந்தாலெப்படியிருக்குமோவென்றான் *
புறக்கியிலேயிருந்தபுலித்தேவன் நல்ல
புலிக்குட்டிநபாபவரையேறிட்டுப்பார்த்து *
வெகுமோடியாய்வந்தானென்று மெத்த
வீரியமாய்ச்சொன்னனேயர்க்காரராமன் *
முத்தவர்கள்சீமையிலேவிளையும் சாய்பு
ரசக்கிணறுசேதுபதிசீமையிலேயுண்டு *
முப்போகம்விளையுமவர்சீமை அங்கே
முசிபர்நவ்வையநதிசேர்ந்ததவன்தேசம் *
பனங்காடுபெருத்ததவன்சீமை அதிலே
பத்துநிலையேரிகள்மெத்தவுமுண்டு *
கல்லுப்படாதகொருசோறு மதிலே
முள்ளுப்படாதமீன்மறவருட்சீமை *
காசிமுதலாகத்திரிந்தாலும் மறவர்
சீமையைப்போலொருதேசங்கிடையாதுசாய்பு *
இருபத்தினுலட்சம்பொன் சீமை
இவர்களையாளுமிருபிள்ளைமாரும் *
இருபிள்ளைமார்களையும்பிடித்தால் தேச
மெல்லாமொருகுடைக்கீழாமென்றான் *
இருபிள்ளைமார்களையும்பிடிக்க சந்திரம்
பூலித்தேவாமறுவயனத்தைச்சொல்லென்றுகேட்டார் *

சன்றோடேவந்தானேயானால் முல்லைத்
தாண்டவராயனைவெல்லப்போகாது *
முப்புறுமேநான்பென்றுசொல்லி நபாட
முடிமன்னர்வெளியில்வரக்கூடாதிப்போ *
சத்திக்கேடயமுதலாய்வேண்டாம் உனது
கனமானஅடப்பக்காரர்முதலாகவேண்டாம் *
இருபிள்ளைமாரையும்நபாபு இந்த
நாழிகையில்கோட்டைக்குள்வரச்சொல்லுமென்றான் *
இப்படிபுலித்தேவன்சொல்ல ராம
ளிடத்திலேநபாபுசாய்புசங்கதியைச்சொல்லி *
தந்திரமாயிருபிள்ளைமாரை இந்த
நாழியில்கோட்டைக்குள்கூட்டிவாவென்றார் *
வருகிறானர்க்காரராமன் அப்போ
மம்முதலிதேவடிகாணுவந்தாண்டி *
தெற்குக்கோட்டைவாசலுந்தாண்டி ராமன்
திடமொன்றுபிள்ளைமார்சமுகத்தில்வந்து *
அரோபிள்ளைமுல்லைமணிமார்பா பாதர்
அனைவர்புகழ்நபாபுசாய்புசொல்லுகிறாரண்ணே *
முப்புறுமேநான்பெங்கள்துரைக்கு இப்போ
முடிமன்னன்கோட்டைவிட்டுவெளிவரக்கூடாது *
மனிதர்களொருவருங்கூடாது நல்ல
வயணமுடனேசத்திகேடையமும்வேண்டாம் *
இருபிள்ளைமாரையும்நபாபு இந்த
நாழிகையில்கோட்டைக்குள்கூட்டிவரச்சொன்னார் *
நீங்கள்வந்தவேளைநல்லவேளை இப்போ
இருவருமெழுந்திருந்துவாருங்களென்றுசொன்னான் *
இப்படியர்க்காரன்சொல்ல அதை
இந்திரன்தாமோதரம்பிள்ளையுங்கேட்டு *
அண்ணேவாதாண்டவராயா இப்போ
அன்பாகவொருவயணஞ்சொல்லுகிறேன்கேளு *
குன்னக்குடிதனிலேயிருந்து இருக்
கோட்டையூர்வரைக்குநான்சொன்னேனேபுத்தி *
கேளாமல்வந்ததேயேதண்ணே இப்போ
கேடுவந்துநேர்ந்ததேயென்னசெய்வோமென்றான் *



21

போபோபோய்கொண்டதம்பி உனது
புத்தியுமிம்மட்டோதாமோதரம்பிள்ளை *
வாட்டநீஅர்க்காரராமு ஒரு
வார்த்தைநான்வெள்ளனச்சொல்லுகிறேன்கேளு *
பெண்டாட்டிபிள்ளையையும்விட்டு நாங்கள்
பெரியோர்கள்சமஸ்தானமாளிகையும்விட்டு *
துரைமகன்குழந்தையையும்விட்டு இந்தச்
சபானுவருஷத்துப்பஞ்சகாலத்தில் *
தகப்பனைக்காணவேணுமென்று இத்தனை
தனித்தோடேவந்தமேயர்க்காரராமு *
இருவரையும்வரச்சொல்லிசொல்ல உங்கள்
ஈஸ்பான்அல்லாவுக்கேற்குமோராமா *
இருவரையும்வரச்சொன்னபோதே எனக்கு
இருதயம்கல்வரமாயிருக்குதடாராமா *
சத்திப்புயெங்களுக்குவேண்டாம் உங்கள்
சாய்புகிட்டமறுவயணஞ்சொல்லுபோராமா *
போகாதேமுல்லைமணிமார்பா எங்கள்
புலிக்குட்டிநபாபிடத்தில்சேதிசொல்லிவாரேன் *
அதுவரைக்கும்பாளையத்தைநிறுத்தி என்று
அர்க்காரராமனுநட்டந்திட்டான்திரும்பி *
திடமொன்றுசமுகத்தில்வந்து பாதர்
சிங்கம்நபாபுசலாம்பண்ணிக்கொண்டு *
ஆண்டவனேநபாபுசாய்பே உனது
அடிமைநானொருவயணஞ்சொல்லுகிறேன்கேளு *
அதிலொருவன்பட்டாணிவாரான் அவனும்
அல்லாவைவணங்கிறான்சொல்லப்போகாது *
அறிந்துஇருப்பையடாபுலி அவ
னோடமறுவயணஞ்சொல்லென்றுகேட்டான் *
அவன்தான்தாண்டவராயன் அவன்
வார்த்தைக்குமறுவார்த்தைசொல்லமுடியாது *
இப்படிபுலியுஞ்சொல்ல கேட்டு
எதுசொல்வான்நபாபுக்குஅர்க்காரராமன் *
தகப்பனைக்காணவேணுமென்று இத்தனை
தனித்தோடேவந்தானும்தாண்டவராயன் *

இருவரையும்வரச்சொன்னபோதே அவனுக்கு
இஷ்டமேயில்லைபாம்இவிடம்வந்துபோக *
சந்திப்புமுறிந்ததென்றுசொன்னான் அவன்,
சனத்தோடேசிவகங்கைபோறேனென்றுசொன்னான் *
நபாபைநான்கண்டுவருமட்டும் உனது
நல்மானபாளையத்தைநிறுத்தென்றுவந்தேன் *
இதற்குநீர்மறுவபணம்சாய்பு எனக்கு
இப்போதேசொல்லுமென்றுகேட்டானேராமன் *
மறத்திமகன்சொல்மொழியைக்கேட்டு பாதர்
மம்முதலிசாய்புதானேட்டுசொல்வானும் *
கோட்டைக்குத்தென்பாரிசத்தில் அங்கே
குளிர்ந்ததோர்காக்காத்தோப்புவெளிதனிலே *
மூன்றுமூலைகூடாரமடித்து மூன்று
மூன்றுநல்லபிறங்கிதானுமேயேற்றி *
பதினைந்துகுறுக்குவெளிபரப்பு அங்கே
பண்பானபூட்டந்தலங்காரிக்கச்சொல்லி *
நாற்பதுபறங்கி நாற்காலி அதிலே
நறுசவுக்கமாகவேபோட்டிடச்சொல்லி *
ஏழுடாருசுற்றிலும்வைத்து நல்ல
ஈஸ்பராந்நபாபுதுரைபுறப்பட்டார்வெளியில் *
எதிரேர்வெள்ளிஅவுதாவில் அப்போ
இருபுறமும்தம்பூருமுழக்குமொருபக்கம் *
நகபத்துமுழக்குமொருபக்கம் அங்கே
நகாராமுழக்குவதுசொல்லப்போகாது *
முன்னூறுதுருப்புக்குதிரை நெருங்கி
முன்னணியாகவேவருதுபிறகாலே *
கருஞ்சட்டைக்காரனொருபக்கம் நல்ல
கறுப்புவர்ணப்பறங்கிகளைச்சொல்லமுடியாது *
செஞ்சட்டைக்காரனொருபக்கம் சூழ
சிங்கம்நபாபுதுரைவெளியில்வருகையிலே *
காலையில்செம்மானமெழுந்தாற்போல் பாதர்
கனகமுடிநபாபுதுரைபுறப்பட்டார்வெளியில் *
துரைவந்துகொலுவிருந்தாரொன்று அப்போ
ஜாடியாகத்தாண்டவனும்வெளியிலேவந்து



தம்பிவாதாமோதரம்பிள்ளை நல்ல
தளவானேஅவுதாவிலேறடாவென்றான் *
அவுதாவில்நானேறமாட்டேன் தம்மா
ஆனைமேல்நீஏறிவாவென்றுசொன்னான் *
பெரியவீட்டுக்காரனல்லோநீயும் தம்பி
உனைவிட்டுயானைமேலேறமாட்டேனும் *
அதினாலேதோஷமொன்றுமில்லை தம்மா
ஆனைமேலேறடாமுல்லைமணிமார்பா *
ஆனைமேல்நானேறியிருந்தால் இறங்க
அரைநாழிசெல்லுமேமுல்லைமணிமார்பா *
ஏறுவதுபஞ்சகலியாணி இன்றைக்
கெடுக்கிறதாண்டுகையிலாண்டுமுகப்பட்டா *
நபாபுகவுத்துவந்துசெய்தாக்கால் நமது
நாயகன்மறவனுக்குப்பேரிருக்கவேணும் *
வெட்டுறேனொருவெட்டுபாதர் என்று
மீசைமேல்கைபோட்டான்தாமோதரம்பிள்ளை *
எதுவந்துநேர்ந்தாலுந்தம்பி நமது
ஈசன்மகன்குமரன்கிருபையிருக்குதென்று *
இருபேருமெண்ணிக்கைகொண்டு முப்பத்
தேழாயிரஞ்சனமுமெண்ணிக்கைகொண்டு *
துப்பாக்கியொருபுறம்வருகுது நல்ல
தடியானைப்போகியொருபுறம்வருகுது *
சஞ்சாலியொருபக்கம்வருகுது அப்போ
தனக்கொண்டவேல்காரனொருபுறம்வருகுது *
மின்னல்மழைமாரியதுபோலே அதிலே
வெள்ளிகட்டுத்துப்பாக்கிசொல்லப்போகாது *
ஆயிரந்துப்பாக்கிமட்டும் தனது
யானைதனைச்சுற்றிவரச்சொன்னான்காராளன் *
மூன்றானைமேலேநகபத்து அப்போ
மூட்டினானேமொட்டைமேலேநகாரா *
அனுமந்தடாலுந்துலங்க நல்ல
அழகாவலம்புரிச்சங்குநின்றாத *
ஐக்கம்படாலுந்துலங்க அதிலே
சந்திராகாந்திப்பட்டாடையிருபுறமும்வீச *

மகரக்கொடிவிருதுநின்றிலங்க நல்ல
வளமானபூச்சக்கரக்குண்டைகள்துலங்க *
திருமலைநாய்க்கனுக்குத்தோண்டன் டப்பை
எழுபதுபாளையக்காரருக்குமுண்டன் *
சத்ராதிகொட்டமடக்கியென்று நல்ல
தைரியமாயிருபுறமுங்கட்டியங்கூற *
தேவேந்திரன்வந்தாற்போலே பாதர்
நின்றிருபெரும்புறப்பட்டார்வெளியில் *
புறத்திலேயிருந்தபுலித்தேவன் அப்போ
புலிக்குட்டிநபாபுசாயபுக்குசொல்வானும் *
ஆண்டவனேமம்முதலிசாயபே உனது
அடிமைநானொருவசனஞ்சொல்லுகிறேன்கேளு *
எத்தனையோகமிருந்தாலும் இவர்கள்
பட்டோலையெழுதுகிறவெள்ளாழசாதி *
ஆண்டவனீர்கீழிருக்கையிலே அவர்கள்
ஆனைமேல்வருகிறதுசம்மதியோவுமக்கு *
யானைவிட்டுக்கீழேயிறங்கி அவரைக்
கால்நடையாய்க்கூட்டிவரச்சொல்லுகவென்று *
அர்க்காடராமனையழைத்து துரை
ஆலோசித்துமம்முதலியேதுசொல்வானும் *
பிள்ளைமாரிருவரையும்ராமா இப்போ
கால்நடையாய்வரச்சொல்லிக்கூட்டிவாவென்றான் *
ஒருபட்டாளந்தன்னைக்கூட்டி ராமன்
உயரானைத்தம்பிக்கையைக்கையால்பிடித்து *
அரேபிள்ளைமுல்லைமணிமார்பா நமது
அரசன்நபாபுதுரைசொல்லுகிறாரப்பா *
ஆண்டவன்கீழிருக்கையிலே நீயும்
ஆனைமேல்வருகிறதுசம்மதியோவுனக்கு *
ஆனைவிட்டுக்கீழேயிறங்கென்று அப்போ
ஆயிரந்துப்பாக்கிக்குந்தாவினாலே *
ஒருபலித்தாயானையின்மேல்மோத பாதர்
உத்தமன்தாமோதரனெதிரிட்டுப்பார்த்து *
எறிஞன்பஞ்சகலியாணி அப்போ
இடதுகையில்வாங்கினன்ரண்டுமுகப்பட்டா *



வலதுகையிலேந்துமணிக்குறடா பாதர்
வாங்கியேகடிவாளந்தனைதனிலேணைத்து *
ஆனைதனைமுன்னுதாக்குசுற்றி பாதர்
அதட்டிநபாபுதுரைபாளையத்தைப்பார்த்து *
யானைவிட்டுவிலகுவிலகென்று நல்ல
அழகானயானைதனையடிக்கிறதுபோல *
குதிரைதனையடிக்கிறதுபோலே வைத்துக்
கொறுத்திறான்நபாபுசனத்தின்மேல்பூசை *
ஒருத்தரோடொருத்தர்தட்டுகெட்டு அவர்கள்
ஒருமிக்கப்பின்வாங்கிநெளிக்கும்வேளையிலே *
அவுராமேலிருந்ததளமந்திரி நல்ல
அதிவீரன்முல்லைமணித்தாண்டவராயன் *
மிஞ்சாதேபொறுபொறுதம்பி இது
வெள்ளைக்காரர்பெருத்தவிடம்தாமோதரம்பிள்ளை *
ரண்டுரோக்கலாவைத்திருப்பிவிட்டால் நமது
பனங்காட்டுப்பாத்தியெல்லா முடன்காடுமுனையும் *
மிஞ்சாதேபொறுபொறுதம்பி என்று
வேளாளர்அர்க்காராமனையழைத்து *
முப்புதுபோன்துப்பட்டாவெடுத்து அப்போ
முதலாமராமனுடல்மேலேபோர்த்தி *
அன்புதுராகவனையுமள்ளி அந்த
நாழிகையிற்பாக்குவெற்றிலைசெலவுக்குக்கொடுத்து *
கஞ்சாவபிள்ளைன்பான்தம்பி அவனுக்குக்
களமானவாகிரிபொல்லாததடுக்கன் *
அவன்செய்தகுற்றத்தைதம்பி நீயும்
அறிக்கையிடாதேராமாநபாபுதுரைக்கு *
நானுமொருசேதிசொல்லுகிறேன் உங்கள்
நபாபுதுரைக்குநீசொல்லுபோராமு *
அதிபதிகெசபதியேசிங்கம் இங்கே
நரபதிசேனபதிநாலுபதியல்லோ *
நாலுபதிதன்னிலோராமு இப்போ
நாங்களொருபதிவந்தேசுபதிசேர்ந்தோம் *
கர்நாடகவுக்குமுன்னேபட்டம் வந்து
கனமானதென்னிலங்காபுரிதனிலே *

சீதையைச்சிறைதனிலேவைக்க ராமர்
சென்றுமேதென்னிலங்கைராவணனைச்செயித்து *
விபீஷணனுக்குப்பட்டங்கட்டி ராமர்
விரைவாகராமேஸ்வரம்வந்துசேர்ந்து *
ராமலிங்கத்தைப்பூசைசெய்து அன்றைக்கு
நலங்கொண்டதேர்விலுந்திருமதிலுங்கட்டி *
சிவபத்தியமறவாதபேர்கள் வேறு
மென்றுசொல்லிஸ்ரீராமர்தான்வைத்தபட்டம் *
அள்வம்னிராமர்பட்டம்பெற்று நாங்கள்
துரைநபாப்வர்களிடமேட்டிக்குவந்தால் *
கால்நடையாய்வருவமோராமா அவரும்
கால்நடையாய்வாச்சொல்லிச்சொன்னாயோயானால் *
சந்திப்புமறிந்துநடாபோபோ உங்கள்
சாய்புகிட்டமறுவய்ணம்சொல்லடாராமா *
திருப்பிட்டாயானைமுகந்தெற்கே என்று
சிங்காசனதிபதிகூட்டிநபயணம் *
போகாதேமுல்லைமணிமார்பா ஒரு
உத்தரவுநபாபிடங்கேட்டோடிவாரோன் *
அவ்வளவில்பாளையத்தைநிறுத்து என்று
அர்க்காரராமனும்நடத்திட்டான்திரும்பி *
மம்முதலிசமுகத்தில்வந்து ராமன்
வகையானசேதிகளைச்சொல்லலுற்றானப்போ *
ஆண்டவனேமம்முதலிதுரையே உனது
அடிமையொருவசனம்நான்சொல்லுகிறேன்கேளு *
அதிலொருத்தன்பட்டாணிபோல்வாரான் அவன்
அல்லாவுதினைக்கிருன்சொல்லமுடியாது *
(அவன்) முகத்திலேகோபங்கள்துரையே அவன்
முன்னின்றுநீதரால்பார்க்கமுடியாது *
அவனிடைக்கத்திக்குத்துரையே நமது
ஆயிரக்கத்தியுமெதிரில்லைசாய்பு *
அறிந்திருப்பைய்யடாபூலி அவ
னாடாமறுவயணஞ்செல்லடாவென்றான் *
அவன்தானையாபெரியவீட்டுக்காரன் சாய்பு
சேனாபதிதனகர்த்தன்நாமோதாம்பிள்ளை *



வெட்டுங்கைதாமோதாம்பிள்ளை சேதி
கட்டுங்கைமுல்லைமணித்தாண்டவராயன் *
இருபேருமொன்றாகச்சேர்ந்தால் தேவ
இந்திரன்வந்தாலும்வெல்லக்கூடாதென்றான் *
அதுக்குள்ளேராமனுமெழுந்து பாதர்
ஆண்டவன்நபாபுக்கு ஏதுசொல்வானும் *
ஆனைமேல்வந்ததளமந்திரி சாய்பு
அவன்சொன்னசங்கதியைச்சொல்லுகிறேன்கேளும் *
அதிபதிகெசபதிசிங்கம் வா
நரபதிசேதுபதிநாலுபதியுண்டு *
நாலுபதிதன்னிலேதுரையே அவர்கள்
தானுமொருபதிவந்துசேதுபதிசேர்ந்தார் *
கர்த்தாக்களுக்குமுன்னேபட்டம் பெற்று
கனமானதென்னிலங்காபுரிதனிலே *
சீதையைராவணனெடுத்துக்கொண்டு போய்
தென்னிலங்காபுரியில் சிறைவைத்தபோது *
ராமரெழுபதுவெள்ளஞ்சேனை கூட்டி
ராவணசம்மாரமுடித்தமாத்திரத்தில் *
சீதைதனைத்தேரின்மேலேற்றிக் கொண்டு
தென்னிலங்கைவிபீஷணர்க்குப்பட்டமுங்கட்டி *
ராமேஸ்வரம்வந்துசேர்ந்து பின்பு
ராமலிங்கத்தையவர்பூசையேசெய்து *
சிவபத்திமறவாதோரிவர்கள் என்று
ஸ்ரீராமர்கொடுத்ததாம்மறவரென்றபட்டம் *
நபாபுபேட்டிக்குவந்தால் நாங்கள்
கால்நடையாகவேநடந்துவரமாட்டோம் *
சந்திப்புமறிந்துநடாபோபோ உங்கள்
சாய்புகிட்டமறுவயணஞ்சொல்லென்றுசொல்லி *
திருப்பினான்யானைமுகந்தெற்கே நானுஞ்
சிங்கம்நபாபயிப்போகேட்டோடிவாரோன் *
அவ்வளவில்பாளையத்தைநிறுத்து என்று
அடிமைநான்மறுவயணஞ்சொல்லிவிட்டுவந்தேன் *
இதற்குமறுவயணமென்னசாய்பு அதை
இப்போதேசொல்லுமென்றுகேட்டானேராமன் *

ஆனைமேல்வரச்சொல்லுமாமா
அனைவர்புகழ் நபாபு துரை சொல்லிவிட்டாரப்போ
திருப்பினுன் அர்க்காராமன்
இடையொன்றுபிள்ளைமார் சமுகத்தில்வந்து
இருவரையும் அவுதாவிலேறி
கல்பான் நபாபு துரைவரச்சொன்னையா
ஆனையின்மேல்வாங்கவென்றுசொல்லி
அர்க்காராமனும் உறுதியாய்ச்சொல்ல
இருபேரும்யானைமேலேறி
தேழாயிரஞ்சனத்தைமுன்னே நடத்தி
தேவேந்திரன்கொலுப்போல
இடையொன்றுபிள்ளைமார் நடத்திட்டாரப்போ
இருபிள்ளைமார்களும்வந்து
எழுபிள்ளைமாரிருக்குமிடத்தில்வந்துநின்று
ஆனைவிட்டுக்கீழேயிறங்கி
அன்பாகவொண்டுதட்டெடுத்துவரச்சொல்லி
ஒருதட்டிலொருசோடுமுத்து
ஒருதட்டிலொருசோடுபச்சையும்வைத்து
ஒருதட்டில்வயிடூரியக்கல்லு
ஒருதட்டில்மரகதக்கல்லொன்றுவைத்து
ஒருதட்டிலாயிரம்பொன்முடிப்பு
ஒருமிக்கத்தட்டெல்லாஞ்சேகரஞ்செய்து
தம்பியர்தாமோதரம்பிள்ளை
தட்டையெடுத்துவாவென்றுசொன்னமாத்திரத்தில்
கங்கைகுலவம்மிசம் அண்ணே
காராளரல்லவோ முல்லைமணிமார்பா
அதுக்கனுட்சந்திப்புக்குப்போறோம்
சந்திப்புயெப்படிக்தெரியுமடா அண்ணே
எத்தனை உயர்ந்தகுலமாய்
இருந்தாலும்குமாரவர்கம்பிள்ளையென்றுபேரு
இருச்சிறைப்பளிக்கு அவன் துரைதான்
சேசரி அப்பாளையக்காரனெல்லாம்பிள்ளை
நப்பனுட்வளவுக்குப்பிள்ளை
தன்கிகொண்டுபோய்வைத்துசலாம்பண்ணவேணும்



காரியங்கொள்ளுமட்டுந்தம்பி
காலைபுக்கூட்டப்பிடிக்கவேணுமென்றான்
எனக்கொன்றுந்தெரியாது அண்ணே
எப்படியிருக்குதோ அப்படி செய்யென்றான்
அப்படியே நல்லதுதம்பி
அசையாமல்தட்டுகளையெடுத்துவாவென்று
இருபேருமொன்புகுதட்டெடுத்து
பாருரைவயுங்கடந்துகூடாரம்வந்து
நபாபுசமுகத்தில்நின்று
நலங்கொண்டதங்கமலர்பொன்மலரொடுத்து
நபாகக்கம்பளியில்வைத்து
சிலையதைகையிலேசிக்கிரமெடுத்து
நபாபைமூன்றுதரம்சுற்றி
நம்முடையசலாம்வருகுதென்றுசலாம்செய்து
இருபேரும்விழுந்துசலாஞ்செய்தார்
எழுந்திருந்து நபாபுசாய்புமையாலெடுத்து
தூக்கியேமார்போடணைத்து
துரிதமாயிருபேர்க்குமிருக்கவிடங்கொடுத்தார்
இருந்தபின்தாண்டவராயன்
இயலானபறங்கிகளைக்கண்ணாலேகண்டு
படபடென்றுமிரண்டுபயமாகி
பதறியேதிரேகமெல்லாம்வேர்வையாயொழுக
வெஞ்சுவெல்லாண்டுவேர்வைதனைத்துடைத்து
கொண்டுபோய்விசிறிகொண்டுவிசிறினமாத்திரத்தில்
ஆடுதேபடபடவென்றுமேலும்
அருகில்நின்றநபாபுதுரையேதிட்டுப்பார்த்து
பாளையங்களுடனண்ணே
பயமாகியுடம்பெல்லாம்நடுக்குதென்னவென்றார்
களைதெளிந்துதாண்டவராயன்
கண்திறந்துபார்த்தவனுமேதுசொல்வானும்
தாய்வயிற்றிலேயிருந்துநானும்
தரையில்விழுந்தநாள்முதலாகவெனக்கு
வந்ததொருசன்னிநோக்காடு
மனிதர்கள்சுற்றிநெருங்கியேநின்றால்

நடுக்கமெடுப்பதெல்லாம்போச்சு — இப்போ
நலமாயுன்னிடங்கண்டபோதேயுனக்கு *
இருந்ததொருபயமெல்லாம்சாய்ப்பு — எனக்கு
எள்ளளவுமில்லாமலோடியேபோச்சு *
என்றுதாண்டவராயன்சொல்ல — நல்ல
இதவாகநபாபவருமேதுசொல்வாராம் *
சந்தனங்கொண்டுவரச்சொல்லி — அப்போ
தயிரியமாய்ப்பிள்ளைமார்க்குப்பூசவேண்டுமென்று *
ஒருபிடிவாரனைக்கலந்து — வெள்ளிக்
கும்பாவில்சந்தனமுஞ்சவ்வாதுங்குழைத்து *
பூசுங்களிருபிள்ளைமாரும் — என்று
புண்ணியனபாபுதானுமுன்னெடுத்துவைத்தார் *
சந்தனம்பூசினேமேயானால் — அந்தச்
சாஷணங்கட்டைவரட்டியடுக்கவேணும்சாய்ப்பு *
ஜுன்னிநோக்காட்டுக்காகாது — துரையே
சந்தனம்பூசுகிறதில்லையென்றுசொன்னான் *
தாமோதரம்பிள்ளையுமப்போது — முல்லைச்
தாண்டவராயன்முகமேறிட்டுப்பார்த்து *
நபாபுகானுக்குக்கேழ்க்காமல் — இவர்கள்
நலமாகயிருவரும்வாய்ச்சைகையாக *
சந்தனம்பூசினாலண்ணே — நமது
சாதிக்குவர்க்காதோமுல்லைமணிமார்பா *
போபோபேய்கொண்டதம்பி — உனது
புத்தியுமிவ்வளவோதாமோதரம்பிள்ளை *
சந்தனம்பூசினேமேயானால் — வெய்யில்
சலவையிலேதண்ணீர்தாகமதுகாணும் *
தண்ணீருவேண்டுமென்றுகேட்டால் — அப்போ
தண்ணீரரண்மனையிலிருந்துகொண்டுவந்து *
பிள்ளையென்றுவந்தீரேநீங்கள் — என்றுடைய
தண்ணீர்குடியுமென்றுமுன்னாலேவைப்பான் *
குடிக்கவேணுந்தள்ளமுடியாது — தம்பி
குப்பியொன்றுசந்தனம்பட்டவிட்டமெல்லாம் *
வெந்துவிரிந்துவிடும்தம்பி — என்று
வேடிக்கையாய்க்கத்துவாரிக்கூண்டைத்திறந்து



வெளியிலேவிட்டிட்டாரப்போ — அந்த
வேடிக்கைநபாபுபார்த்தேதுசொல்வாராம் *
காட்டிலேதிரியுமிந்தக்குருவி — இதை
என்னத்துக்குக்கொண்டுவந்தாய்தாண்டவராயா *
சொல்லிவாய்மூடுவதற்குள்ளே — ரண்டு
கத்துவாரியையெடுத்தாசண்டைக்குவிட்டான் *
ஒருசாமபரியந்திரமட்டும் — அந்த
ஒன்றுக்கொன்றெதிர்த்துநின்றுசண்டைசெய்கிறதை *
யம்ரூசுவிகண்ணாலேகண்டு — மாதர்
மன்னவன்மனதுமிகச்சந்தோஷமாகி *
காட்டிலேதிரியுமிந்தக்குருவி — இதுவுன்
கையிலேயிவ்வளவுபழக்கமாயிருந்தால் *
மனிதருன்கையிலகப்பட்டால் — அவனை
என்னபாடுபடுத்துவையோதெரியாதுநீயும் *
என்றுசொல்லிவாய்மூடுமுன்னே — அப்போ
எண்ணிக்கைபாய்பதின்மூன்றுபணியாரமெடுத்து *
பணியாரஞ்சபைதனிலெறிந்தான் — அது
பாங்காகநெளியுறதைத்துரைமார்கள்பார்த்து *
ஐந்நாறுவெள்ளைக்காரதுரைகள் — அப்போ
ஐந்தாறுபணியாரங்கையிலேயெடுத்து *
பிட்டதனைப்பார்த்தார்கள்துரைகள் — இட்டுக்
குருவியதனுள்ளிருந்துபறக்கிறதைக்கண்டு *
சபாசுமுல்லைமணிமார்பா — இப்போ
தளநந்திரிமந்திரந்திரியுனக்கேதான்செல்லும் *
இருட்டுக்காதவிழ்த்திட்டு [illegible] — திரும்
எனைத்தேடிவந்தவகைசொல்லென்றுகேட்டார் *
ஆண்டவனேமுகலிசாய்பே — உனது
அடிமைநானொருவயணஞ்சொல்லுகிறேன்கேளும் *
உம்முடையஅரண்மனையிலிருந்து — முன்னே
உப்புத்தண்ணீராக்கித்திரிந்தானேபல்காறு *
மதுரைக்குத்துரையாகவந்து — நல்ல
வைகைவளநாட்டைப்பரிபாலிக்கக்கூடி *
உமக்குநான்கொடுக்கிறபண்டிதை — காணும்
மனமகிழ்கேட்டுச்சொல்லிச்சண்டைக்குவாரான் *

தகப்பனுக்குவஞ்சனையாய்கானு இப்படி
நகாநகாரியஞ்செய்வதையுமக்குச்சொல்லவந்தேன் *
இப்படிதாண்டவனுஞ்சொல்ல அதற்
கேதுசொல்வார்மம்முதலிசாய்புதுரையவரும் *
அரேபிள்ளைதாண்டவராயா பாதர்
அன்பாகவொருவயணஞ்சொல்லுகிறேன்கேளு *
ஏழைவருஷங்களாச்சு நல்ல
இயல்பானகாணியுந்துரைக்கனுப்பி *
ஒருகாசுங்கொடுத்தனுப்பவில்லை எனக்கு
ஒருபணமும்வடக்குவந்துசேரவுமில்லை *
வழிப்பாதைதெரியாமல்தாண்டவா நானும்
வடக்குமுகம்போகாமலிருக்கிறேனிங்கே *
தெற்குமுகம்வழிகாட்டிவிட்டால் நானுஞ்
சீக்கிரமாய்ப்பாளையத்தைக்கூட்டிவந்திடுவேன் *
நான்வாரேன்திசைமதுரைகோட்டை எனக்கு
நலமானபாக்குவெற்றிலைசெலவுக்குவுனது *
சிவகங்கைப்பேட்டைதனையெனக்கு விட்டுத்
தரவேணுமென்றுசொல்லிக்கேட்டார்நபாபு *
சிவகங்கைப்பேட்டையுடவளப்பம் ராஜ
சிங்கமேநபாபேநான்சொல்லுகிறேன்கேளு *
ஐந்நூறுதேவடியாள்வீடு அதிலே
ஆரேழுபார்ப்பாரவீடுமங்கேயுண்டு *
கூவவுங்கோழிகிடையாது வந்து
குலைக்கவும்நாயதிலேகிடையாதுசொன்னேன் *
அதைவிட்டுக்கொடுத்தேன், வென்ற நல்ல
அன்பாககாராளன்சொன்னமாத்திரத்தில் *
அதுபோனால்போகட்டும்பிள்ளே உனது
ஆருருநாட்டைவிட்டுத்தருவையோவென்றான் *
ஆருருநாட்டுடையவளப்பம் பாதர்
ஆண்டவனேநபாபேநான்சொல்லுகிறேன்கேளும் *
காட்டிலேலக்கிரிபிடுங்கி கள்ளர்
ஒட்டிலேபவித்ததனைத்தின்கிறவர்சாய்பு *
இந்தச்சேதிகேட்டாரேயானால் நம்மை
இருவரையும்வழிமறித்துக்குத்துவார்கள்ளர்



அதுதான்போகட்டுந்தம்பி உனது
ராமநாதபுரக்கோட்டைதருவையோவென்றார் *
ராமநாதபுரக்கோட்டைவளப்பம் நமது
ராஜபரமேஸ்பராசொல்லுகிறேன்கேளு *
ஒருபுறமண்ணாலேசுவரு அதிலே
யொருபுறம்வனவாந்திரக்காடதிலேயுண்டு *
புலிகளுந்நானுழியக்காரர்வீடு எங்கள்
சேதுபதிசூழ்ந்தைவந்திருக்கிறதந்தவே *
ராஜனிருக்கிறகிராமம் அதனை
நான்விட்டுத்தருவனென்றுசொல்லவேதுரையே *
இப்படிபிள்ளைமகன்சொல்ல நல்ல
இயல்பாகநபாபுதுரை யேதுசொல்லுவார் *
தகப்பனுடவளவிற்குப்பிள்ளை வந்தால்
சாப்பிடவேணுமென்றுசொன்னார்நபாபு *
சாப்பிடமாட்டேனென்றுநானும் சாய்பே
தாண்டவராயனுஞ்சொல்லவேதுரையே *
முப்பதுநாளைக்குநோன்பெனக்கு நல்ல
முடிமன்னதாண்டவராயாவென்றுசொல்லி *
கல்லிழைத்தபச்சைசகலாத்து அப்போ
கனமானபிள்ளைமார்கைதனிலேகொடுத்து *
நாலுவகைவெகுமதியுஞ்செய்து அப்போ
நபாபுதுரையோசித்துச்சொல்லுவாரப்போ *
பிரட்டறெடுமெனிரண்டுபட்டாளம் உனக்குப்
பின்கட்டுப்பாருமனுப்புகிறேனிப்போ *
முப்பதுநோன்புகழித்தவுடனே நானும்
வருகிறேன்திசைமதுரைக்கோட்டைதனைநோக்கி *
இதுசேதிமம்முதலிசொல்லி அப்போ
எழுந்திருந்துகோட்டைபோய்ச்சேர்ந்தார்நபாபு *
இருபிள்ளைமார்களுஞ்சேர்ந்து மெள்ள
இதமாகவிடுதிவந்துசேர்ந்தார்களப்போ *
மதுரைவளர்கான்சாய்புநிலன் நல்ல
வரிசைபெறத்தேவடியில்வந்துநின்றுகொண்டு *
மைத்துனன்வடக்கேபோனானே இவன்
சீமைதனிலொருசாரிநடத்தவேணுமென்று *

மதுரைக்குதிரைமேற்சீனிவைத்து மதுரைக்
கான்சாய்புகோட்டைவிட்டு வெளியில்வருகையிலே *
ரெக்கலாரெண்டையுமிழுத்து அதற்கு
நேரிட்டமருந்துகுண்டுவண்டியின்மேலேற்றி *
மூவாயிரஞ்சனங்காணு அப்போ
முன்னூறுவருக்குச்சிறுக்குதிரையும் நடத்தி *
மதுரைக்குதிரைமேலேறிக்கொண்டு மதுரைக்
கான்சாய்புசிலையுமான்புளியங்குளந்தாண்டி *
சிலையுமான்புளியங்குளந்தாண்டி அப்போ
திருவாதூர்மைதானவீதியுந்தாண்டி *
திருப்பூவணக்கோட்டையிலேவந்து காணு
இடமொன்றுகூடாரமடித்தல்லோ நூலாயும் [?] *
மூணுநல்லமோர்சாவளர்த்தி அதிலே
மூடிமன்னன்பீரங்கிமேலேற்றிவைத்து *
மூட்டியேயொருபலித்தாதீர்த்து அப்போ
மூணுநாள்வரைக்குமேயிரைத்தாரேகுண்டை *
திருப்பூவணக்கோட்டைமண்ணிலேதான் ஒரு
தேங்காயளவுமேயிடிந்துவிழவில்லை *
சுப்ரமண்யத்தேவராதிவிருந்த நல்ல
குடியானவெங்கலபீரங்கியையிழுத்து *
மூக்குறுணிமருந்துகுண்டுபோட்டு அதற்கு
முதலானகிடாவெட்டிப்பொங்கலுமிட்டு *
குபீரென்றுவொருபலித்தா அடித்தான் அப்போ
கொட்டமிடுகான்சாய்புகூடாரந்தெறித்து *
கூடாரக்கயிறுமறுந்து அப்போ
குபீரென்றுவழுகுதிரைக்காலுந்தெறித்து *
ஏழெட்டுப்பேர்கள்தலையுடைய அப்போ
இதமானகான்சாய்புகண்ணாலேபார்த்து *
நம்மைப்போலேயொருமனிதன் இதிலே
இருக்கிறான்திருப்பூவணம்வாங்கமுடியாது *
திருப்பூவணம்வாங்கமுடியாது என்று
சிவகங்கைமேல்சாரிநடத்திட்டான்கானன் *
ராத்திரிக்குராத்திரியேநடந்து அப்போ
நலமானசிவகங்கைப்பேட்டைநகரைவளைந்து *



அரண்மனையையக்கினியாய்க்கொளுத்தி மறவர்
ஆறுகால்சவுக்கையைத்தீயாயெரித்து *
மேல்வீட்டில்கம்பளியைவிரித்து காணு
மீசையின்மேல்கைபோட்டுமேற்குமுகந்திரும்பி *
பட்டணமெல்லாங்கொள்ளையடித்து அப்போ
படைமன்னன்கிழக்குமுகந்திரும்பியேகானன் *
தஞ்சாவூர்வெள்ளிக்குரிச்சி மறவர்
சமஸ்தானம்பாத்திபனூரையுங்கொள்ளையடித்து *
காளுராணிகண்வாயைவெட்டி அப்போ
கான்சாய்புநடத்திட்டான்திசைமதுரைக்கோட்டை *
சந்திரகுலமுத்துவடுகையர் அப்போ
சாமியுங்காளையார்கோயிலிலிருந்து *
தாண்டவராயபிள்ளைக்கு அவரும்
தயவாககாயிதமெழுதலுற்றாரப்போ *
அண்ணேவாதாண்டவராயா மதுரை
யானுமின்றகான்சாய்புசிவகங்கைவந்து *
அரண்மனையையக்கினியாய்க்கொளுத்தி நமது
ஆறுகால்சவுக்கையைத்தீயாயெரித்து *
சீமையெல்லாங்கொள்ளையடித்து காணு
திசைமதுரைக்கோட்டைபோய்சேர்ந்திட்டானண்ணே *
இரும்பலையோகோட்டைவிட்டுத்தெற்கே என்று
சீக்கிரமாய்நிருபத்தையனுப்பிட்டாரப்போ *
வருகுதேவடுகையர்நிருபம் நல்ல
வளமிகுந்ததிருக்கோட்டிக்குடியுங்கடந்து *
பொன்மல்லைமைதானவெளிதனிலே அப்போ
பிள்ளைமார்சமுகத்தில்வந்ததேநிருபம் *
சாமியுடநிருபம்வந்ததென்று நல்ல
நளகர்த்தனிருபத்தைவாசித்துப்பார்த்து *
மறவயணம்பின்னப்பமோலை எழுதி
வரவிட்டான்முல்லைமணித்தாண்டவராயன் *
ஆண்டவனேமுத்துவடுகையா உனது
அடிமைநான்மறவயணஞ்சொல்லுகிறேன்கேளு *
நபாபைநான்பேட்டிசெய்தாச்சு சுவாமி
நாலுவகைவெகுமதியும்வாங்கினேனடியேன் *

| | |
|---|---|
| ஐந்தாறுநாளையிலேசுவாமி | அடியேன் |
| அதுவேதொழிலாயிருந்தபாளையத்தைக்கூட்டி | * |
| பிரட்டணையுங்கையோடேகூட்டி | சுவாமி |
| பொன்முத்துரைமேல்வந்திறங்கினேனடியேன் | * |
| எந்தெந்தச்சிமையழிந்தாலும் | நமது |
| திருப்பூவணக்கோட்டைபத்திரம்சுவாமி | * |
| ஆராரிறந்தபோனாலும் | சுவாமி |
| ஆண்டவனீர்மாத்திரம்கோயிலிலிருக்க | * |
| கோயில்விட்டுவெளியில்வரவேண்டாம் | என்று |
| குறிப்பாகஓலைதனையெழுதியேயனுப்பி | * |
| தாமோதரம்பிள்ளைதனையழைத்து | முல்லைத் |
| தாண்டவராயபிள்ளையேதுசொல்வானும் | * |
| வந்துவெகுநாளாச்சுதம்பி | நம்மை |
| மம்முதலிநபாபுசாய்பழைக்கவேயில்லை | * |
| கோட்டைக்குள்போகவேணுந்தம்பி | என்று |
| கோபமாய்சேனைகட்குப்பயணமென்றுசொன்னான் | * |
| தாமோதரப்பிள்ளையுமப்போது | தனது |
| தளங்களைக்கண்ணாலேயேதிட்டுப்பார்த்து | * |
| அவ்வாறுவிரற்கடைமருந்து | துபாகிக்கு |
| அசையாதரட்டைகுண்டுபோச்சுமென்றுசொல்லி | * |
| பதினேழாயிரஞ்சனத்தைநிறுத்தி | அப்போ |
| பாக்கிசனங்களுக்குறதிகளைச்சொல்லி | * |
| பிள்ளைமார்குதிரையின்மேலேறி | நல்ல |
| பிரியமாய்த்தெற்குக்கோட்டைத்தலைவாசல்வந்து | * |
| திடீரென்றுகோட்டைவாயிற்குள்ளே | அப்போ |
| சீக்கிரமாயிருபேரும்வரும்வேளைதனிலே | * |
| அர்க்காராமனோடிவந்து | அப்போ |
| அரோபிள்ளைமுல்லை மணித்தாண்டவராயா | * |
| மம்முதலியுத்தரவுயில்லை | நீங்கள் |
| வரக்கூடாதென்றுசொல்லித்தடுத்திட்டான்ராமன் | * |
| அப்போதாண்டவராயபிள்ளை | பார்த்து |
| அன்பாகராமனுக்கேதுசொல்வானும் | * |
| தகப்பனுடவளவிற்குப்பிள்ளை | வந்தால் |
| தடைசொல்லித்தள்ளுவதுநீதியோராமா | * |



| | |
|---|---|
| இப்படிதாண்டவனுஞ்சொல்ல | ராமன் |
| இருமென்றுநபாபுதேவடிக்குவந்து | * |
| ஆண்டவனேமம்முதலிசாய்பே | உனது |
| அடிமைநானொருவயனஞ்சொல்லுகிறேன்கேளு | * |
| இருபிள்ளைமார்களும்வந்தார் | அடியேன் |
| எதிர்கொண்டுகுதிரைலகான்கையிலேபிடித்து | * |
| சாய்புடையவுத்தரவுயில்லை | நீங்கள் |
| சனத்தோடேவரக்கூடாதென்றுநான்சொன்னேன் | * |
| அதைமிஞ்சிக்குதிரையின்மேலேறி | அவர்கள் |
| அக்கிரமமாய்வருகிறாரென்றுசொன்னான்ராமன் | * |
| அப்போதுமம்முதலிசாய்பு | பாதர் |
| ஆலோசித்தேயவருமேதுசொல்லலுற்றார் | * |
| நாலுதலைவாசலையுஞ்சுற்றி | அப்போ |
| நலமானபாராவும்வைக்கவேசொல்லி | * |
| பட்டாளஞ்சுற்றிலும்வருக | அப்போ |
| பாட்சாநபாபுதானாபுறப்பட்டார்வெளியில் | * |
| இருபேருங்குதிரைவிட்டிறங்கி | அவர்கள் |
| ஏழுதரங்குனிந்தப்போசலாம்பண்ணிக்கொண்டு | * |
| இருபேருங்கைகட்டிநின்று | நல்ல |
| இஷ்டமாய்துதித்தவர்கள்நிற்கும்வேளையிலே | * |
| அரோபிள்ளைமுல்லைமணிமார்பா | நானும் |
| அன்பாகவொருவசனஞ்சொல்லுகிறேன்கேளு | * |
| வரச்சொல்லிச்சொல்லியனுப்புமுன்னே | நீங்கள் |
| வந்தவகையேதென்றுகேட்டார்நபாபு | * |
| தகப்பனுடவளவிற்குப்பிள்ளை | வந்தால் |
| தடையென்னவென்றுசொல்லிவந்திட்டேனடியேன் | * |
| கோபுரங்கண்டும்நான்துரையே | அடியேன் |
| பாவங்கள்நீக்காமல்போவனோசாய்பு | * |
| தகப்பனது அரண்மனையைப்பார்க்க | நானும் |
| தடையொன்றில்லாமலேவந்திட்டேனடியேன் | * |
| இப்படிதாண்டவனும்சொல்ல | அதற் |
| கேதுசொல்வார்மம்முதலிசாய்புதுரையப்போ | * |
| நீயேயிப்படிவந்ததாலே | இந்த |
| நிமிஷத்தில்நாலுதெருவீதியும்பார்த்து | * |

வெளியேபோவென்று    பாதர்
கம்நபாபுதுரைசொல்லிட்டாரப்போ    *
இந்தமட்டுஞ்சொன்னதேபோதும்    என்று
எழும்பினான்தளத்தோடேபட்டணத்தைப்பார்க்க    *
வடக்குத்தெருவீதியிலேவந்து    தாயு
மானமலைதாண்டிவடபாரிசந்திரும்பி    *
சிந்தாமணித்தலைவாசல்வந்து    இருவரும்
இடமொன்றுகாவேரிஸ்நானமும்பண்ணி    *
தளங்களைத்திருப்பியேவந்து    அப்போ
தயவாகக்கோட்டைக்குள்ளேதான்வந்துசேர்ந்து    *
தாயுமானர்கோவிலுக்குவந்து    தளவர்
தயிரியமாய்த்தரிசனஞ்செய்யவேணுமென்று    *
ஐம்பதுபொன்குருக்கள்கையில்கொடுத்து    அந்த
நாழிகையிலபிஷேகஞ்செய்யவேசொல்லி    *
ஐம்பதுபொன்பதக்கமெடுத்து    அந்த
நாழிகையில்சுவாமியின்கழுத்திலேதரித்து    *
மாலைசந்தனங்கையில்வாங்கி    அப்போ
மங்கம்மாஅரண்மனையைக்கண்ணாலேபார்த்து    *
நபாபுதேவடியும்பார்த்து    அங்கே
நலங்கொண்டகாளவுந்தேவடியுங்கண்டு    *
சிங்காரத்தோப்பையும்பார்த்து    பாதர்
இடமொன்றுக்கடைத்தெருவுவீதிவருகையிலே    *
கடலையவல்பொரியுண்டைகளுமே    அங்கே
கடைகளில்தட்டுகட்டாயிருக்கிறதைக்கண்டு    *
கருங்கச்சைசனங்களைப்பார்த்து    அப்போ
கடைக்கண்ணைக்காட்டியேகைகாட்டிவிட்டான்    *
நெல்லரிசிவாருவார்சிலபேர்    அங்கே
நேரிட்டகடலைபொறிவாருவார்சிலபேர்    *
இப்படிகொள்ளையவரடிக்க    அப்போ
எங்கையும்பொல்லாதகூச்சலுண்டாச்சு    *
பட்டணங்கொல்லென்றுபோச்சு    அப்போ
பாட்சாநபாபுதுரைமிதுசேதிகேட்டு    *
நாலுதலைவாசலையுமடைத்து    அப்போ
வாய்த்துக்குதிரைக்குச்சேணம்வைக்கச்சொல்லி



புறப்பட்டார்மம்முதலிசாய்பு    சுற்றி
யேழுவீரர்வெள்ளைக்காரர்முன்னேநடக்க    *
வருகிறார்நபாபுதுரையும்    அப்போ
வலதுகையிலேநந்துமுடிக்கயிறதையெடுத்து    *
தாமோதரம்பிள்ளையுமப்போது    முல்லைத்
தாண்டவராயனைவிட்டுப்பார்த்து    *
என்னதான்சொன்னாலுமண்ணே    நீயும்
எள்ளளவுமென்பேச்சைக்கேழ்க்கிறதேயில்லை    *
மம்முதலிவருகிறகோபத்தை    இப்போ
மன்னவனேபாரென்றான்தாமோதரம்பிள்ளை    *
போபோபேய்கொண்டதம்பி    உனது
புத்தியுமிவ்வளவோதாமோதரம்பிள்ளை    *
நபாபையொருவார்த்தையிலேகட்டி    அவர்
கையிலேவெகுமதியும்வாங்காமற்போனால்    *
என்பேருகாராளனல்ல    நான்
எடுத்ததுவுந்தளகர்த்தமோதிரமுமல்ல    *
சொல்லியனாநாழிகைக்குள்ளாக    நல்ல
துரைமகன்நபாபவரும்வந்திட்டாரருகில்    *
இருபேருக்குதிரைவிட்டிறங்கி    அப்போ
ஈஸ்பரனபாபுமுன்புகைகட்டிநின்றார்    *
அரோபிள்ளைமுல்லைமணிமார்பா    இப்போ
ஆரடாயித்தத்துடுக்குனக்குதந்தார்    *
ராஜாவுமிங்கேநானிருக்க    எனது
ராச்சியத்தைக்கொள்ளையிடலாமோவென்றுகேட்டார்    *
ஆண்டவனேமம்முதலிசாய்பே    உனது
அடிமைநானொருவயணத்தைச்சொல்லுகிறேன்கேளு    *
கரும்புமென்சீமையிலேயில்லை    சாய்பு
கடலைபொரியவலுண்டைகிடையாததோம்    *
நெல்லரிசியெங்கள்சீமையிலே    இப்போ
எள்ளளவுங்கிடையாதும்மம்முதலிதுரையே    *
அடிமைநான்சாப்பிடுஞ்சோறு    இந்த
வரகரிசிச்சோறென்றுசொன்னமாத்திரத்தில்    *
ரண்டுபடிவரகரிசியளித்து    அப்போ
நேரிட்டமம்முதலிமுன்னாலேவைத்து    *

அரிசியைப்பார்க்காதமனிதர் இவர்கள்
ஆகையாலோடிபெடுத்திட்டார்துரையே *
இதற்குநீர்கோபித்திராகுல் அடிமைக்
செங்கேகுடியிருப்புமம்முதலிதுரையே *
அப்போதுமம்முதலியார்த்து ஒரு
ஆலோசனைசெய்துசொல்லலுற்றார்துரையும் *
செந்நெல்பெருத்ததுன்தேசம் என்று
முன்னமேபுலித்தேவன்சொன்னனேயெனக்கு *
இப்படிசொல்லுகிறாய்நீயும் இதிலே
ஆர்பேச்சைநிசமென்றுநம்புவேனுனும் *
நெல்லரிசிகிடையாததேசு நீயும்
வந்ததேயென்னிடத்திற்சொன்னையேயானுல் *
உன்சனத்துக்கெல்லாம்படிகொடுப்பேன் முன்னே
உத்தமனேசொல்லாமற்போனயேயென்னிடத்தில் *
ரண்டுபைபணமதையெடுத்து அப்போ
நேசமுடன்தளத்ந்திரிகையில்கொடுத்து *
உன்சனத்துக்கெல்லாம்நெல்லரிசி ...த்து
உத்தமனேபடிகொடுவென்றுத்தரவுசொன்னார் *
அப்போதாண்டவராயன்சொல்வான் சுவாமி
ஆண்டவனேநபாபேநான்சொல்லுகிறேன்கேளும் *
வந்துவெகுநாளாச்சுதுரையே எனக்கு
மன்னவனேமறுவசனஞ்சொல்லுமென்றுகேட்டார் *
அப்போதுமம்முதலிதுரையும் பாதர்
அசையாதபிரட்டன்முகமேறிட்டுப்பார்த்து *
வழிப்பாதைதெரியாமலிருந்தோம் நமக்கு
வழிகாட்டவந்தார்களிருபிள்ளைமாரு *
நேனிரண்டுபட்டாளத்தைக்கூட்டி பிரட்டா
பாளையங்கூட்டிநடதிசைமதுரைநோக்கி *
நல்லதென்றுவெள்ளைக்காரதுரைகள் அப்போ
நலமானதம்பூரடித்துப்புறப்பட்டு *
காக்காத்தோப்புவெளிதனிலே வந்து
காராகம்பினிசனத்தைக்கூடாரமிறக்கி *
கொடிதனையுங்கொண்டுவந்துபோட்டு பிரட்டன்
கூடாரமடித்திட்டான்சொல்லப்போகாது *



கர்னல்பிறங்கியனிரண்டு தனது
கறுப்புச்சட்டைக்காரருடபட்டாளமெட்டு *
மூவாயிரந்துருப்புக்குதிரை சேர்த்து
முன்னூறுவண்டியின்மேல்மருந்துகுண்டுமேற்றி *
ரேக்கலாமுப்பதையுங்கூட்டி அப்போ
நேரிட்டசாராயப்பீப்பாய்களுமேற்றி *
மதுரைக்குப்பயணமென்றுபிரட்டன் நல்ல
உறுதியாய்க்கூடாரமிறக்கினமாத்திரத்தில் *
நாமோதரம்பிள்ளையுமப்போது முல்லைத்
தாண்டவராயன்முகமேறிட்டுப்பார்த்து *
தொண்டிவழிநடந்தோமேயானுல் போக
வெகுதூரம்வெகுநாள்செல்லுமேயண்ணே *
துவரங்குறிச்சிவழிசென்றால் மலைப்
பாதையதுகல்லுமேல்வண்டியேறாது *
எந்தவழிபோகலாமண்ணே என்று
இதமாகதாமோதரன்கேழ்க்கும்வேளையிலே *
தாண்டவராயதளமந்த்ரி நல்ல
சாதுரியமாய்வார்த்தைசொல்லுகிறாரப்போ *
அப்படியேன்போகவேணுந்தம்பி நமது
நடுச்சீமைவழியாகப்போவோமென்றுசொன்னான் *
நடுச்சீமைவழியாகப்போனால் நமது
தேசத்தைக்கண்ணாலேபார்ப்பானேபிரட்டன் *
திரும்பிவரும்போதுபெரியபிரட்டனே நமது
தேசத்தில்தோரணங்கட்டுவானென்றான் *
அப்படியேவழிகூட்டிப்போவோம் அந்த
அம்மைப்புனக்குத்தெரியுமோதாமோதரம்பிள்ளை *
ஒருவனையாகிலுங்காண்பிப்பேனே அவனுக்
குகந்தவழிதெரியவோகூட்டுவேன்பாதர் *
பகலெல்லாஞ்செடிக்குள்ளேயடைப்பேன் ராவில்
பாளையத்தைக்கூட்டுவேனென்றுசொன்னானப்போ *
சொல்லியொருநாழிகைக்குள்ளே பிரட்டன்
துடியாகபாளயத்தையெழுப்பினான்பாதர் *
அச்சாடிக்கிரண்டன்தளமும் அப்போ
அன்பானபாளயத்தையெழுப்பினான்பிரட்டன் *

பொன்மலைமைதானவெளிதாண்டி தெற்கே
புறப்பட்டு ஆவூர்மைதானவெளிதாண்டி *
குடுமியாமலைக்குக்கிழக்காக அப்போ
குயிலான்றுமெநரிஞ்சிக்குடிப்பாதையுங்கழித்து *
கிழக்குமுகம்பாளையத்தைநடத்தி அப்போ
கீர்த்திபெறுதிருமையத்துக்கோட்டைக்குத்தெற்கே *
குருவிக்கொண்டான்பட்டிவந்துசேர்ந்து பிரட்டன்
கூடாரமடித்தங்கேபாளையத்தைநிறுத்தி *
இறங்கியரைநாழிகையிற்குள்ளே தளவர்
இருபெரும்பிரட்டனிடகூடாரம்வந்து *
சிங்கமேதுரைபெரியபிரட்டா ஒரு
சேதிநான்காராளன்சொல்லுகிறேன்கேளு *
மதுரையின்னம்பத்து நாழிவழிதான் நாம்
வருஞ்சேதிகேட்டுவந்திடுவானேகானன் *
பகலில்வழிநடக்கவேகூடாது நாமும்
ராத்திரிக்குராத்திரியே நடக்கவேணுமென்றான் *
நல்லதென்றதுரைபெரியபிரட்டன் சனத்தை
ராத்திரிக்குராத்திரியேபயணமென்றுசொன்னான் *
பகலெல்லாங்கூடாரத்திலிருந்து சாயுங்
காலம்பயணமென்றுசாப்பிட்டுப்போட்டு *
தம்பூருவாத்தியமுழங்க சாயுந்
தரம்பாளையம்பயணமென்றுசொன்னான்பிரட்டன் *
குருவிக்கொண்டான்பட்டியுங்கழித்து தளவர்
கோட்டைமடுவூர்க்காட்டுப்பாலவழிகூட்டி *
ராத்திரிக்குராத்திரியே நடந்து அந்த
ராத்திரியில்பல்லென்றுகிழக்குவெளுக்கையிலே *
பாகனிக்காட்டில்கொண்டுவந்து குதிரைப்
பாளையத்துடன்தளத்தையிறக்கினான்காட்டில் *
பகலெல்லாமங்கையேகழித்து தளவர்
ராத்திரிக்குராத்திரியேஎழுப்பினார்தளத்தை *
பாகனிக்காடுங்கடந்து நல்ல
பனங்குடிக்காட்டையுஞ்சீக்கிரமாய்த்தாண்டி *
மங்கலத்நாஞ்சிக்காதாண்டி நல்ல
மகாராஜன்பாளையத்தைராத்திரியேகூட்டி *



38

இராமேஸ்வரப்பாதையாக தளத்தை
இரவெல்லாந்தானடத்திநம்பல்மைதானத்தில் *
அப்போதுதுரைபெரியபிரட்டன் தனது
அசைப்பாதபாளையத்தைக்கொண்டுவந்திறக்கி *
தளகர்த்தன்தன்னைவரவழைத்து திருப்பூ
வனமெவ்வளதூரமென்றுகேட்டான்பிரட்டன் *
ஆண்டவனேதுரைபெரியபிரட்டா நாம்
ஐந்துமணிவேளைக்குப்போகலாமென்று *
பிரட்டன்பணிரண்டுபட்டாளத்தைப் பாம்பைப்
பட்டியிலேகொண்டுவந்துநலமாயிறக்கி *
பகலெல்லாமங்கிருந்துபோட்டு அப்போ
படைமன்னன்பாளையத்தைராத்திரியிலெழுப்பி *
திருப்பூவனக்கோட்டைவந்துசேர்ந்து அங்கே
சிராகப்பிரட்டனிடபட்டாளத்தையிறக்கி *
முள்ளியனெம்பலெனுமூரில் இரு
பிள்ளைமார்கள்பாளையத்தைக்கொண்டுவந்துசேர்த்தார் *
மதுரைவளர்கான்சாய்புதிலன் பாதர்
வயணமாயிதசேதியாதாலேகேட்டு *
தகப்பனாகியபெரியபிரட்டன் குதிரை
தளத்தோடுதிருப்பூவனமிறங்கினானென்றறிந்து *
மோதிகான்சாய்பையுமழைத்து இனி
வெள்ளைக்காரன்செ[illegible]த்தன் அநுமந்தனையழைத்து *
தாதப்பனரசப்பனையழைத்து கானு
சாய்புதுரைகுதிரைக்கெல்லாஞ்சீனிமக்கர்சொல்லி *
முன்னூறுகருப்புக்குதிரையுடனே அப்போ
முடிமன்னன்கான்சாய்புபுறப்பட்டான்வெளியில் *
சில்லுமான்புளியங்குளந்தாண்டி நல்ல
திருவாத்தூர்மைதானவீதியுங்கடந்து *
திருவணங்காட்டுக்குள்ளேவந்து தள
சேனைகளைக்காட்டிற்குள்ளொளித்துவைத்துவிட்டு *
தலையெட்டிப்பார்த்திரோமானால் உங்களை
தப்பாமல்பட்டாவால்வீசிடுவேன்கானு *
அவனுக்கவன்பதனமென்றுசொல்லி கானு
ஆணிச்சிக்கணவாயிலொளிந்துவைத்திருந்தான்

| | |
|---|---|
| பல்லென்றுகிழக்குவெளுக்கையிலே | பிரட்டன் |
| பட்டாளத்தைநிறுத்திக்கம்பூராயுத்த | * |
| சனத்தையெல்லாமலைபோலேநிறுத்தி | அப்போ |
| தம்பூருமுழக்கியேகோட்டைக்குள்நுழைந்தான் | * |
| கோட்டைக்குள்பிரட்டன்போகுமுன்னே | கானன் |
| குதிரைவிட்டுப்பாளையத்திலலக்கவேணுமென்று | * |
| நடத்தினானுருக்குச்சிறுகுதிரை | அந்த |
| நாழிகையில்திருப்பூவணக்குளக்கரைபுகுந்தானேடி | * |
| வயல்வழியாய்க்குதிரைதனைவிட்டு | கானு |
| வருகிறான்திருப்பூவண ஆற்றுவழிநோக்கி | * |
| முதல்பாருக்காரனையும்வெட்டி | ஒரு |
| மூச்சுக்குள்பட்டாளத்துள்ளேவிழுந்து | * |
| கத்திமுனைரத்தங்களொழுக | அப்போ |
| கான்சாயபுவருகிறதைக்கண்டானேபிரட்டன் | * |
| வந்திட்டான்கான்சாய்புவென்று | பிரட்டன் |
| வரிசையாய்ப்பட்டாளத்தை.மேற்குமுகந்திருப்பி | * |
| டொப்பிகழட்டிக்கீழேயடித்து | [illegible] |
| சுறுக்காகமுன்கைதனைக்கடித்தமாத்திரத்தில் | * |
| மூன்றணியாகப்பிரித்து | பட்டாளத்தை |
| முன்னேற்றிப்பிரம்பாலே மூட்டினான்பிரட்டன் | * |
| மண்வாரியிறைத்திட்டாற்போலே | குண்டு |
| வருகிறதைத்திசைமதுரைக்கான்சாய்புபார்த்து | * |
| ஒளித்துவைத்ததனதுபட்டாளத்தை | அப்போ |
| உத்தமன்கான்சாய்புசைகைசெய்தழைத்து | * |
| திருப்பியேதனதுபட்டாளத்தை | பிரட்டன் |
| சேனைமேல்பாய்ந்திட்டான்திசைமதுரைகானன் | * |
| ரண்டுகையில்ரண்டுமுகப்பட்டா | பிடித்து |
| நேரானபிரட்டனிடபாளையத்தில்விழுந்து | * |
| வீசினான்திசைமதுரைகானன் | அப்போ |
| விழுகிறசிப்பாய்தலைகள்சொல்லப்போகாது | * |
| கையற்றுவிழுகிறதுசிலது | அங்கே |
| காலறுந்துவிழுந்தபேர்சொல்லப்போகாது | * |
| தலையற்றுவிழுகிறதுசிலது | அப்போ |
| தாறுமாறாய்மூன்றுதுண்டாய்விழுகிறதுசிலது | |



37

| | |
|---|---|
| வெள்ளரிக்காய்விசிறுற்போல | பாதர் |
| வீசினான்சிபாய்களைப்பொல்லாதகானன் | * |
| துப்பாக்கிதிருப்புவதற்குள்ளே | பாய்ந்து |
| துடியாகவெட்டுறான்திசைமதுரைகானன் | * |
| சோஜர்தலைகளொருகோடி | அங்கே |
| துள்ளிவிழுகிறதைச்சொல்லமுடியாது | * |
| தீன்தீனென்றுசொல்லி | பாதர் |
| திரும்பியேநாலுமூலைவீசுறான்பட்டாவை | * |
| பாணிபாணியென்றுசொல்லி | அப்போ |
| பதைத்துவிழுகிறதேசிப்பாய்மார்தலைகள் | * |
| தண்ணிதண்ணியென்றுசொல்லி | அங்கே |
| தவித்துவிழுவோரைச்சொல்லமுடியாது | * |
| ஓடுதேமுழங்காலுரத்தம் | அதிலே |
| உருளுதேசிப்பாய்தலைகள்பனங்காயைப்போலே | * |
| மலைபோலேதுருப்புக்குதிரை | அப்போ |
| மாளுதேபொல்லாதமைதானவெளியில் | * |
| குதிக்குதேசோஜர்தலைகள் | அப்போ |
| கூவுதேநாய்நரிகள்பிணங்களைத்தின்ன | * |
| சோஜர்போனவழிகாணம் | நல்ல |
| சிப்பாய்போனவழிதெரியவேயில்லை | * |
| கத்திகட்டிபோனவழிகாணம் | அப்போ |
| காதர்போனவழிதெரியவேயில்லை | * |
| அவல்தார்போனவழிகாணம் | நல்ல |
| அஜிட்டன்போனவழிதெரியவேயில்லை | * |
| சுபேதார்போனவழிகாணம் | அப்போ |
| சோஜர்கள்பட்டாளம்போனவழிகாணம் | * |
| அப்படிகான்சாய்புநிலன் | பாதர் |
| அறுத்ததலைகளென்றால்சொல்லமுடியாது | * |
| நதியெல்லாம்ரத்தமாய்ப்போச்சு | கானு |
| கனத்ததலைகுட்டையெல்லாம்ரத்தமாய்ப்போச்சு | * |
| ரத்தகவுல்சுற்றியேவீச | அப்போ |
| நாதிபன்கான்சாய்புமூர்ச்சையாய்நின்றான் | * |
| தளகர்த்தன்றானப்பதைக்கவே | பாதர் |
| தயிரியமாய்பதினைந்துகுதிரையுடன்வந்து | * |

கான்சாய்பைக்கண்டாலேகண்டு அப்போ
கட்டழகன்தாஜப்பஞ்சலாம்வாங்கிக்கொண்டு *
ஆண்டவனேகான்சாய்புதுரையே உடனே
அடிமைநானொருவசனஞ்சொல்லுகிறேன்கேளு *
தாரும்பூருகோட்டைக்குச்சென்று நமது
சேருகான்பாபுக்குபதிலுஞ்சொல்லி
மதுரைபோய்ச்சேரவேணுமையா என்று
மடைப்புறத்தாக்கால்வாயில்கத்தியைக்கழுவி *
கத்தியையுறைதனிலேபோட்டு அப்போ
கான்சாய்புதாரும்பூருகோட்டைக்குவந்து *
சேருகான்தன்னைவரவழைத்து கானல்
சேதியவனுக்கு எதுசொல்வானாம் *
பனிரண்டுபட்டாளம்சிப்பாயும் நல்ல
பன்பானவெள்ளைக்காரதுரைகள்ரிஜிமிட்டும் *
மூவாயிரம்துருப்புக்குதிரை தம்பி
முப்பதுவெள்ளைக்காரர்பிரட்டன்துரையோடே *
கர்னல்பீறங்கிபனிரண்டு அதிலே
காம்டன்துரைபட்டாளமூவாயிரம்ஜனங்கள் *
றேக்கலாமுப்பதுகூட இப்போ
நெறுநெறுத்தப்போகுதடா திருப்புவனக்கோட்டை *
நாளைப்பனிரண்டுமணிவேளைக் கெல்லாம்
நமதுதாரும்பூருகோட்டைமேலேவருவான்டா *
தாரும்பூருகோட்டைபதனமென்று கானு
துரைமகனும்திசைமதுரைக்கோட்டைபோய்ச்சேர்ந்தான் *
அப்போதுதுரைபெரியபிரட்டன் ஜனங்கள்
அனைவோரும்வந்தங்கேயொன்றாகச்சேர்ந்தார் *
கண்டிட்டான்துரைபெரியபிரட்டன் அப்போ
கண்சிவந்துபட்டாளத்தையெண்ணிக்கைபார்த்தான் *
மூன்றுபட்டாளம்வரைக்கும் இப்போ
முதற்சண்டைகானுகையால்விழுந்துபோச்சுதென்று *
சனத்தையெல்லாமெண்ணிக்கைகொண்டு அப்போ
தளகர்த்தரிருவரையுமழைத்துவரச்சொல்லி *
அரோபிள்ளைமுல்லைமணிமார்பா இப்போ
அழைத்துவந்துபட்டாளத்தைதாவக்கொடுத்தாயே *



மதுரைக்குவழிகாட்டுபிள்ளை கானு
மன்னுடையசௌரியத்தைநான்பார்க்கவேணும் *
அப்போதுநான்டவராயன் பாதர்
ஆள்களைக்கொண்டான்களைநனக்கனுப்பி *
பண்டிகிடாய்பிடித்துவரச்சொல்லி அப்போ
பாட்சாதிபிரட்டனுக்குத்தீனிக்குக்கொடுத்தான் *
தீனிதின்றுகைகழுவிக்கொண்டு பிரட்டன்
சிப்பாய்மார்களுக்குத்தைரியங்கள்சொல்லி *
நட்டத்திறன்பட்டாளத்தன்னை அந்த
நாழிகையில்திருவாத்தூர்வந்திட்டான்பிரட்டன் *
நாலுபுறம்பாராவும்வைத்து தனத்தை
நடுவிட்டுமத்தாப்புநாலுபுறம்போட்டு *
ராத்திரியில்ஜாக்கிரதையாயிருந்தார் கானு
ராஜாதிபதியிந்தச்சேதிகளைக்கேட்டு *
மூன்றுகுதிரைஜீனிவைத்து அப்போ
மோதுகான்சாய்பையுங்கையோடேயழைத்து *
சீனிச்சிராவையுமழைத்து தனது
திசைமதுரைக்கோட்டைவிட்டுவடக்குமுகம்நோக்கி *
தாரும்பூருகோட்டைக்குள்நுழைந்து கானு
துரைமகன்பேசாமலொளிந்திருந்தானப்போ *
அப்போதுதுரைபெரியபிரட்டன் பாதர்
அழகானபாளையத்தைசுற்றிவரும்போது *
பல்லென்றுபொழுதுவிடிந்தது அப்போ
பட்டாளம்பயணமென்றுசத்தாவுமாச்சு *
திருவாத்தூர்மைதானந்தாண்டி தனங்கள்
தாரும்பூருகாட்டினில்நுழைந்துவருகையிலே *
கனமானதிசைமதுரைக்கோட்டை கானு
கலந்திட்டான்குதிரையுடன்பிரட்டன்பாளையத்தில் *
வந்திட்டான்கான்சாய்பென்றுசொல்லி பிரட்டன்
வலதுகையில்நல்லமொழிப்பிரம்புதன்னைவாங்கி *
பட்டாளம்பலிஎன்றுசொன்னான் அப்போ
படபடென்றுபீறங்கிகொளுத்திட்டார்துரைகள் *
மழைமாரிபொழியுதப்பாக்கி ரண்டு
வண்டியின்மேல்ரோக்கலாதிருப்பினான்பிரட்டன் *

சோளபொரிபொரிந்துவிட்டாப்போல் அப்போ
சொல்லமுடிபோகாதுரோக்கலாகுண்டு *
மலையைப்பிளக்குதேகுண்டு அங்கே
மண்வாரிகொட்டுதேரோக்கலாகுண்டு *
கண்டானேதிசைமதுரைகானன் அப்போ
கையிலேரண்டுமுகப்பட்டாவையெடுத்து *
வீசினான்பாளையத்தில்விழுந்து கானன்
வீரியமாய்துப்பாக்கிகுண்டுக்கஞ்சாமல் *
துப்பாக்கியெடுக்கிறதற்குள்ளே பாதர்
சொல்லிசொல்லிமாட்டுருன்திசைமதுரைகானன் *
பீறங்கிதிருப்புவதற்குள்ளே அப்போ
புலிபோலவீசுருன்பொல்லாதகானன் *
கத்திரிக்காயறுத்தெறிந்தாப்போல் அப்போ
கண்டபடிமாட்டுருன்கான்சாய்புநிலன் *
பனங்காட்டுமைதானமெல்லாம் அப்போ
பனங்காய்போலுருளுதேசிப்பாய்கள்தலைகள் *
ஓடுதேபட்டாளமெல்லாம் அப்போ
உத்தமன்கான்சாய்புராத்திரியேயடித்தான் *
ஐந்துகும்பினிசிப்பாய்மார்கள் அப்போ
அதமாய்விழுந்திட்டார்பரங்காட்டுமண்ணில் *
மூன்றேமுக்கால்நாழிக்குள்ளே கானன்
மோதிசேருடிநிர்த்தூளியாயடித்து *
திரும்பியேதிசைமதுரைக்கோட்டை பாதர்
தீரன்கான்சாய்புதுரை யாண்மனைபோய்சேர்ந்தான் *
மகாராசன்துரைபெரியபிரட்டன் அப்போ
மாண்டதோர்சிப்பாய்களைக்கண்ணாலேபார்த்து *
எண்ணிக்கைபார்த்திட்டாரப்போ அதிலே
எழுகும்பினிஜனம்குறைந்ததைக்கண்டு *
வேலிக்குநான்வைத்தமுள்ளு இப்போ
காலுக்குப்பகையாகவந்ததென்றுசொல்லி *
ஆண்பிள்ளைகான்சாய்புநிலன் என்று
அரசர்புகழ்பிரட்டனுஞ்சந்தோஷப்பட்டு *
மதுரைக்குப்பயணமென்றுசொல்லி அப்போ
மன்னவன்பிரட்டன்துரையுத்தரவுசெய்தார் *



தளமந்திரிதாண்டவராயன் பார்த்
தைரியமாய்பிரட்டன்முகமெதிரிட்டுப்பார்த்து *
பிறகாலேவினையைவைத்துப்போனால் துரையே
பின்னாலேசேனைகட்குமோசம்வரும்சாமி *
துரும்புருக்கோட்டையைவாங்கி நல்ல
துரைமகனேதிசைமதுரைசேரவேணுமென்றான் *
நல்லதென்றுதுரைபெரியபிரட்டன் நாதிதை
நடத்தியேதுரும்புருகோட்டைவந்துசேர்ந்து *
நாலுபுறம்பாளையத்தையிறக்கி அந்த
நாழியில்மோர்சாவில்பீறங்கியேற்றி *
இடியொன்றுவொருபலித்தாதீர்த்தான் அப்போ
சேகுகான்பகல்முழுதும் எதிர்த்துபோராடி *
சாயங்காலம்யோசனைகள்செய்து தனது
சமேதாரவல்தாரையழைத்தேதுசொல்வான் *
ராத்திரிக்கிங்கிருக்கக்கூடாது இருந்தால்
தப்பாமல்தலையறுப்பான்பிரட்டனென்றுசொல்லி *
ராத்திரியேபாளையத்தைக்கூட்டி சேகு
நடந்திட்டான்திசைமதுரைவிடியுமுன்னாலே *
கோட்டையிலேயொருத்தருமில்லை என்று
கூசாமல்துரும்புருக்கோட்டைக்குள்நுழைந்து *
பாளையத்தைநிறுத்திவைத்து அப்போ
பாங்கானமதுரைக்குப்பயணமென்றுசொன்னார் *
நடத்தியேபட்டாளந்தன்னை அந்த
நாழிகையில்நெற்டைக்குளம்வெளிக்குத்தெற்காக *
அடித்தானேகூடாரம்பிரட்டன் அந்த
நாழிகையில்பிள்ளைமார்பாளையத்தையிறக்கி *
ஐந்துநாழிகைக்குள்ளேபிரட்டன் பாதர்
அந்தபாகவந்ததைக்கண்டானேகானு *
இத்தனைபாளையங்களையும் பாதர்
எட்டுநாளைக்குள்ளேயடிப்பேனென்கானு *
பதினைந்துநாளைக்குள்ளாக தனித்தை
பஞ்சுபஞ்சாயடிப்பேனென்கானப்பனுக்கா *
பிரட்டனொருதலையிருக்குமானல் அவன்
பிடிப்பாண்டாயெப்படியுந்திசைமதுரைக்கோட்டை *

பிரட்டனுடநகலிழுந்தபோனால் அப்போ
பருந்தெடுத்ததுஞ்சல்லோமம்முதலிசாய்ப்பு *
ஆற்காடுசென்னபட்டணம்வரைக்கும் அப்போ
அடித்திடுவேன் ஆற்காட்டைப்பிடித்திடுவேனென்று *
சுபேதாரவுல்தாருமாரோ நீங்கள்
சொன்னபடிகேழ்க்கிறேன்சிப்பாயிமாரோ *
அண்ணனில்லைதம்பியில்லையெனக்கு இப்போ
ஆதரவுகோட்டைக்குளொருத்தருமில்லை *
உங்களையேநம்பினேனானும் எனக்கு
ஒருவர்துணையில்லையடாசிப்பாயிமாரோ *
மாசத்துக்கொண்டதுரூபாய் சம்பளம்
வாங்கியேதின்றீரோசிப்பாயிமாரோ *
ஐந்தாறுநாளைக்குநீங்கள் நித்திரை
ஆகாரமெல்லாமகற்றிடுங்கள்சொன்னேன் *
பெண்டாட்டியாசைவைத்தபேர்கள் என்
பின்னாலேவரவேண்டாம்சிப்பாயிமாரோ *
இந்தச்சண்டைகெலித்தேனேயானால் உங்களுக்கு
இருபதுபொன்னுத்தியோகங்கொடுக்கிறேனானும் *
கைகளுக்குத்தங்கக்காப்புபோட்டு உங்களை
கனமாகவைக்கிறேன்சிப்பாயிமாரோ *
என்றுசொல்லிக்கான்சாயபுதுரையும் அப்போ
இரமாகராமலிங்கக்கொத்தனையழைத்து *
நாலுவகைவெகுமதியுஞ்செய்து அப்போ
நலமானபீரங்கியிருப்பிவிடச்சொன்னான் *
திருப்பியேபாளையத்துமேலே கொத்தன்
தீர்த்திட்டான்குண்டுபோட்டைத்தாறுவேட்டு *
பார்த்தானேபொல்லாதபிரட்டன் அப்போ
பட்டாளம்பலியென்றுஉத்தரவுடன்னணி *
ஒன்பதுவெங்கலபீரங்கி தூக்கி
ஒன்றாகமோர்ஜாமேல்திருப்பினான்பிரட்டன் *
பிரட்டன்துரைபீரங்கிதிருப்பி அப்போ
பிணக்காடாயடிக்கிறான்பொன்மதுரைதன்னை *
கானகோதிருப்பியபீரங்கி அங்கே
கணக்கில்லதெற்பைக்குள்ளேகொள்ளவில்லைகுண்டு *



மாணங்கவிந்திட்டாப்போலே அங்கே
வருகிறதேபிரட்டனியபீரங்கிகுண்டு *
நெல்லுபொரிபொரித்ததுபோலே அப்போ
நிலந்தாவிக்கொள்ளுதேசஞ்சலிகுண்டு *
சோளப்பொரிபொரித்ததுபோலே பிரட்டன்
சொல்லிசொல்லியடிக்கிறான்பீரங்கிகுண்டு *
கிழக்குமுகக்கொத்தளந்தனிலே ஒரு
குறுக்குமூலைக்கோட்டைதனையடித்திட்டான்பிரட்டன் *
பக்கெல்லாம்பிரட்டனடித்திட்டால் கான்
ராத்திரிமுப்பதுக்குள்கட்டிமுடிப்பானும் *
இடிகளைவெயெடுத்தெடுத்துக்கட்டி கான்
இருந்துசமாளித்தானொருமாதம்வரைக்கும் *
பகலிலேகோட்டையையிடித்து பிரட்டன்
பல்லென்றுவிடிந்தவுடன்சேட்டிட்டானப்போ *
பழையபடிமதுராபுரிக்கோட்டை இருக்கும்
பார்த்திட்டான்பொல்லாததுரைபெரியபிரட்டன் *
இப்படியோகானுதைரியந்தான் நல்ல
தென்றுசொல்லிராத்திரியில்கள்ளச்சண்டைசெய்தான் *
தம்பூருமடியாதபடிக்குத் தனது
புள்ளாங்குழலங்கேயூதாதபடிக்கு *
எழுபட்டாளத்தைக்கூட்டி பண்டியின்
எழுநேக்கலாவேற்றிச்சீக்கிரமிழுத்து *
ராத்திரிபனிரண்டுமணிக்கு பிரட்டன்
ராஜாதிபதிவந்துமதிலோரஞ்சேர்ந்தான் *
முழுங்குதேபீரங்கிவேட்டு அப்போ
முனைவீரன்கான்சாயபுநிலனுங்கேட்டு *
ராத்திரிக்குராத்திரிதானே தனது
டலாயத்துக்குதிரைக்குக்கிளிவைக்கச்சொல்லி *
பனிரண்டுமணிவேளைக்கெல்லாம் கானு
பாட்சாதிராத்திரியில்மதிலோரந்தன்னில் *
ஆயுதந்தனையுருவிக்கொண்டு கானை
அதட்டியாய்பட்டாளத்தில்நுழைந்தமாத்திரத்தில் *
வந்திட்டான்கான்சாயபுவென்று பிரட்டன்
மதராசன்பட்டாளத்தைப்பலியென்றுசொன்னான் *

ஆற்றுவெளிகுதிரைதனை நடத்தி காணு
ஆண்பிள்ளைகைகலந்தான்வண்டியூர்வெளியில் *
விசென்றுபொல்லாதகானன் அப்போ
விழுகுதேசிப்பாய்கள்தலைகளொருநூறு *
குடல்கள்சரிந்துவிழுவாரும் நல்ல
குண்டிக்காய்சரிந்துமேதனையில்விழுவாரும் *
இதுகண்டுதுரைபெரியபிரட்டன் தலையில்
இருந்ததொப்பியையெடுத்துத்தரையிலடித்து *
முன்கையைச்சீக்கிரங்கடித்து பிரட்டன்
முனையாகசொல்டோரம்மென்றுசொன்னான் *
முழங்குதேபீறங்கிவேட்டு அப்போ
மூவாயிரந்துப்பாக்கிபொழியுதேமழைபோல் *
என்னென்றுநெருப்பாயெரித்தாலும் கானன்
எண்ணமல்முன்னூறுகுதிரையுடன்விழுந்து *
ஐந்துகும்பினிஜனத்தைக்கொன்று கானன்
அப்போதேசேர்ந்திட்டான்திசைமதுரைக்கோட்டை *
பட்டாளத்தையொன்றாகச்சேர்த்து பிரட்டன்
பாட்சாநபாபுக்கு எழுதினுனேகல் *
மணிகட்டிக்காயிதமுமெழுதி பிரட்டன்
மகாராஜனனுப்பினன்திருச்சிரைப்பளிக்கு *
தொண்ணூறுநாழிகைக்குள்ளே வந்து
சுறுக்காகச்சேர்ந்ததுதிருச்சிரைப்பளியில் *
சாயங்கால்வேளையில்நபாபு தனது
தகத்துக்கெதிராகநிற்கும்வேளையிலே *
மணிக்காகிதம்வந்துசேர அப்போ
மம்முதலிநபாபுசாய்புவாசித்துப்பார்த்து *
இம்டிகான்துரைதனையழைத்து மகனைப்
பார்த்துக்கோவென்றுசொல்லிச்சொன்னார்நபாபு *
நான்போறேன்திசைமதுரைக்கோட்டைக்கு வா
நாலுமாசமோநாலுவருஷமோதெரியாது *
திருச்சிரைப்பள்ளியாண்மனையும் பாதர்
சிங்கமேபதனமென்றும்மம்முதலிதுரையும் *
மூப்பத்துபட்டாளம்ஜனமும் நல்ல
மூனூரிஜியிட்டுசேர்க்காருயர்கும் *



வெகுஜனமுங்குண்டுபீறங்கி அப்போ
வெடிகுண்டுபுகைகுண்டுபீறங்கியேற்றி *
நேக்கலாமுப்புதுவரைக்கும் அதிலே
நோானமூவாயிரந்துருப்புக்குதிரை *
கர்னல்பீறங்கியையும்நடத்தி தனது
கனமானதுரைமார்கள்பட்டாளத்தைக்கூட்டி *
ஏறினுரொயில்வண்டிமேலே சாய்பு
ஈஸ்பரான்நபாபுதுரை நடந்தமாத்திரத்தில் *
மருந்துபொட்டிட்பீப்பாய்கள்முதலாய் தனது
வண்டியின்மேல்குண்டுகளுஞ்சாராயமேற்றி *
கொடிமுரசுதம்பூரடிக்க அப்போ
கோஷமிடுகின்றுவகைபட்டாளஞ்சூழ *
வெள்ளைவெண்சாமரந்துலங்க நல்ல
விருதுபெற்றசிக்கக்கொடிமுன்னின்றிலங்க *
அடிபடுதேகுச்சிதம்முரு அப்போ
ஆண்டவன்நபாபுதுரைபுறப்பட்டார்வெளியில் *
அருந்தாருவீதியுந்தாண்டி தனது
ஆஸ்தானவிராலிமலைத்தொங்கலிலேவந்து *
துவரங்குரிச்சியிலிறங்கி பாதர்
துரைபெரியபிராட்டனுக்குக்காயிதமனுப்பி *
நத்தந்துலிங்கையனையழைத்து அப்போ
தம்மன்குரிச்சிப்பூச்சேயனையழைத்து *
கருங்குளத்துக்கம்மையநாய்க்கா நல்ல
கனமானமுள்ளிபட்டிமுத்தப்பநாய்க்கா *
ராமகிரிசாமையநாய்க்கா பாதர்
நலமானதோகைமலைபசுவப்பநாய்க்கா *
மாம்பூண்டிலெக்கையநாய்க்கா இப்போ
வார்த்தையொன்றுசொல்லுகிறேன்மறந்துபோகப்போறீர் *
நான்போறேன்திசைமதுரைக்கோட்டைக்கு நீங்கள்
நாளைக்குச்சேனைகளையொன்றாகச்சேர்த்து *
மதுரைவந்துசேரவேணுமென்று அப்போ
மம்முதலிதுரையக்கேயுத்தரவுபண்ணி *
துவரங்குரிச்சியுந்தாண்டி நல்ல
துடியாகநத்தத்துவீதியுந்தாண்டி *

நத்தத்துமைதான நந்தாண்டி ... அந்த
நாழிகையிலழகர்மலைக்கொம்பையுந்தாண்டி ... *
ஆனைமலைமுந்தலும்விட்டு ... நல்ல
அசையாததேனூர்மைதானம்வந்துசேர்ந்து ... *
இறங்கினார்மம்முதலிசாய்பு ... அப்போ
இயலானபட்டாளமெல்லாமிறங்கி ... *
ரண்டுநாழிகைவழிவிஸ்தாரம் ... அங்கே
நலமானகூடாரமடித்திட்டார்அப்போ ... *
ஒருநெட்டுகறுப்புகூடாரம் ... அதிலே
ஒருநெட்டுச்செங்காவிக்கூடாரமடித்து ... *
ஐந்துநாழிகைவழிவிஸ்தாரம் ... சாய்பு
ஆள்சுற்றிப்பாருவும்சீக்கிரமாய்வைத்து ... *
சேருந்துகளுஞ்சுற்றிவரச்சொல்லி ... சாய்பு
நூறுபேர்சோல்தார்கள்கையில்கத்திகொடுத்து ... *
பாராவுஞ்சீக்கிரமாய்வைத்து ... தனது
பாளையத்தைஜாக்ரதையாய்வைத்திருக்கையிலே ... *
மதுரைவளர்கான்சாய்புநீலன் ... இந்த
வகையாகமம்முதலிவந்தவகைகேட்டு ... *
தாதப்பனரசப்பநாய்க்கன் ... தனக்குச்
சரியானசேகுகான்பாவையமழைத்து ... *
மூர்சுவெள்ளைக்காரனையுமழைத்து ... கானு
முன்னிறுத்திதுரைமார்க்குஎதுசொல்லலுற்றான் ... *
தேனூரில்மம்முதலிவந்தான் ... நானும்
சீக்கிரத்தில்ராத்திரிக்குப்பேட்டிபண்ணிவாரேன் ... *
நான்போயிதிரும்பிவருமட்டும் ... பிரட்டன்
ராசாதிபதிதுரைக்குப்பத்திரக்கோட்டை ... *
என்றுசொல்லித்துரைகானுசாய்பு ... குதிரை
ஏழுநூறுவரைக்குமேசீனிவைக்கச்சொல்லி ... *
பனிரண்டுமணிவேளைக்கெல்லாம் ... கானு
பாய்ச்சிட்டான்குதிரைகளைவடக்குமுகம்நோக்கி ... *
ராத்திரியேகுதிரையைநடத்தி ... கானு
ரண்டாம்பேரறியாமல்பாளையத்தையடுத்து ... *
ஒளிவாகயிருந்திட்டானப்போ ... விடிய
ஒன்றரைநாழிகைக்குமுன்னுதாய்துரைகள் ... *



அன்பானகர்னல்துரையும் ... இதிலே
அக்கினிமயமானமுபியார்கிதுரையும் ... *
இன்னைப்பிரட்டனுஞ்சேர்ந்து ... அப்போ
துரைமார்கள்சிப்பாய்களைவரிசையாய்நிறுத்தி ... *
அடித்திட்டார்குச்சித்தம்மூருக்கு ... எங்கும்
அதிருதேமைதானவெளியெல்லாமப்போ ... *
இதைக்கேட்டுமதுரைதுரைகானு ... தன்குதிரை
எழுப்பியேகுதிரையின்மேல்சிக்கிரமாயேறி ... *
முதல்பாராக்காரனையும்வெட்டி ... இரு
மூச்சுக்குள்ளேபாய்ந்துபாளையத்திலிருந்து ... *
இன்னம்வேறுநினைப்புநினையாமல் ... கானு
எழுநூறுகுதிரையிலேபாய்ந்திட்டானப்போ ... *
திர்த்தாளியாடிவரும்போது ... பாளையம்
நெளிப்பதைமம்முதலிகண்ணாலேகண்டு ... *
காவ்பதறிமோசம்வந்ததென்று ... அப்போ
கனமானமம்முதலிஊர்ச்சையாய்விழுந்தார் ... *
கண்டார்கள்துரைமார்களப்போ ... நல்ல
கனகமுடிமன்னனைப்பல்லாக்கிலேவைத்து ... *
இரும்புருகோட்டையிலுள்ளே ... பாதி
துரைமகன்நபாபுதனைச்சேர்த்தமாத்திரத்தில் ... *
கலந்திட்டான்கான்சாய்புவென்று ... நல்ல
கனம்பெற்றதுரைமார்களணியணியாய்நின்று ... *
முபியார்சறங்கிவெள்ளைக்காரன் ... சண்டை
முன்னேற்றிதொப்பிகழற்றிக்கிழேயடித்து ... *
முன்கையைச்சிக்கிரக்கடித்து ... அப்போ
மூன்றணியாய்ச்சனம்வகுத்துமூட்டினான்சண்டை ... *
என்றேபொறிகொள்ளுபொறிபோலே ... அங்கே
எருறுதேபொல்லாததேக்கலாகுண்டு ... *
துப்பாக்கிசத்தத்தையங்கே ... பார்த்து
சொல்லவேபோகாதுமைதானவெளியில் ... *
அத்தனைகுண்டிலேகானன் ... பாய்ந்து
அஞ்சாமல்வெட்டுமுன்பொல்லாக்கானன் ... *
வெள்ளரிக்காய்போலகானன் ... அப்போ
வீசிவீசிவெறிந்திட்டான்சொல்லமுடியாது ... *

கத்தியெல்லாம்ரத்தமாயொழுக — வெட்டிக்
கலைத்திட்டான்பாளையத்தைநிர்த்தூளியாக *
ஐந்துகும்பினிஜனம்வரைக்குந் — கொனு
அறுத்துமேகுதிரைகளுங்கப்படுத்தி *
கண்டுகொண்டாய்குதிரைகளை நறுக்கி — அப்போ
துரைமகன்திரும்பினான்திசைமதுரைநோக்கி *
அரும்பூரிலிருந்தநபாபு — திரும்பிச்
சுறுக்காகப்பாளையத்தைச்சீக்கிரம்பார்த்து *
அதிவீரன்கான்சாய்புகையால் — அங்கே
ஐந்துகும்பினிசனம்விழுந்ததைப்பார்த்து *
ஆண்பிள்ளைகெட்டியென்றுசொல்லி — நல்ல
அதிவீரன்துரைமார்க்குத்தைரியஞ்சொல்லி *
மேஜைப்பலகையிலிருந்து — பாதர்
முனிவீரன்பிரட்டனுக்கெழுதினார்நபாபு *
பசுமலைக்குக்கானன்வாரானும் — நீயும்
பட்டாளந்துருப்போடேயெதிர்கட்டிமறைந்து *
இருப்பவேணுங்கானனைக்கிழக்கே — என்று
இங்கரணபிரட்டனுக்கெழுதினார்நபாபு *
ஆயிரஞ்சனம்வரைக்குங்கூட்டி — கானன்
அறுபதுதுருப்புக்குதிரையுங்கூட்டி *
எழுநல்லபீரங்கியோடே — கானன்
எண்ணமல்சாமந்தனில்வெளியினிலிறக்கி *
ராத்திரியெல்லாம்வழிமறித்து — கண்ட
பேருக்குத்தெரியாமலொளிவாயிருந்தான் *
அப்போதுதுரைபெரியபிரட்டன் — பாதர்
ஆண்பிள்ளைபல்லாக்குமேலேறிக்கொண்டு *
பட்டாளத்தைமுன்னேநடத்தி — பிரட்டன்
பசுமலைக்குப்பாளையத்தைநடத்தும்வேளையிலே *
எதிர்கட்டிகான்சாய்புதுரையும் — அப்போ
எழுப்பினான்பீரங்கிசொல்லமுடியாது *
அதிலேபனிரண்டுசிப்பாய்கள் — தலைகள்
அதிர்வெட்டினாலற்றுக்கூக்கலுண்டாக *
அப்போதுதுரைபெரியபிரட்டன் — சனங்கள்
அலங்கோலமானதைக்கண்ணாலேகண்டு *



பல்லாக்குவிட்டுக்கீழேயிறங்கி — அப்போ
படைமன்னன்பஞ்சகலியாணியின்மேலேறி *
பிரம்புதனைக்கையிலேவாங்கி — பிரட்டன்
பின்னிட்டசனங்களைவாங்கிட்டான்பலித்தா *
முன்னேறித்தின்னென்றுசொல்லி — சனங்கள்
முழித்துப்பாராமலேநடக்குதேமேற்கே *
உசாரென்றுசொல்தார்துரைகள் — அப்போ
ஒழுங்காகத்தொப்பிகழட்டிக்கீழேயடித்து *
முன்கையைக்கடித்தல்லோதுரைகள் — அங்கே
முனைந்துபசுமலைநோக்கிநடந்துவந்திறங்கி *
நபாபுசமுகத்தைநோக்கி — அந்த
நாழிகையில்பல்லக்குவிட்டுக்கீழேயிறங்கி *
தொப்பிகழட்டிச்சலாம்வாங்கிக்கொண்டார் — நல்ல
துடியானநபாபுசாய்பேதுசொல்வாரம்ப்ரீ *
வாங்கலையோஇசைமதுரைக்கோட்டை — என்று
மம்முதலிவெகுகோபமாகவேசொல்ல *
ஆண்டவனேமம்முதலிதுரையே — பிரட்டன்
அன்பாகவொருசேதிசொல்லுகிறேன்கேளும் *
ஆட்டுக்கிடாய்தனிலேசாய்பு — எனக்கு
அஞ்ஞூறுகிடாவதுகொடுக்கவேவேண்டும் *
ஈருக்கிடாரியிலேசாய்பு — எனக்கு
எழுபதுகிடாரியுமிப்போகொடுத்து *
எழுவண்டிசாராயங்கொடுத்தால் — மதுரையை
எட்டுநாளைக்குள்ளேபிடிக்கிறேன்நிக்கம் *
என்றுசொல்லிபொல்லாதபிரட்டன் — அப்போ
எல்லோரையுங்கூட்டிமதுரைவந்துசேர்ந்து *
மூலைக்கொத்தளத்துமேலே — அப்போ
மோர்சாவையெழுப்போசீக்கிரம்வளர்த்தி *
எழுநல்லமோர்சாவளர்த்தி — அதற்கு
எழுமூன்றிருபத்தொருபீரங்கியேற்றி *
மூட்டினான்பீரங்கிசப்தம் — வேட்டு
முழங்குதேகோட்டைமேல்மழைமாரிபோலே *
மூலைக்கொத்தளத்தைநோக்கி — குண்டு
மோதினதைக்கண்டல்லோமதுரைதுரைகானன் *

பட்டமன்னர்தங்களையழைத்து காணு
பயம்பிறக்கவொருவயண்மேதிசொல்வானும் *
பகலெல்லாம்பிரட்டனிடித்ததுவை நீங்கள்
ராத்திரிக்குராத்திரியேகட்டவேணுமென்று *
இடிக்கவேயெடுத்தெடுத்துக்கட்டி அதிலே
இருந்துசமாளித்தான்மதுரைதுரைகானன் *
இதுகண்டுதுரைபெரியபிரட்டன் அப்போ
சமர்செய்தசேதிகளைச்சீக்கிரமெழுதி *
பிந்தமேகான்சாயபுநீரா ஒரு
சேதிநான்பிரட்டனிப்போசொல்லுகிறேன்கேளு *
இன்னமுமுன்பேரிலேகாணு குண்டு
எண்ணியொருநூறிப்போபோட்டேனேயானல் *
அதமாய்போவையடாகாணு என்று
அப்போதேயெழுதியனுப்பிட்டான்பிரட்டன் *
மறுவுயுணம்மதுரைதுரைகாணு அப்போ
வயணமாயொருசேதியெழுதலுற்றானப்போ *
லட்சங்குண்டெவ்வளவுபிரட்டா இன்னம்
ஐம்பதினாயிரங்குண்டுஅடித்தாலும்பிரட்டா *
அதற்கெல்லாம்பயப்படமாட்டேனென் உன்னகபா
ளனமட்டும்பாரென்றெழுதினன்கானன் *
பகலெல்லாம்பிரட்டனிடித்ததனை கானன்
ராத்திரிக்குராத்திரியேகட்டிமுடிப்பானும் *
இடிக்கஅவனெடுத்தெடுத்துக்கட்டி அதிலே
இருந்துசமாளித்தான்வெகுநாள்வரைக்கும் *
தேனூரிலிருந்தநபாபு மதுரை
சேர்ந்தவுடன்மைதானத்தில்கூடாரமடித்து *
பாளையமிறக்கினர்நபாபு அதை
பாட்சாகிகான்சாயபுபார்த்தேதுசொல்வான் *
மேற்குமுகம்பாளுவிருந்தோரைப் பார்த்து
மூலக்கோட்டைக்கொத்தளம்பத்திரமென்று *
தயாராயிருக்கும்வேளையிலே பாதர்
ஜன்னல்துரைபிரட்டனுந்நச்சக்குழாயெடுத்து *
எறிட்டுக்கிழக்குமுகம்பார்த்து பிரட்டன்
எதிரில்நிற்குமிசிப்பாய்கட்கேதுசொல்வானும் *

மீனாட்சிசந்நிதிக்கெதிராய் நமக்குச்
செயமில்லைமதுராபுரிக்கோட்டைக்கென்றுசொல்லி *
பசுமலைக்குப்போகவேணுமென்று தனது
பாளையத்தைநடத்தினன்மேற்குமுகம்நோக்கி *
அப்போதுகான்சாயபுநீலன் பாதர்
அனல்குண்டுபுகைகுண்டுமூட்டிக்கோபிரட்டா *
கலங்காமல்நினைத்துநானிருந்தால் அப்போ
கானனென்றும்மனதிலேயெண்ணிக்கொள்ளென்று *
மன்னவன்காயிதத்திலெழுதி கானன்
மகாராஜன்பிரட்டனுக்கனுப்பினனப்போ *
அப்போதுதுரைபெரியபிரட்டன் கானன்
அனுப்பியகாயிதத்தைவாசித்துப்பார்த்து *
எழுநல்லமோர்சாவளர்த்தி அதற்கு
எழுமூன்றிருபத்தொருபீரங்கியேற்றி *
மெழுக்குச்சிலைகூடாரமடித்து பிரட்டன்
மூட்டினன்பீரங்கிசொல்லப்போகாது *
வெம்பிச்சன்குண்டுவொருபக்கம் அதிலே
வெடிகுண்டுபுகைகுண்டுமூட்டினன்பிரட்டன் *
கோட்டைக்குள்சனம்பொறுக்காமல் அப்போ
குபீரென்றுமீனாட்சிகோயிலுக்குவந்து *
சனங்களெல்லாம்நின்றுதவிக்கிறதை பாதர்
சாய்புதுரைகான்சாயபுகண்டுலேகண்டு *
ரண்டுகையில்நிமிசாவைவாங்கி காணு
நேரிட்டமூலக்கரைக்கொத்தளத்தைப்பார்த்து *
இன்றைக்குக்கோட்டைபிழைத்தாக்கால் நான்
எட்டானுலும்பிரட்டனால்வாங்கமுடியாது *
பத்திரம்சிப்பாயிமாரே என்று
பாட்சாகிகான்சாயபுஅரண்மனைபோய்ச்சேர்ந்தான் *
மகராசன்துரைபெரியபிரட்டன் அப்போ
வகையானகோட்டைக்குச்சுரங்கம்வெட்டச்சொல்லி *
சுரங்கத்தைவெட்டினமாத்திரத்தில் பிரட்டன்
துடியாகமம்முதலிசமுகத்தில்வந்து *
ஐந்துநாள்கொள்ளைகொடுமென்று பாதர்
அவைபுகழ்நபாபைக்கேட்டிட்டான்பிரட்டன் *

அப்போதுமம்முதலிசாய்பு பாதர்
ஆலோசனைசெய்துஎதுசொல்லலுற்றார் *
மதுராபுரிபிடிப்பையேயானால் அப்போ
வைத்துக்கொள்ளோந்துநாள்கொள்ளையென்றுசொன்னார் *
மம்முதலியுத்தரவுபெற்று பாதர்
மகிபதிபிரட்டனும்சிக்கிரம்நடந்து *
கூடாரந்தனில்வந்துசேர்ந்து பிரட்டன்
கும்பலாய்சிப்பாயிமார்களைக்கூட்டி *
ஆளுக்கொருபிடிவராகன்கொடுத்து அப்போ
அனைவர்க்கும்தைரியம்வெகுவாகச்சொல்லி *
சனங்களுக்குவுறுதிகளைச்சொல்லி பிரட்டன்
தயாராகவேழுபட்டாளத்தைக்கூட்டி *
எழுநூறுசோஜர்களுடனே அப்போ
ஏணிமரம்பனிரண்டுகொண்டுவரச்சொல்லி *
மூன்னூறுவைக்கோல்பிரிவாங்கி பிரட்டன்
முடிமன்னன்புறப்பட்டான்சொல்லப்போகாது *
இறங்கினான்சுரங்கத்துவழியே பிரட்டன்
இதவாகாண்டுகையில்நிசாவைவாங்கி *
நாலுமுகம்சோதித்துப்பார்த்து அப்போ
நலமானபிரட்டனும்வரும்வேளைதனிலே *
விடியஐந்துநாழிகையிருக்கும் அப்போ
விருதுபெற்றகானனும் அரண்மனைக்குவந்து *
கத்திபடேசாய்புகையில்கொடுத்து மதுரைக்
கான்சாய்புநிலனும்நித்திரைபோனான் *
அப்போதுசுரங்கத்தின்வழியாய் பிரட்டன்
இறங்கினான்சனத்தோடேசொல்லமுடியாது *
அகழிக்குவைக்கோல்பிரியடைத்து பாதர்
அன்பானயேணிதனை கோட்டையின்மேல்சார்த்தி *
சாராயவெறிகொண்டுபிரட்டன் சனத்தை
சாற்றினான்பிரம்பாலேயேறினார்மேலே *
தீன்தீனென்றுசொல்லி சனங்கள்
சீக்கிரமாய்மூலைக்கோட்டைகொத்தளமேலேறி *
மூலைக்கனைகொத்தளத்தைப்பிடித்தார் அப்போ
முனைவீரன்பிரட்டனும்செங்கோலையூன்றி *



மூட்டினான்குச்சித்தம்பூரு பிரட்டன்
மூன்றுதரம்தம்பூரைமுழக்கினமாத்திரத்தில் *
அப்போதுதிசைமதுரைமீறான் கான்சாய்புக்
வழிவுவந்துநேர்ந்ததென்றுமனதிலேயெண்ணி *
பார்ப்பாரப்பெண்போலவந்து கானு
பாதகன்தலைமாட்டில்பார்வதியும்நின்று *
சுற்றிவினைவந்திருக்கையிலே உனக்கு
சுகமோடாநித்திரைகான்சாய்புநீலா *
(என்று) மார்புதனிலடித்திட்டாள்மீறான் அப்போ
மன்மதன்கான்சாய்புதிடமொன்றெழுந்து *
படேசாய்பையெழுப்பாதபடிக்கு கானு
மகாராஜன்ரண்டுகையில்நிமிஜாவைவாங்கி *
மின்கட்டுப்பாருவந்தாண்டி கானு
மூலைக்கனைகொத்தளத்தைநோக்கிவரும்போது *
கானுதுரைசிப்பாயியொருவன் வந்தா
கான்துரைநீலின்சலாம்வாங்கிக்கொண்டு *
ஆண்டவனேகான்சாய்புதுரையே பாதர்
ஆண்பிள்ளைதுரைபிரட்டன்மூலைக்கோட்டையேறி *
தம்பூருமூன்றுதரமடித்து கோட்டை
தலைமூலைக்கனைதனைப்பிடித்திட்டான்பிரட்டன் *
அத்தெரிபான்சோத்துலவுண்டி கானு
ஆண்பிள்ளைசிங்கம்நானிங்கேயிருக்க *
மூலக்கனைவாங்கினானென்று லவுண்டி
மூன்றாலேயென்னமல்சொல்லலாமோவென்று *
முதல்வெட்டுஅவனையங்கேவெட்டி ஒரு
மூச்சுக்குள்கொத்தளத்தின்மூலைக்குவந்து *
சிக்கந்தர்சாய்பைநினைத்து அப்போ
திடமொன்றுபடிகட்டிலேறும்வேளையிலே *
கொத்தளத்தின்மேலிருந்தபிரட்டன் அப்போ
குபீரென்றுபீறங்கிநேராய்த்திருப்பி *
குண்டுபோட்டொருபலித்தாஅடித்தான் கானு
கூசாமல்படிகட்டின்மீதேறிவந்து *
முனைகத்திவீசினான்கானன் அப்போ
மூன்னூறுபேருடையதலையறுந்துவீழ *

விசிருன்மொல்லாதகானன் அப்போ
விழுகுதேசிப்பாய்கள்தலைகள்பனங்காய்போல் *
கண்டபடிவீசினன்கானன் அப்போ
கறுப்புசட்டைசிப்பாய்களெல்லோரும்பயந்து
பேட்ருவைக்கையிலேபிடித்து சனங்கள்
நேராகயேணிவழியிறங்கிவரும்போது *
கானனுடசொந்தசிப்பாய்கள் அப்போ
கனமாகமூலக்கரைசேர்ந்தமாத்திரத்தில் *
கொம்மைக்குமும்மூன்றுபேரும் அக்கே
கொத்தளத்தில்பதினைந்துபேர்நிற்கும்வேளையிலே *
அகழிவழியிறங்கினசனத்தை கானு
அதமாகவெட்டியேதீர்த்தாளிப்பண்ணி *
தாறுமாருய்வெட்டியிழுந்தெறிந்தான் அப்போ
சனங்களெல்லாங்கூச்சலிட்டோடினார்சிலபேர் *
பிணக்காடாய்போச்சுதேமதுரை பாதர்
பிரட்டன்துரையப்போதுபல்லைக்கடித்து *
கனமானநச்சுக்குழாயெடுத்து மூலைக்
கரைநோக்கிப்பார்த்தவுடன்குதிரையின்மேலேறி *
பசுமலையைநோக்கிவருகையிலே பாதர்
படைவீரன்கான்சாய்புதறிட்டுப்பார்த்து *
பில்தோல்துபாக்கியையெடுத்து கானன்
பிலமாகவொன்றைத்தோட்டாவும்போட்டு *
குபீரென்றுபிரட்டன்மாருக்குக் கானன்
கோபமாயொருபலித்தாதீர்த்திட்டானப்போ *
உருளைதனிலொருகுண்டுதைக்க பிரட்டன்
உபாயமாய்ப்பல்லாக்குமேலேறிக்கொண்டு *
பசுமலைக்குவந்தமாத்திரத்தில் பிரட்டன்
பாட்சாவுங்காயம்பட்டசேதிகளைக்கேட்டு *
காயம்பட்டபிரட்டன்துரையை அப்போ
கனமானமம்முதலிகண்ணாலேபார்த்து *
பிரட்டனுக்குக்காயம்பட்டுப்போச்சு இனி
பிலனில்லைபாளையத்துக்கென்றார்நபாபு *
டாகுதுரைதன்னைவரவழைத்து அப்போ
நானூறுவிராகனைத்கையிலேகொடுத்து *



எண்ணிவெட்டுநாளையிலேபிரட்டன் துரையும்
எழுந்திருந்தவொருசாரிசண்டைக்குநடந்தால் *
பதினாயிரம்பொன்பெற்றகிராமம் உனக்குப்
பாக்ஷாதிதருகிறேனென்றார்நபாபு *
நல்லதென்றுடாக்டர்துரையும் அந்த
நாழிகையில்மருந்துகட்டி காயங்களாற்றி *
ஆறிப்போனசங்கதிதன்னை கேமல்
ஆண்பிள்ளையிருசேதிகாதாலேகேட்டு *
புளிமயிரைக்கையிலேயெடுத்து கேமல்
பிரட்டனுடகூடாரம்நோக்கியேவந்து *
காயத்தைக்கண்ணாலேபார்த்து பிரட்டர்
காயமும்பட்டுதோவென்றுசொல்லிக்கேட்டு *
காயத்தைக்கையாலேதொட்டு கேமல்
கன்வளரும்புண்வாயில்புளிமயிரைவைத்து *
சிக்கிரமாய்கேமலுந்திரும்பி அப்போ
சிரானகூடாரஞ்சேர்ந்திட்டான்கேமல் *
(அப்போ) பிரட்டன்துரைக்குப்பட்டகாயம் அப்போ
புண்ணாகிப்பொல்லாததொந்தரவுண்டாச்சு *
மாராட்டமயக்கங்கள்கண்டு பிரட்டன்
மன்னவனிறந்தானேபனிரண்டுமணிக்கு *
பிரட்டன்துரையிறந்துபோனசேதி அப்போ
புண்ணியன்நபாபுதுரைகாதாலேகேட்டு *
பிரட்டன்துரைவிழுந்துபோனான் இனி
பிலனில்லைபாளையத்துக்கென்றெண்ணிமனதில் *
பாளையமிக்கேயிருக்கட்டும் நாளை
பயணமென்றுமம்முதலிசொன்னமாத்திரத்தில் *
தாண்டவராயபிள்ளைகேட்டு அப்போ
தயவாயமம்முதலிசமுகத்தில்வந்து *
ஆண்டவனேமம்முதலிதுரையே இப்போ
அன்பாகவொருவசனஞ்சொல்லுகிறேன்கேளு *
பதினெட்டுப்பாளையக்காரும் பிரட்டன்
பட்டாளம்பனிரண்டும்பசுமலையிலிருக்க *
முப்பதுபட்டாளத்துடனே இந்தே
முடிமன்னுகோட்டைவிட்டுவந்தீர்நபாபே *

காணைப்பிடியாமற்போனால் நம்மை
கண்டபடியேப்பார்கள்பாளையக்காரர் *
பின்றுசேதிருச்சினாப்பளிக்கு காணு
பாளையத்தைக்கூட்டியேவந்திடுவானென்றான் *
இதுசேதிமம்முதலிகேட்டு தனது
இருதயங்கலங்கியேநபாபுதுரையும் *
என்னசெய்யலாம்பிள்ளைமாரே என்று
ஈஸ்வரன்நபாபுதுரைகேட்டிட்டாரப்போ *
அப்போதாண்டவராயபிள்ளை பாதர்
அதிபதிநபாபுமுன்னேவந்திட்டுப்பார்த்து *
பாளையமும்நீருமிங்கேயிருந்து கொஞ்சம்
பாராட்டமாகவேசண்டைசெய்தீரானால் *
எண்ணியெட்டுநாளைக்குள்ளாக வெளியில்
இழுக்கிறேன்கான்சாய்பைப்பிடிக்கிறேனென்றான் *
இதுகேட்டுமம்முதலிசாய்பு பாதர்
இஞ்சினீர்கேமலைவரவழைக்கச்சொல்லி *
சும்மாயிருந்தோமேயானால் இந்த
திசைமதுரைசமஸ்தானம்பிடித்திடுவதெப்போ *
இதுசேதிகேட்டவுடன்கேமல் அப்போ
ஏழுபீரங்கியைமோர்ஜாமேலேற்றி *
மூட்டினான்பீரங்கிவேட்டு ரட்டைக்
கோபுரங்களிடிந்தப்போமட்டமாய்ப்போச்சு *
இதுகண்டுமதுரைதுரைகாணு அப்போ
இயலானதன்னுடையசிப்பாய்களைப்பார்த்து *
என்னென்றுநெருப்பாயெரித்தாலும் கேயு
லேறியல்லோதிசைமதுரைபிடிக்கவேணுமென்று *
பிரட்டனொருதலையிருக்குமட்டும் பாதர்
பிடிப்பானென்றெண்ணினோன்திசைமதுரைக்கோட்டை *
பிரட்டன்துரைவிழுந்துபோனானிப்போ என்று
பிரம்புகையிலெடுத்தானேகான்சாய்புநீலன் *
கத்திபடேசாய்புகையில்கொடுத்து துரை
கான்சாய்புஐந்துமொழிப்பிரம்புகையிலெடுத்து *
பொக்கிஷவீட்டைத்திறந்து காணு
புகழ்பெற்றவெள்ளிப்பாளமெடுத்துக்கொண்டுவந்து *



பாக்குப்போல்வெள்ளியையுருக்கி குண்டு
பாட்சாதிகான்துரைசீக்கிரமுடிந்து *
கானனுடசவுரியந்தன்னை குண்டில்
கண்டப்போயெழுதினான்கான்சாய்புநீலன் *
பணிரண்டுவருஷத்துக்குகுண்டு மருந்து
பட்டாகத்திகள்முதல்தயாராயிருக்க *
என்னுடனெதிர்த்துசண்டைசெய்ய உனைப்போல்
எழுபதுநபாபுகள்வந்தெதிர்த்தாலும் *
துலாயிரமதுரைநகர்க்கொம்பை அதிலே
ஒருகொம்பையாகிலுங்கொடுப்பேனோபாதர் *
வீணிலேஜனங்களுருளாமல் திரும்பி
மீண்டுபோவென்றெருபவித்தாதீர்த்திட்டான்கானன் *
கூடாரத்தருகாககுண்டு அப்போ
குழிவொன்றுவிழுந்ததைநபாபுதுரைகண்டு *
குண்டுகளையெடுக்கவரச்சொல்லி பாதர்
குழிவொன்றுமம்முதலிவாசித்துப்பார்த்து *
வேலிக்குநான்போட்டமுள்ளு இப்போ
காலுக்குப்பகையாகவந்ததேயெனக்கு *
பிள்ளையென்றுநினைத்திருந்தேன்கானை இப்போ
புலியாயெதிர்த்தானேகான்சாகிபென்று *
நாலுமுகம்பாளையத்தைவகுத்து சண்டை
நடத்தியேநபாபுதுரையிருக்கும்வேளையிலே *
கான்சாய்புஅடைகோட்டைதிறந்து அப்போ
கனமாகச்சேனைகளைவெளியிலேவிட்டான் *
சினிச்சிராய்வெளியில்வந்து அதிலே
ஸ்நானஞ்செய்துதலையாற்றிப்போகும்வேளையிலே *
தாண்டவராயபிள்ளைபார்த்து அப்போ
தந்திரமாய்ஆள்விட்டழைத்துவரச்சொல்லி *
திவாசுக்கம்பளியிலிருத்தி அப்போ
இடமானபேச்சுகளைச்சிலநேரம்பேசி *
முன்கைக்குத்தங்கக்காப்புமொனுசும் நல்ல
மோகனமாலையுடன்கெண்டியுந்தரித்து *
கருப்பூரமுந்துகொண்டைப்பாகை அப்போ
கனமானசினிச்சிராத்தலையில்தரித்து *

சுத்திப்பூஅங்கிகொடுத்து தளவன்
சொல்லுவான்சீனிச்சிராவ்முகத்தைநோக்கி
கான்சாய்பைநீபிடித்துக்கொடுத்தால் உனக்குக்
கனமானதிருநெல்வேலிப்பேட்டைதாரோன் *
திசைமதுரைதவுலத்துதாரோன் உனக்குத்
திருப்பூவனந்தானுக்காகையோட்டுத்தாரோன் *
எழுநூறுகுதிரைகள்தாரோன் உனக்கு
ஏழானையேழொட்டைதருகிறேனுனக்கு *
பத்தும்பத்தாதக்குச்சீனி எங்கள்
பள்ளிமடைக்கோட்டைதனைத்தருகிறேனுனக்கு *
இப்படிதாண்டவனுஞ்சொல்ல அப்போ
இன்பமாய்சீனிச்சிராவ் ஏதுசொல்வானும் *
இந்தமட்டும்நீகொடுத்தால்போதும் எட்டு
நாளைக்குள்கான்சாய்பைப்பிடித்துக்கொடுத்திடுவேன் *
அப்படியேதருகிறேனென்று தளவன்
ஐயனுக்குக்கைபோட்டுக்கொடுத்தமாத்திரத்தில் *
நல்லதென்றுசீனிச்சிராவெழுந்து வெளியில்
நடந்தப்போமதுராபுரிக்கோட்டைவந்துசேர்ந்தான் *
அரண்மனையில்சாதமுண்டுசீனி அப்போ
ஆசாரமேடையில்வந்தமர்ந்துக்கொண்டு *
சேருதனைவரவழைக்கச்சொல்லி சீனி
சீரான்முரசுவெள்ளைக்காரனையுமழைத்து *
மூன்றுபேருமாலோசனைசெய்து அப்போ
முடிமன்னன்சீனிச்சிராவேதுசொல்லுகிறான் *
சிங்கமேசேருந்தாகேளு ஒரு
சேதிநான்சீனிச்சிராவ்சொல்லுகிறேன்தம்பி *
இனிமேலேமம்முதலிசாய்பு வட்டக்கே
எப்போதும்போறதில்லைதுரைமகனேகேளு *
புணத்தாக்கொருவெற்றிலையுமில்லை இப்போ
குடிக்கவுங்கொட்டாங்கச்சித்தண்ணீருமில்லை *
நவ்வாண்டிருந்தாக்காலென்ன நமக்கு
இவ்வாண்டிருந்தாக்காலென்னடாதுரையே *
கானைப்பிடித்துக்கொடுத்தாக்கால் நமக்குக்
கனமானதிருநெல்வேலிச்சீமைதாரோமென்றார் *



திசைமதுரைதவுலத்துகொடுப்பார் நமக்குத்
திருப்பூவனக்கோட்டையுந்தாரோமென்றுசொன்னார் *
எழுநூறுகுதிரைதாரோமென்றார் நமக்கு
ஏழொட்டையேழானைதருகிறோமென்றார் *
பத்தும்பத்தாதுக்குதுரையே தனது
பள்ளிமடைதிருப்பூவனந்தாரோமென்றுசொன்னார் *
பிடிக்கவேணுங்கான்சாய்புதுரையை என்று
புண்ணியன்சீனிச்சிராவ்சொன்னமாத்திரத்தில் *
நல்லதென்றுமூன்றுபேருங்கூடி அப்போ
நாயகிநீறுட்சியம்மன்சந்நிதிக்குவந்து *
ஒருவருக்குஞ்சொல்லுகிறதில்லை என்று
உத்தமர்கள்மூவரும் கூறுதியாய்ப்பேசி *
கத்திபோட்டுச்சத்தியஞ்செய்து இவர்கள்
கனமாகமூவரும் அரமனைபோய்ச்சேர்ந்தார் *
ராஜபரமேஸ்பரியிருள் வோக
நாயகியுங்கானனுக்குமோசம்வந்ததென்று *
பார்ப்பாரப்பெண்போலமிருள் கானு
பாதகன்தலைமாட்டில்வந்துநின்றுகொண்டு *
உன்னுடையவுப்புதின்றுபோட்டு கானு
உந்தனுக்குரண்டகம்நினைத்திட்டாரப்பா *
இனிமேனும்மதுரையிலேயிருந்தால் நீ
இறந்துபோவாயடாகான்சாய்புதுரையே *
மலையாளம்போய்ச்சேருகானு என்று
மதுராபுரியிருளுஞ்சொல்லிநளப்போ *
பார்ப்பாரப்பேய்வந்துலவுண்டி நம்மைப்
பட்டியேயிட்டுதென்றுகான்சாய்புதுரையும் *
திடமொன்றுமுழித்தப்போபார்த்து கானு
சேதிதனையெவரோடுஞ்சொல்லாமலிருந்தான் *
கானனும்சொந்தபட்டாளத்தை அப்போ
கனமாகக்கோட்டையின்மேல்பாருவும்வைத்து *
சந்தோஷத்துடனிருக்கும்போது இவர்
தைரியமாகவேயோசனைவிசெய்து *
நால்கயிறுமேழுமயிறெடுத்து அப்போ
தொடிக்குள்ளேமூன்றுபேருமொன்றாகக்கூடி *

ஆலோசனையுறுதியாய்ப்பேசி இவர்கள்
அரண்மனைவாசலுக்குவரும்வேளைதனிலே *
அடைப்பக்காரபடேசாய்புகண்டு அப்போ
அதட்டியேநிறுத்திவிட்டுதலைவாசல்தனிலே *
ஏதடாசினிச்சிராவே இப்போ
இவ்விடத்தில்மூன்றுபேரும்வந்தவகையேது *
உத்தாரமில்லாமல்நீங்கள் இப்போ
உள்ளேவரவேண்டியதென்னவென்றுகேட்டு *
கான்சாய்புதுரையிடத்தில்வந்து அப்போ
கர்த்தனேசினிச்சிராவ்ரண்டுபேரைக்கூட்டி *
எம்துரைப்போலசாய்பு அவர்கள்
இப்போதேமூன்றுபேரும்வருகிறுரென்றுன் *
பார்ப்பானும்வந்தானேயானால் மூக்குப்
பொடிக்கவன்புகையிலைகேழ்க்கவருவாண்டா *
மூரக்வெள்ளைக்காரன்வந்தால் என்னை
நீனிக்குமாடுகேழ்க்கவருவாண்டாபோபோ *
சேருந்தன்வந்தானேயானால் நமக்குச்
சேதிசொல்லவருவாண்டா அவனுமேதம்பி *
வந்தாக்கால்வரட்டுமென்றுசொல்லி கானு
வகையாகபடேசாய்புக்குச்சொன்னுனப்போ *
இதுகேட்டுசினிச்சிராவும் நல்ல
இதமாகமூன்றுபேருடன்வந்துசேர்ந்து *
துரைமகனைச்சலாம்பண்ணிக்கொண்டு மூன்று
துரைமாருந்தயாராகப்பக்கத்திலிருந்தார் *
சேருந்தனந்தவேளையிலே பாளையத்தின்
செய்திகளைகானுக்குச்சொல்லினனப்போ *
பேச்சுமேல்கவனமாயிருந்து அப்போ
பூபாலன்மதுரைதுரைகேழ்க்கும்வேளையிலே *
பிறகாலேயிருந்தப்போசினி எட்டிப்
பிடித்திட்டான்கான்சாய்பைரண்டுகாக்கோர்த்து *
மூன்றுபேருஞ்சேர்ந்துப்பிடிக்க கானு
மோசம்வந்துநேர்ந்ததென்றுதறினமாத்திரத்தில் *
மூன்றுபேருங்கான்சாய்பைப்பிடித்து அப்போ
முடிமன்னனைமேஜைப்பல்கையினிறுக்கி



நாலுக்கயிற்றையவிழ்த்தெடுத்து அப்போ
நொடிக்குள்ளேகானனைச்சேர்த்திறுக்கிவிட்டார் *
என்னையேண்டாகட்டுகிறாய்சினி உனக்கு
என்னென்னமோசங்கள்செய்தனடாசினி *
ஒன்றுக்கும்பிடிக்கவில்லேதுரையே உம்மைச்
சம்பளப்பணத்துக்குநான்பிடித்துவைத்தேன் *
சம்பளத்தைக்கொடுத்தபிறகு உம்மைத்
தைரியமாயவிழ்த்துவிட்டு விடுகிறேனென்றுன் *
அப்போதுகான்சாய்புதுரையும் யாதர்
ஆண்பிள்ளையொருவசனமேதுசொல்வானும் *
மதுரைமன்னுள்ளவரைக்கும் உனக்கு
மாதச்சம்பளந்தாரேன்சினிச்சிராவென்று *
சொல்லச்சொல்லஇறுக்கிக்கட்டினதைப் பார்த்து
துரைகானுகோபமாயேதுசொல்லலுற்றுன் *
கட்டாதேதுரோகிப்பயலேசினி என்னை
கனத்துட்டம்புநோவுதேதள்ளாவேறயியே *
என்னுடையவுப்புத்தின்றுபோட்டு நீங்கள்
எனக்கேரண்டகம்நினைப்பீரோயானால் *
எங்கெங்கேபோனாலும்பாவி உங்களுக்
கிரண்டுகொடுப்பாரோசிக்கந்தர்சாய்பு *
சொல்லச்சொல்லயிறுக்கியிறுக்கிக் கட்டித்
துரைகானையறைவீட்டில்போட்டேயடைத்து *
யாருவும்பத்திரமாய்வைத்து சினி
பார்ப்பானுந்தயாராயிருக்கும்வேளையிலே *
மாசாவுமிதுசேதிகேட்டு கானு
மகாராஜனரண்மனைக்குவந்துநின்றுபார்த்து *
என்னடாசினிச்சிராவே இந்த
கூக்குரலேதென்றுகேட்டமாத்திரத்தில் *
ஒன்றுக்கும்பிடிக்கவில்லைதாயே அவனைச்
சம்பளப்பணத்துக்குநான்பிடித்துவைத்தேன் *
சம்பளப்பணக்கையில்கொடுத்தால் நமது
சாய்புதுரைகானனை விடுகிறேனென்றுன் *
நல்லதென்றுமாசா நடந்து அந்த
நாழிகையிலரண்மனைபோய்ச்சேர்ந்தமாத்திரத்தில் *

புறப்பட்டுசினிச்சிராய்வெளியில் வந்து
கானனுட்டபட்டாளம்நிற்பதைக்கண்டு *
மாற்றியேமறுபாருவைத்து உடனே
மன்னவனைப்பிடித்தேனென்றுகாயிதமெழுதி *
அனுப்பினான்பிள்ளைமார்க்கப்போ அதை
அன்பானபிள்ளைமாரிருபேரும்பார்த்து *
பிரித்தவர்கள்வாசித்துப்பார்த்து பாதர்
புண்ணியர்நபாபுக்குசங்கதியைச்சொல்லி *
கானைப்பிடித்ததுபொய்யென்று எழு
காலாள்களைவிட்டுப்பார்த்துவரச்சொல்ல *
கோட்டைக்குள்நுழைந்துபார்க்கும்போது அங்கே
குறிப்பாகயேனென்றுகேட்பாருமில்லை *
கான்சாய்பைப்பிடித்ததுமெய்யென்று வந்த
காலாள்களும்நபாபுமுன்வந்துசொல்ல *
தாமோதரம்பிள்ளைதனையழைத்து தனது
பட்டாளத்தைக்கூட்டியனுப்பினமாத்திரத்தில் *
மதுராபுரிக்கோட்டையைப்பிடித்து அப்போ
வளர்சொக்கர்மீனாக்ஷிதரிசனம்பண்ணி *
கோட்டையைப்பிடித்தமூன்றுநாள் பாதர்
குபீரென்றும்மம்முதலிதுரைவந்துசேர்ந்து *
அரண்மனைக்குமுத்திரைபோட்டு அந்த
மூலைக்கொத்தளத்தில்பாருவும்வைத்து *
கடைத்தெருவில்பாருவும்போட்டு நல்ல
கனமானமாசாவின் அரண்மனைக்கும்பாரு *
கான்சாய்புஅரண்மனைக்கும்பாரு வைத்துக்
கனமானமம்முதலிகோட்டைக்குள்ளிருந்தார் *
கோட்டைபிடித்தமூன்றுநாள் வெளியில்
கொண்டுவரச்சொல்லியேகான்சாய்புதுரையை *
ரெயில்வண்டிகொண்டுவரச்சொல்லி கானு
உத்தமத்துரைமகனைவண்டியின்மேலேற்றி *
வண்டிக்குக்கானனுட்டதுரைக்கும் கயிறு
உபணமாய்ச்சேர்த்தப்போசிக்கிரமிறங்கி *
கண்விழிகளிரண்டுந்தெரியாமல் கட்டிக்
கானுகைவிரண்டையும்பின்னேயேயிறக்கி *



எழுநூறுபேர்சுற்றிப்பாரு வைத்து
எச்சரிக்கைகான்சாய்புறந்தோடிப்போவான் *
ஜபர்தாரெச்சரிக்கையென்று சனங்கள்
கம்மியேகான்சாய்பைவெளியில்கொண்டுவந்து *
நபாபுதேவடிமுன்வந்து கானு
ராஜாதிபதிகட்டைச்சீக்கிரமவிழ்த்து *
கண்ணிரண்டுந்தெரியஅவிழ்த்து அப்போ
கைகட்டுங்கால்கட்டுஞ்சீக்கிரமவிழ்த்து *
நபாபைச்சலாம்பண்ணுகானு என்று
ராஜாதிபதிகளும்வாய்திறந்துசொன்னார் *
அப்போதுகான்சாய்புதுரையும் பாதர்
ஆண்பிள்ளைநபாபுமுகமேறிட்டுப்பார்த்து *
கச்சற்கருவர்டுவிற்கும்லெப்பே அதுக்கா
பயலேநீபோடாவண்ணத்திமகனே *
உன்கிட்டஅகப்பட்டேனேநானும் என்னை
மூன்றுநாளாய்வைத்திருக்கிறையேபாவி *
நானுனக்குஅகப்பட்டாப்போலே இப்போ
நபாப்துரைமகனேநீஅகப்பட்டையேயானால் *
தேங்காயும்உன்சதையுமறுத்துத் தின்னச்
சொல்லியடிப்பனடாகருவாட்டுலெப்பே *
அப்போதும்மம்முதலிசிரித்து நல்ல
ஆண்பிள்ளைகானனென்றுமனதிலேநினைத்து *
ஏழைவருந்தேங்களாச்சே கானு
இதமாகநீவந்தாயடாவந்துசேர்ந்து *
தேடியதிரவியங்களெல்லாம் இப்போ
எங்கேயென்றுகேட்டானேமம்முதலிதுரையும் *
என்னுடையருணந்தின்னசாய்பு இப்போ
என்னுடையபிள்ளைகளில்லையோநபாபே *
உன்னிடத்திற்சொல்லுகிறதென்ன என்று
ஒழுங்காகக்கேட்டானேகான்சாய்புதுரையும் *
மூன்றுநாளன்னம்புசியாமல் இப்படி
முனைவீரன்கான்சாய்புபேசுறானென்று *
சாதமுங்கொண்டுவரச்சொல்லி வெள்ளித்
தாம்பாளங்கொண்டுவந்துமுன்னேவைத்து *

செம்பினில்பால்கொண்டுவந்துவைத்து அப்பே
சீரானபதார்த்தவகைகொண்டுவரச்சொல்லி *
வெள்ளித்தாம்பாளத்தில்போட்டு அப்பே
விதமாககான்சாய்புமுன்னெடுத்துவைத்தார் *
அப்போதுகான்சாய்புநிலன் பாதர்
அன்னம்வைத்ததட்டைக்கண்ணாலேபார்த்து *
இடதுகாலாலுதைத்திட்டான் சாதம்
இதமாகமல்லிகைப்பூப்போலேசிதற *
திவாகமேல்சிதஞ்சிதற அப்போ
சிங்கம்நபாபுதிரையேறிட்டுப்பார்த்து
ஆலோசித்துதுரைமாரைப்பார்த்து இவனுக்கு
ஆக்கினையென்னமென்றுகேட்டார்நபாபு *
அப்போதுதுரைமாரெல்லாம் கூடி
ஆலோசனைசெய்துசாஸ்திரத்தைப்பார்த்து *
சாஸ்திரமுறையின்படியே அப்பே
சாய்புதுரைநபாபுக்குச்சொல்லலுற்றார் *
ஆக்கினையொன்றுமில்லதுரையே இவனை
சும்மாவிடச்சொல்லியிருக்குதென்றுசொன்னார் *
அப்போதும்மம்முதலிசாய்பு மனசில்
ஆயாசமாகியேகோபித்துக்கொண்டு *
ஆக்காமலிவனைநீங்கள்விட்டால் என்னைத்
தூக்குங்களென்றுசொல்லியெழுந்திருந்துபோனார் *
அப்போதுகான்சாய்பைப்பிடித்து நல்ல
அழகானவொயில்வண்டிமேலேற்றிவைத்து *
ஒற்றைதம்பட்டத்தையடித்து வண்டியை
ஒயிலாகப்பாளையத்தைச்சுற்றியேயிழுத்து *
பட்டமரமருகில்கொண்டுவந்து அப்போ
படைவீரர்கானனுக்குக்கழுத்தில்சுருக்கிட்டு *
ஏற்றியேமாமரந்தனிலே கானு
இளைப்புட்டுயாசமொன்றுமில்லாமல் *
இறுகிறென்றுமென்றுதாஞ்சுற்றி அப்போ
கீழேவிழுந்தானேகான்சாய்புதுகாயும் *
மறுதரமுஞ்சுருக்கிட்டுத்தூக்க கானு
மன்னவனும்ரண்டுவிசைகீழேவந்துவிழுந்தான் *



மூன்றுதரங்கட்டியேதூக்க அப்போ
முனைவீரன்கான்சாய்புவிழுந்திட்டான்கீழே *
அப்போதுகான்சாய்புதுகாயும் பாதர்
ஆண்பிள்ளைசிப்பாயிமுகம் ஏறிட்டுப்பார்த்து *
என்னையேண்டாவதைக்கிறீர்கள் நீங்கள் என்று
இயல்பாககானுஞ்சிப்பாய்களைப்பார்த்து *
மல்லியாளத்துபொம்மக்காகொடுத்த நல்ல
வச்சிரமணிநரிக்கொம்புசிமிழினிலடைத்து *
உச்சிப்பிடரிதன்னிலிருக்குதடா அதை
உபாயமாயெடுத்தெறிந்து தூக்குங்களென்றான் *
அப்போதுநரியிருல்குத்தி சிமிழை
அறுத்தெறிந்துகான்சாய்பைதூக்கிலேபோட்டார் *
ஏழுபேரைச்சுற்றிவைத்து பாதர்
சுல்தானபாட்சாதுரையிருக்கும்வேளையிலே *
பிடித்துக்கொடுத்தானேபார்ப்பான் அவனைப்
பின்கட்டாய்க்கட்டியங்கேகொண்டுவரச்சொல்லி *
சீனிச்சிராவேயொருசேதி இப்போ
சிங்கம்நபாபுதுரைசொல்லுகிறேன்கேளு *
அண்ணவிட்டோனைப்பிடித்துக்கொடுக்க உனக்கு
ஐந்துபஞ்சபூதமுந்தணித்துதோபாவி *
அவனுடையவுப்பைதீதின்று பாவி
அநியாயமாய்ப்பிடித்துக்கொடுக்கலாமோவென்றார் *
என்மேலேதோஷமில்லைசாய்பு என்னை
ஏமாத்தித்தாண்டவராயன்பிடித்துக்கரச்சொன்னான் *
இப்படிசீனிச்சிராவ்சொல்ல அப்போ
இயலானமம்முதலியிவனுடையகண்ணில் *
பச்சைக்கர்ப்பூரம்வைத்துக்கட்டும் என்று
பாட்சாநபாபுதுரைசிப்பாய்களுக்குச்சொன்னார் *
அவன்கண்ணில்பச்சைக்கர்ப்பூரம் கட்டி
ஆண்பிள்ளைநபாபுதுரையிருக்கும்வேளையிலே *
தூக்கிலேபோட்டமூன்றுநாள் கானு
துரைமகன்சிப்பாய்கள்சொற்பனந்தனிலே *
என்னுடையதங்கப்பிரம்பும் எனக்கு
மல்லியாளபொம்மக்காகொடுத்தமாணிக்கச்சொம்பும் *

மாசாவிடத்திலிருக்கிறதைவாங்கி வந்து
மாணிக்கச்சொம்புதண்ணீரைத்தெளித்து *
பிரம்பாலேதட்டிவிரோபானல் னக்கு
விட்டுநான்மேலேகுதிக்கிறேன்தம்பி *
எல்லோருமொன்றாகச்சேர்ந்து தம்பி
இக்ஷணமேமலையாளம்போய்ச்சேர்ந்திருந்து *
மறுமெட்டுநாளைக்குள்ளாக இந்த
மதுராபுரியலஸ்தானம்வாங்கி நான்தாரேன் *
இப்படிசொற்பனத்திற்காணு நல்ல
இயல்பாகச்சேதிகளைசொன்னமாத்திரத்தில் *
பாருக்காரர்கண்ணயர்ந்து அப்போ
பாட்சாநபாபிடத்தில்வந்துசொன்னார்கள் *
இன்னமுமிருக்கிறதோகாணு அவனை
இப்போதேயிறக்கிவிடுமென்றுசொன்னார்சாய்பு *
கண்டுவிரல்தானறுத்துப்பார்த்தார் ரக்கு
சுறுக்காகப்புறப்பட்டேநபாபுதுரைபார்த்து *
கழுத்திலேபறங்கிச்சுருக்கிவைத்து மதுரைக்
கான்சாய்ப்பிரசினைச்சிக்கிரமறுத்து *
கால்கையைத்துண்டுதுண்டாயறுத்து மதுரைக்
கான்சாய்பைநாலுதுண்டாகவேவெட்டி *
நத்தத்திலொருகையைவைத்து அப்போ
நலங்கொண்டதிண்டிக்கல்லிலொருகாலைவைத்து *
இப்படிநாலுமுகம்வைத்து அப்போ
ஈஸ்பாணபாபுதுரைகூடாரம்வந்து *
சந்தோஷமாகிநபாபு அப்போ
சலுதியாயிருபிள்ளைமார்களையழைத்து *
ஆரோபிள்ளைதாண்டவராயா நீ
அன்றுசொன்னகிராமத்தைத்தருவையோவென்றார் *
அப்போதுதாண்டவராய பிள்ளை
அகமகிழ்ந்துநபாபையேறிட்டுப்பார்த்து *
சோழவாமென்றுவுரை உமக்குத்
தோரணச்சீட்டெழுதித்தந்திட்டேனென்றான் *
முறிசீட்டைக்கையிலேவாங்கி அப்போ
முன்னவீரன்மம்முதலிசந்தோஷப்பட்டு *



திருச்சிறுப்பளிக்குநான்போறேன் நீங்கள்
சீக்கிரமாயரண்மனைபோய்சேருங்களென்று *
பிள்ளைமார்க்குப்புத்திமதிசொல்லி அப்போ
புகழ்பெற்றசேனைகளையொன்றாகக்கூட்டி *
மதுரைக்குத்தைருத்துவைத்து பாதர்
மம்முதலிபாளையத்தைவடக்குமுகந்திருப்பி *
திருச்சிறுப்பளிக்குநபாபு போய்ச்
சேர்ந்தபின்முல்லைமணித்தாண்டவராயன் *
மாசாவினரண்மனைக்குச்சென்று அந்த
மங்கையைத்தாண்டவனுமேறிட்டுப்பார்த்து *
தங்கச்சிமாசாவேகேளு உனது
தலைவிதியிப்படிமுடிந்ததுதாயே *
ஒன்றுக்குமஞ்சாதேதங்காய் உனக்
கொன்றுங்குறையில்லைநானிருக்கும்வரைக்கு *
இருப்பூவனம்வாருமம்மாவென்று அப்போ
தேறுதலையாகவேதாண்டவனுஞ்சொல்ல *
அப்போதுமாசாவுமகிழ்ந்து அண்ணே
அன்பாகவொருவசனஞ்சொல்லுகிறேன்கேளு *
மலையாளம்நான்போறேனண்ணே நீ
மனதிலேகவலைவைக்கவேண்டாமென்றுசொல்லி *
மைந்தனைக்கையோடேயழைத்து அப்போ
மதுரைவிட்டுமலையாளம்நடந்திட்டாள்மாசா *
மாசாவும்நடந்தபிற்பாடு நல்ல
மகிழ்ச்சியாய்ப்பிள்ளைமார்பாளையத்தைக்கூட்டி *
கிழக்குமுகமாகவேநடந்து அப்போ
சிங்காசனதிருப்பதிசிவகங்கைசேர்ந்து *
முத்துவடுகனையரைக்கண்டு நல்ல
முன்னாவீரர்சந்தோஷச்செய்திகளைச்சொல்லி *

கான்சாய்புபயம்போச்சுதென்று
களிப்புடனேபிள்ளைமாரான்மனைபோய்ச்சேர்ந்தார்
கான்சாய்புகதைதன்னைப்படிக்க
கர்மவினையகன்றுகாதவழியோட
மாதமும்மாரிமழைபொழிய
மண்டலத்தில்மன்னவர்கள்செங்கோல்தழைக்க
நேசமுடன்கான்சாய்புகதையை
நீணிலந்தன்னிலேநித்தம்படிப்போர்
தேசமதிலதிகநாளிருந்து
சீமானெனப்பெருகிச்செல்வந்தழைக்க
பாண்டியன்மகள்மீனாளைப்போல
பாக்கியமென்மேலும்பெருகியுண்டாக
திருப்பதிமலைரங்கர்வாழி
சீதாபிராட்டியுடனமையவரும்வாழி
தென்மதுரைச்சொக்கையர்வாழி
தேவிமீனாள்கயற்கண்ணியும்வாழி
மயிலேறும்வேல்முருகர்வாழி
வள்ளிதெய்வானையுடன்மலர்மகளும்வாழி

## கான்சாயபுசண்டை.

என்னும்

## கான்மகாராஜன்சண்டை

முற்றுப்பெற்றது.